Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 263 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 31, வெள்ளி 16.08.2013

## லக்ஸபான மின்சாரம் இன்று சுன்னாகத்துக்கு

### கிளிநொச்சியிலிருந்து பரீட்சார்த்த முயற்சி

யாழ்ப்பாணம், ஓக.16
132 கிலோ வோல்ட் அதி உயர் அழுத்த மின்மார்க்கம் ஊடாக லக்ஸபான மின்சாரம் கிளிநொச்சியிலிருந்து சுன்னாகத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் பரீட்சார்த்தமாக வழங்கப்படவுள்ளது.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் குடாநாட்டின் பெரும்பாலான இடங்களுக்கு 24 மணி நேர மின் விநியோகம் தடையின்றி மேற்கொள்ளப்படும் என்று இலங்கை மின்சார சபையின் வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பிரதேச பணிமனையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
1990 ஆம் ஆண்டு தடைப்பட்ட லக்ஸபான மின் விநியோகமே இன்று யாழ். மாவட்டத்துக்

தொடர்ச்சி: பக்கம் 21




வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடுத் திருத்தலத்தில் வருடாந்தப் பெருவிழா நேற்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இதில் ஆயர்கள், குருக்கள் உட்பட சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் இன, மத வேறுபாடின்றிக் கலந்துகொண்டனர். (த)

கச்சதீவில் உள்ள உரிமையை நாங்கள் நிலை நாட்டுவோம் 06

அடக்குமுறை கட்டவிழ்ப்பு இராணுவம் துப்பாக்கிச் சூடு: எகிப்தில் 327 பேர் சாவு 07

உதயசூரியன் இறுதிக்குத் தகுதி 22

# வடக்கு தேர்தலை நீதியாக நடத்துக

## இலங்கையிடம் வலியுறுத்தியது இந்தியா

கொழும்பு,ஓக 16
வடக்கு மாகாணசபைத் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும், நம்பகமான முறையிலும் நடத்தப்படவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தினத்தை யொட்டி, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் யஸ்வர்த்தன் குமார் சின்ஹா வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதநேய உதவிகளை இந்தியா வழங்கி வந்துள்ளது. அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைகள், சேம



நலன்கள் அலட்சியப் படுத்தப் படக்கூடாது என்பதிலும் இந்தியா கவனமாக உள்ளது என்று தூதுவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.
இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும் என்றும்,13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்துவதற்கான அரசியல் யோசனைகள் தொடர்பாக நம்ப கரமான பேச்சுக்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆக்கபூர்வமாக வழிவகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.
நிலையான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதாக, இந்தியாவுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அளித்த உறுப்பாட்டை இலங்கை அரசு காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
சமத்துவம், நீதி, கௌரவம், சுயமரியாதையுடன் கூடிய அர்த்தமுடைய அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதன் மூலமே, இலங்கையில் உள்ள தமிழர்கள் உள்ளிட்ட எல்லா குடிமக்களும் சம பங்காளராக வாழ முடியும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது என அவர் மேலும் கூறியுள்ளார்.
போரின் முடிவு, எல்லா சமூகங்களும் இலங்கையில் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்கான இணையற்ற வாய்ப்பை வழங்கியுள்ளது என்றும் தூதுவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (த)

## தம்புள்ளையில் பத்திரகாளி கோவிலை அகற்ற முயற்சி

கொழும்பு,ஓக 16
தம்புள்ளை, கண்டலம சந்தியிலுள்ள மகா பத்திரகாளி கோவிலை அகற்றுவதற்கான முயற்சிகள் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளன என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் குற்றம் சாட்டியுள்ளார். இவ்வாறன செயற்பாடுகளை அரசு கவனத்தில் எடுக்காமல் இருக்குமானால் கடும் பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தக் கோவிலின் சிலையை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 31 வருடங்களாக இயங்கி வந்த இந்தக் கோவிலில் இறுதி 13 வருடங்கள் தேர்த் திருவிழாவும் இடம்பெற்று வந்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 21

## இதுவரை 92 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 16
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் இதுவரை 92 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. இதில் குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
தேர்தல்கள் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் மத்திய நிலையத்துக்கு அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குருநாகல் மாவட்டத்தில் 23 முறைப்பாடுகளும், மாத்தளையில் 16 முறைப்பாடுகளும், கண்டியில் 11 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றை விட வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகமாக 8 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள் என. (த-400)

## வாக்காளர் விவரம் எதனையும் படைகளுக்கு வழங்க வேண்டாம்

### முல்லைத்தீவு தேர்தல் ஆணையாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.16
"வாக்காளர் தொடர்பான எந்தவொரு விவரங்களையும் கிராம அலுவலர்கள் படையினருக்கு வழங்க வேண்டாம். விவரங்களை வழங்குமாறு படையினர் நிர்ப்பந்தித்தால் அது தொடர்பில் எனக்கு அறிவியுங்கள் அல்லது அவர்களை என்னுடன் பேசச் சொல்லுங்கள்."
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் நாலக்கரத் நாயக்க கிராம அலுவலர்களுக்குப் பணித்துள்ளார்.
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடலின் போதே உதவித் தேர்தல் ஆணையாளர் இவ்வாறு பணித்துள்ளார்.
தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று

தொடர்ச்சி: பக்கம் 21

## நீதித்துறை அதிகாரிகளை சந்திக்கிறார் நவிப்பிள்ளை

யாழ்ப்பாணம், ஓக.16
இந்த மாதம் இலங்கைக்கு வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை நீதித்துறையின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையின் நீதித்துறை பற்றிக் கலந்துரையாடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த மாதம் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை நீதித்துறையின் சிரேஷ்ட அதிகாரிகள், மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான தேசிய செயற்றிட்டக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோரையும் நவநீதம்பிள்ளை சந்திக்கிறார். (த-ப)

### கோத்தாவும் சந்திப்பார்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனபடைகளின் பிரதானி ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பின்போது நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தொடர்பில் நவநீதம்பிள்ளைக்குப் பாதுகாப்புச் செயலர் தெளிவுபடுத்துவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ்.மாநகர சபையின் பதவிக் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.16
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சிக்காலம் மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் இந்தக் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.
யாழ். மாநகரசபையின்

தொடர்ச்சி: பக்கம் 21

அதிசயம்!
ஆனால் உண்மை
உதயன் வாசகர்களே!
செப்ரெம்பர் முதலாம் திகதிவரை கூட
நீங்கள் பொறுத்திருக்கவேண்டாம்.
ஆவணி முதல் நாளான நாளை முதல் எதிர்பாருங்கள்

## தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், ஒக.16
வடமாகாண சபை தேர்தலில் போட்டியிடும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் விசேட விடுமுறை வழங்குமாறு வடமாகாண தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.
அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர் ஆகியோரின் பெயர்களையும் சபையில் அவர் வகிக்கும் பதவி, கட்சியின் பெயர் ஆகிய விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு வடமாகாண உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.அச்சுதன் சகல உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (த-9)

# புலனாய்வுப்பிரிவுக்கு 'டிமிக்கி' விட்டு லண்டனுக்குச் சென்ற பேராசிரியர்கள்

## நாடு திரும்பியதும் கைதாவரா?

கொழும்பு,ஒக 16
இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவது தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்க, நாடு கடந்த தமிழீழ அரசின் அழைப்பின் பேரில், லண்டன் சென்றுள்ளதாக, இலங்கை அரசு குற்றம்சாட்டியுள்ள நான்கு பல்கலைக்கழக பேராசிரியர்களும், நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார்கள் என்று தெரியவருகிறது.
ஊவா வெல்லஸ, பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நான்கு பேராசிரியர்கள் நாடு கடந்த தமிழீழ அரசின் அழைப்பின் பேரில் லண்டன் சென்றுள்ளதாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அரச புலனாய்வுச் சேவை அறிக்கை சமர்ப்பித்திருந்தது.
ஆராய்ச்சிக்காக ஒகஸ்ட் 12 தொடக்கம் 20 வரை விடுமுறை பெற்றுக்கொண்டு இவர்கள் லண்டன் சென்றுள்ளதாக படைகளின் பிரதானி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.
லண்டன் தகவல்களைஆராய்ந்து, இவர்களை நாட்டை விட்டுப் புறப்பட முன்னர் கைது செய்ய அரச புலனாய்வுச் சேவை முயற்சித்ததாகவும், அதற்கு முன்னரே அவர்கள் நாட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இவர்கள் குறித்த தகவலைப் பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகம், கொழும்பிலுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கியுள்ளது.
இதையடுத்து நான்கு பேராசிரியர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் சிங்களப் பேராசிரியராவார். அதேவேளை அவர்கள் பற்றிய விபரங்களை இலங்கை அரசு வெளியிடவில்லை.
இந்தநிலையில், லண்டன் சென்றுள்ள நான்கு பேராசிரியர்களும் நாடு திரும்பியதும் அரச புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்படுவார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
பேராசிரியர்கள் நால்வரும் நாடு திரும்பியதும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை, ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய உறுதிப்படுத்தியுள்ளார்.
இதற்கிடையே, லண்டனில் நடக்கும் நிகழ்வில் பங்கேற்கும்படி, இலங்கையில் உள்ள 12 பேராசிரியர்களுக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அழைப்பு விடுத்ததாக இராணுவப் புலனாய்வுப்பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. (த)

## கொட்டியா சுனில் கைது



கொழும்பு,ஒக 16
வெள்ளவத்தை, ரொக்சி வத்தைக்கு அண்மையில் வைத்து கொட்டியா சுனில் என்றழைக்கப்படும் போதைப் பொருள் விற்பனை செய்பவரை பொலிஸார் நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.
கைது செய்யும் போது அவரிடம் 33 பக்கற்றுகள் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளன.
போதைப் பொருள்களைத் தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுக் கடந்த ஜுன் மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்ட 28 வயதான ரனிஷா என்பவர் கொட்டியா சுனிலின் தங்கை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## வாகனப் பாதுகாப்புக் கட்டணம் நல்லூர் ஆலயத்தில் குறைப்பு

யாழ்ப்பாணம், ஒக.16
நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவத்தையொட்டி யாழ். மாநகரசபையால் அனுமதிக்கப்பட்ட வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் வாகன பாதுகாப்புக்கான கட்டணம் உடனடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.
இதன்படி சைக்கிள் ஒன்றுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும் கட்டணமாக அறவிட யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.
தலைக் கவசங்களின் பாதுகாப்பு 5 ரூபா கட்டணமாக அறிவிடப்படுகின்றமை குறித்து ஆணையாளரிடம் கேட்டபோது, அது குறித்து சட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை. அதனால் அது தொடர்பில் தாம் நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் ஆணையாளர் கூறி னார். (த-7)




"பொதுமக்களே! இவர்கள் போன்ற திருடர்களின் கைவரிசையில் இருந்து உங்கள் பணம், நகைகள் மற்றும் பொருள்கள் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்து பெண்கள் சிலரின் படங்கள் தாங்கிய சுவரொட்டிகள் நல்லூர் ஆலயச் சூழலில் ஒட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவினராலேயே இவை ஒட்டப்பட்டுள்ளன.(த-வ)

## காணாமற்போன சிறுவன் புதன் இரவு பிடிபட்டான்

தென்மராட்சி, ஒக. 16
அரியாலை சான்று பெற்ற பாடசாலையிலிருந்து காணாமல் போன சிறுவனை சாவகச்சேரி பொலிஸார் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினார்.
கடந்த முதலாம் திகதி வரணிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகக் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் இந்தச் சிறுவனை முற்படுத்திய போது அரியாலையில் உள்ள சான்று பெற்ற பாடசாலையில் ஒப்படைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.
கடந்த செவ்வாய்க்கிழமை இரவு படுக்கைக்குச் சென்ற சிறுவனைக் காணவில்லை என பாடசாலை நிர்வாகத்தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இது குறித்துப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.
இந்தச் சிறுவன் பாடசாலையின் கூரை சீற்றுக்குள் மறைந்திருந்துவிட்டு இரவு இறங்கிய வேளையில் பிடிக்கப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.
தொடர்ந்தும் அவனை அதே பாடசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)

## எரிபொருள் நிலையத்தில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக. 16
நீர்வேலிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கோப்பாய் எரிபொருள் விற்பனை நிலையத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அத்துடன் அப்பகுதியில் உள்ள இரண்டு ஆலயங்களிலும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.
இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.
கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள நீர்வேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்தின் முன்பக்கக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பாதுகாப்புப் பெட்டகத்தைத் தூக்கிச் சென்றுள்ளனர். அதற்குள் 10 ஆயிரம் ரூபா வரையான பணமே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை கோப்பாய் மகிழடி வைரவர் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது. அத்துடன் கோப்பாய் முத்துமாரி அம்மன ஆலயத்தில் மூலஸ்தானக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. விக்கிரகத்தின் கீழ் இருந்த இயந்திரத் தகடும் களவாடப்பட்டுள்ளது.
கல்வியங்காட்டில் உள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்தின் முன்பக்கக் கண்ணாடியை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு எதுவும் கிடைக்காமையால் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.
இந்த எரிபொருள் விற்பனை முகாமையாளரின் பணப்பை அண்மையில் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## அமெரிக்க அதிகாரிகளுடன் சம்பந்தன் ரகசியச் சந்திப்பு

கொழும்பு,ஒக 16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
கனடா சென்றிருந்த இரா. சம்பந்தனும், சுமந்திரனும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்க அனுமதி கோரியதாகவும், இதையடுத்து, கடந்த திங்கட்கிழமை அவர்களுக்குச் சந்திப்புக்கான நேரம் ஒதுக்கப்பட்டதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
ஆனால் அவர்கள் அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தில் யாரைச் சந்தித்துப் பேசினர் என்ற விபரம் தெரியவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்ததாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக, அமெரிக்கா அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் அந்த நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## செப்ரெம்பருக்குப் பின்னரே தீவுப் பகுதிக்கு தொடர் மின்

யாழ்ப்பாணம், ஒக.16
யாழ்.குடாநாட்டின் தீவுப் பகுதிகளான அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னரே 24 மணிநேர மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.
நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நயினாதீவு மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கு தற்போது 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படுகின்றது. அந்தப் பகுதி மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கு அமைய அந்தப் பகுதிக்கு மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.
அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்கு குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. செப்ரெம்பருக்குப் பின்னர் அவர்களுக்குத் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படும்-என்றார். (த-4)

# அங்கர் நிறுவனத்தின் விளக்கம்

கொழும்பு. ஒக. 16
பென்டேரா நிறுவனத்தின் 'அங்கர்' பால் மா தயாரிப்புக்கள் அனைத்தும் சந்தையில் தடைசெய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளது அந்த நிறுவனம்.
சந்தைக்கு விடப்பட்ட இரண்டு தொகுதி பால் மா பக்கெட்டுக்களை மட்டுமே திரும்பப் பெறுமாறு சுகாதாரத் துறை அமைச்சால் கேட்கப்பட்டது என்று அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.
"தொழில்துறை தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தால் சோதனை செய்யப்பட்ட 'அங்கர்' தொகுதிகளை மட்டுமே சந்தையில் இருந்து விலக்கிக் கொள்ளுமாறு சுகாதாரத்துறை அமைச்சு எம்மைக் கேட்டிருந்தது" என்று பென்டேரா நிறுவனத்தின் இலங்கைக்கான நிர்வாகப் பணிப்பாளர் லியோன் கிளமென்ட் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.
அதேசமயத்தில் சுயாதீனமான, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சோதனைக் கூடங்களில் செய்யப்பட்ட 202 சோதனையில் பென்டேராவின் தயாரிப்புக்களில் டிசிடி நச்சுப் பதார்த்தம் இல்லை என்று கண்டறியப்பட்டபோதும்கூட அமைச்சின் நெறிப்படுத்தலை ஏற்று சந்தையில் இருந்து இரு தொகுதி அங்கர் பால்மா பைக்கட்டுக்களையும் தமது நிறுவனம் திரும்பப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.
அங்கர் 400 கிராம் பெட்டிகளில் 0605C0883 இலக்க தொகுதியும் அங்கர் வன் பிளஸ் 400 கிராம் பெட்டிகளில் 107610163 இலக்க தொகுதியுமே நாடு முழுவதும் உள்ள சந்தைகளில் இருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் பென்டேரா அறிவித்துள்ளது.

# பண்பாட்டை அழித்துவிட்டு தமிழருக்கு சேலை வழங்குவதற்கு இவர்கள் யார்?

## வேட்பாளர் கஜதீபன் கர்ச்சிப்பு; சுயலாப அரசியல் நடத்துகிறார்கள் என எதிரணி மீது சீற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 16



எமது மக்களின் பண்பாட்டு கலாசாரங்களை அழித்து சாம்பராக்கிய அரசுடன் இணைந்து ஆட்சிப்பீடத்திலுள்ள கட்சி வேட்பாளர்கள் இன்று எமது மக்களுக்குச் சேலை வழங்குகின்றார்கள். யாருக்குத் தேவை இவர்களின் சேலைகள்?

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும் வடமாகாணசபை வேட்பாளருமாகிய பா.கஜதீபன்.

வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் ஏழாலையில் நடைபெற்ற தோதல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுக்கு வாக்களித்தால் பலாலியில் மக்களை மீளக் குடியமர்த்துவோம் என்று கூச் சலிடுகிறார்கள் அரச கட்சி யில் போட்டியிடுபவர்கள். தமக்கு தேர்தல் காலங்களில் வாக்கு களைப் பெறுவதற்காகவா இவர்கள் மீள்குடியேற்றத்தை செய்யாமல் வைத்துள்ளார்கள்? மக்களின் இடப்பெயர்வின் வலியை தங்களுக்கான சுயலாப அரசியலுக்காக பயன்படுத்த முனைகின்றனர்.

இவர்களால் எமது இனத்துக்கு ஒருபோதும் விடிவு ஏற்படப்போவதில்லை. இவர்களுக்கு மக்கள் தங்கள் வாக்கு ஆயுதத்தினால் சரியானபாடம்புகட்ட வேண்டும். எமது மக்களுடன் தொடாபில்லாதவர்கள், மக்களின் அத்தியாவசிய தேவைகளை சற்றும் இனங்காணாதவர்கள் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் புதிதாக முளைத்துள்ளார்கள். இவாகளுக்கு மக்களின் பிரச்சினை பற்றி என்ன தெரியும்? மக்களோடு மக்களாக இந்தப் பிரதேசத்திலே வாழ்ந்தவர்கள் நாங்கள் மட்டுமே. எமது மக்களின் பிரச்சினையில் நாம் தான் பங்கெடுத்துள்ளோம்.

இவர்கள் தேர்தலை ஒட்டி இங்கு வந்து ஆயிரம் மலசல கூடம் தருகிறோம் என்றும் வேலை வாய்ப்பு பெற்றுத் தருகின்றோம் என்றும் கூறுகி றார்கள். இவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு என்றைக்கும் எமது மக்கள் ஏமாறமாட்டார்கள்.

ஈழத் தமிழர்கள் தன்மானமுள்ளவர்கள். அவர்கள் எந்தக் காலத்திலும் சலுகைகளுக்கும் பசப்புவார்த்தைகளுக்கும்விலை போகமாட்டார்கள்.

எமது மக்கள் அனைவரும் இந்த மாகாண சபைத் தோதலில் ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆச னங்களால் எம்மைப் பெரு வெற்றியீட்ட வைக்கவேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களான கௌரிகாந்தன், ஜோன் ஜிப்ஷிக்கோ, யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலருமான தர்ஷானந்த் ஆகியோர் உரையாற்றினர். (உ-5)

## முள்ளிவாய்க்காலைவிடப் பெரிய தோல்விக்குள் தள்ளிவிடாதீர்கள்

### வேட்பாளர் இந்திரராசா தெரிவிப்பு

வடமாகாண சபைத் தேர்த லில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு தோற்குமானால் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட தோல்வியை விட எமது மக்கள் மிகப் பெரிய தோல் வியை சந்திக்க நேரிடும். எனவே தமிழ் மக்கள் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு, வாக்களித்து மிகப் பெரும்பான்மை ஆசனங்களுடன் தமிழ் மக்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

கூட்டமைப்பின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும்வேட்பாளர் வவுனியாவடக்கு கல்வி வலயத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இந்திரராசா இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா உக்கிளாங்குளத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வேட்பாளர் இதனைத் தெரிவித் தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண சபைத் தேர்தலை சர்வதேச சமூகமே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது. 1947 முதல் இன்று வரை நடைபெற்ற தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தமது உரிமைக்கு முன்னுரிமை கொடுத்தார்களே ஒழிய சலு கைக்கு அல்ல என்பதனை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. வயிற்றுப் பிழைப்பிற்காகவும், பதவி சுகபோகங்களுக்காகவும் சோரம் போகும் அரசியல் வாதிகளுக்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும்.

சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் தேர்தலுக்கு கொடுக்கும் அக்கறை தமிழ் மக்கள் மத்தியில் இல்லாதிருப்பது கவலைக் குரியதாகும். ஜனநாயக உரி மையான வாக்களிக்கும் உரி மையை சகல மக்களும் சரி யாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

மக்கள் அரசியலிருந்து ஒதுங்கியிருக்க முடி யாது.

அவ்வாறு ஒதுங்கி இருந்தால் நாங்கள் யாவரும் அநா தைகள் ஆகிவிடுவோம்.

இதனை உணர்ந்து சகல தமிழ் மக்களும் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பிற்கு வாக்க ளித்து மிகப் பெரும்பான்மை ஆசனத்துடன் வெற்றிபெறச் செய்ய வேண்டும்- என்றார். (எ-422)

## அத்துமீறும் அரச தரப்பு


தென்மராட்சி, ஒக.16

சாவகச்சேரியில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகளை சாவகச்சேரி நகரசபையினர் நகரை அழகு படுத்தும் நோக்கில் கடந்தவாரம் அகற்றியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அரசி யல் கட்சி வேட்பாளரின் சுவரொட்டிகள் சாவகச் சேரி பஸ் நிலையத்தில் ஒட்டப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு சுவரொட்டிகள் ஒட்டு வதை தடுக்க முற்பட்ட நகரசபை பாதுகாப்பு உத்தி யோகத்தர்களை அச்சுறுத்தியதுடன் பஸ் நிலைய வளாகம், நவீன சந்தை ஆகிய இடங்களில் பெரு மளவு சுவரொட்டிகள் ஒட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

நகரை அழகுபடுத்தும் வகையில் காணப்படும் கட்டடங்களை அலங்கோலப்படுத்தும் விதத்தில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாகவும் அவை தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல் என்பதால் யாழ்ப்பாணம் உதவித் தேர்தல்கள் ஆணையாளர், யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு 'பக்ஸ்' மூலம் அறிவித்துள்ளதாகவும் நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ)



சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் ஒட்டப்பட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் சுவரொட்டிகள்

## வடக்கை சிங்கப்பூராக்கப் போவதாக கூறும் ஈ.பி.டி.பி. யாழ். நகரை முதலில் அப்படி மாற்றியிருக்கலாமே

### கூட்டமைப்பு வேட்பாளர் பரஞ்சோதி அடிக்கிறார் கிண்டல்

அச்சுவேலி, ஒக. 16

"வடக்கு மாகாண சபையை கைப்பற்றுவதன் மூலம் வட பகுதியை குறுகிய கால அவகாசத்தில் சிங்கப்பூராக மாற்றப் போவதாகக் கூறும் ஈ.பி.டி.பி. தம் வசம் உள்ள யாழ். மாநகர சபை பிர தேசத்தில் அதனை நிறைவேற்றி முன்மாதிரியாக காண்பித்திருக்கலாமே?"

இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார் வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் யாழ். மாநகர சபை உறுப்பினர் அரியகுட்டி பரஞ்சோதி.

> வயிற்றுப் பிழைப்பிற்காகவும், பதவி சுகபோகங்களுக்காகவும் சோரம் போகும் அரசியல் வாதிகளுக்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் பாடம் புகட்ட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகம் யாழ். ஆவரங்காலில் திறந்து வைக்கப்பட்டது. கோப்பாய் தமிழரசுக் கட்சி கிளையின் தலைவர் கே.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வேட்பாளர் பரஞ்சோதி கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாநகர சபையில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பாக உரிய வேளையில் மாநகர சபைக் கூட்டத்தில் கருத்து முன் வைத்ததோடு அது தொடர்பாக தெரிவிக்க வேண்டிய சகல தரப் பினருக்கும் தெரியப்படுத்தியுள் ளோம்.

யாழ். மாநகர சபை தொடர்பான உள்ளக நிலை வெளிவரும் போது மக்கள் அவர்களின் உண்மை வேசத்தை கண்டுகொள்வார்கள்.

மாநகர சபை நிர்வாகத்தில் இத்தகைய ஊழல் என்றால் மாகாண நிர் வாகத்தை பொறுப்பேற்றால் ஏது நிகழும் சொல்லவும் வேண்டுமோ?

தமிழ் மக்களின் உரிமைப் போராட் டத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஒரு முக்கிய மான களம். அதனை உரிய முறையில் பயன் படுத்தி அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும் - என்றார். (எ-11)

## காணி, பொலிஸ் அதிகாரங்களை விக்கி குழு தானாகவே பெறும்

### மஹிந்த தரத் தேவையில்லை என்கிறார் வேட்பாளர் சிவஞானம்

யாழ்ப்பாணம் ஒக. 16

"வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியவுடன் சி.வி.விக்கி னேஸ்வரன் தலைமையிலான குழு காணி, பொலிஸ் அதிகாரங்களை தானாகப் பெறும். அதனை மஹிந்த அரசு வழங்க வேண்டிய அவசியமில்லை."

இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட் பாளர் சி.வி.கே.சிவஞானம்.

நாட்டில் சட்டம், நீதி, நிர்வா கத்தை சிறந்த முறையில் செயற்படுத்தி வடக்கு மாகாண சபையின் மூலம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வோம் என்று வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட் டியிடும் வேட்பாளரான அவர் கூறினார்.

வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரை தமிழரசுக் கட்சியின் ஆவரங்கால் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வேட் பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

போர் முடிந்து விட்டதாக ஜனா திபதி அடிக்கடி நினைவுபடுத்துகின்றார். ஆனால் வடக்கு மாகாணத்தில் 10 வீத அபி விருத்தி கூட இடம்பெறவில்லை.



வடமாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. ஒவ்வொரு சபைகளிலும் 300 முதல் 350 வரையான வீதி கள் உள்ளன. இதில் 5 வீத மான வீதிகள்கூட கடந்த 30 வருட காலத்தில் புனரமைப்பு செய்யப்படவில்லை. போர் முடிந்த நான்கு ஆண்டுகளிலும் கூட அது இடம்பெறவில்லை. எமது பிரதேச அபிவிருத்தி பின்னோக்கியே செல்கின்றது.

இன்று தமிழர் மனங்களில் மாறாத போர் வடுக்களும், அழிக்கப்பட்ட உயிர்களின் எண்ணங்களுமே மிகையாக உள் ளன. இந்த நிலைமையை மாற்றி அபிவிருத்தி சூழலுக் குள் இட்டுச் செல்ல தயாராகுகின்றார் நீதியரசர் சி.வி.விக்கி னேஸ்வரன். காணி- பொலிஸ் அதிகாரம் சம் பந்தப்பட்ட விடயம் வலு வேறாக்கத்துக்கு உட்பட்ட சட்டத்தின் முன் எழுதப்பட்ட விடயம். இதனை யாராவது தடுக்க முற்பட்டால் தடுக்க முற் படுபவர்கள் சட்டத்தின்முன் கொண்டு செல்லப்படுவர்.

வடக்கு மாகாணத்தில் காணி, பொலிஸ் அதிகாரத் துடன் கூடிய வலு வேறாக்க அரசினை நீங்கள் பார்[illegible] காலம் [illegible]. தமிழ்த் தேசிய உணர் வுடன் கூடிய மக்கள் வீட்டுக்கு வாக்களித்து பெரும் பான்மை பலத்தை காட்ட வேண்டும் - என்றார். (எ-50)



# மின்சாதனங்களை சாம்பலாக்கியது அதிகூடிய மின் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஓக.16

அதிகூடிய மின் அழுத்தத்தால் யாழ்ப்பாணம் சிவன் வீதியில் உள்ள பல வீடுகளில் மின் சாதனப்பொருள்கள் பழுதடைந்துள்ளதாக அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி கோவில் வீதி, சிவன் வீதிச் சந்தியில் இருந்து பலாலி வீதிச் சந்தி வரையான சிவன் வீதியில் உள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளில் மின்பொருள்கள் எரிந்து சேதமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து மின்சார சபை ஊழியர்களிடம் கேட்டபோது இவ்வாறு ஏற்பட்ட மின்அழுத்தம் தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தப் பகுதிகளில் வரையறையற்ற மின் வெட்டும் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-7)

# இலக்கியப் பெருவிழா முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஓக.16

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவலர்கள் மற்றும் விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் இலக்கியப் பெருவிழாவை இந்த வருடம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் முதலாம் திகதி மற்றும் 2 ஆம் திகதி என இரு தினங்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காலை, மாலை என நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகளில் இலங்கையின் தமிழ் இலக்கியங்களின் ஊடாக மொழித்திறனும் இலக்கியப் பயனும் என்ற தலைப்பில் 12 ஆய்வாளர்களின் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாலை நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறும். (வ-14-86)

# மதிப்பீட்டின் பின்னரான வரிக் கட்டண விவரம் நகரசபைக்கு

தென்மராட்சி, ஓக.16

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட ஆதன வரி மீள் மதிப்பீட்டின் போது வரி மதிப்பீடு மேற்கொள்ளப்படாத மரக்காலைகள், அரிசி ஆலைகள் உள்ளிட்ட ஆதனங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டண விவரங்கள் நகரசபைக்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களுக்கு விசேட கழிவுடன் ஆதனவரி செலுத்துவதற்கு நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதன உரிமையாளர்கள் எதிர்வரும் செம்ரெம்பர் முப்பதாம் திகதிக்கு முன்னர் இந்தவருடத்துக்குரிய புதிய மதிப்பீட்டு வரியைச் செலுத்துவோருக்கு பத்துவீத கழிவு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த டிசெம்பரில் ஆதனவரி அறிவித்தல் வழங்கப்பட்டு ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்குரிய ஆதன்வரி கடந்த ஏப்ரல் 30 திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டு அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

### இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தின் கீழ்

# கிளிநொச்சியிலிருந்து புங்குடுதீவுக்கு இருபத்திமூன்று தண்ணீர் தாங்கிகள்



யாழ்ப்பாணம், ஓக. 16

இரணைமடு குடிதண்ணீர்த் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் இருந்து புங்குடுதீவு வரை 23 பெரிய தண்ணீர் தாங்கிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாக இதற்கான காணிகள் பெறப்பட்டுள்ளன.

இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் பணிகளை எதிர்வரும் 2017 இற்குள் முடிவுறுத்த வேண்டும்.

இதற்காக அரசால் 164.04 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பளையில் பெரிய நீர் சுத்திகரிப்பு ஆலையும், கல்லுண்டாயில் கழிவு நீர்சுத்திகரிப்பு ஆலையும் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை கிராமிய மட்ட குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேசத்துக்கு பிரத்தியேக திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆய்வுகள் மக்கள் பங்களிப்புடன் நடத்தப்படும்.-என்றார். (எ-50)

> யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் பணிகளை எதிர்வரும் 2017 இற்குள் முடிவுறுத்த வேண்டும். இதற்காக அரசால் 164.04 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# நகரசபைக்குரிய கடைகளுக்கான வாடகைப் பணம் குறைக்க நடவடிக்கை

### சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஓக.16

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைகளுக்கு இந்த வருடம் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகையைக் குறைத்து மூன்று படிமுறைகளில் அறவிடத் தீர்மானிக்கப்பட்டது. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் புதிய வாடகைக் கட்டணம் இந்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்த சபையால் தீர்மானிக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அறவிடப்பட்டு வருகிறது.

தற்போதைய வியாபார நிலைமைகளை கருத்தில் கொண்டு வாடகைத் தொகையைக் குறைக்குமாறு பெருமளவு வர்த்தகர்கள் சபையிடம் முறையிட்டனர்.

வர்த்தகர்களின் நலன் கருதி இந்த வருடம் நடை முறைப் படுத்தப்பட்ட வாடகைத் தொகையை 2015ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் அறவிடுவதெனவும் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகையின் 50 வீதத்தை இந்த வருடமும் 75 வீதத்தை அடுத்த வருடமும் வாடகையாக அறவிடுவதெனவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

> புதிய வாடகைக் கட்டணம் இந்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்த சபையால் தீர்மானிக்கப்பட்டு கடந்த ஜனவரி தொடக்கம் அறவிடப்பட்டு வருகிறது.

# கொடுப்பனவு வழங்கப்படாத ஊழியர்கள் 38 பேருக்கு நிதி

### தொழில் தருநர்களிடமிருந்து பெற்றுக் கொடுத்தது தொழில் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஓக.16

ஊழியர்களுக்கு நிதிக் கொடுப்பனவுகள் வழங்காத தொழில் தருநர்களிடம் இருந்து கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 38 ஊழியர்களுக்கு 22 இலட்சத்து 76 ஆயிரத்து 970 ரூபா ஊதியக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண தொழில் திணைக்களப் பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் தொழில் தருநர்கள் ஊழியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகளை வழங்காத பட்சத்தில் இணக்கம் ஒன்றை எட்டும் விதத்தில் குறித்த தொழில் தருநர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் ஆகியோரை தொழில் திணைக்களம் வரவழைத்து இரு தரப்பினர்களிடம் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் தொழில் தருநர்களிடம் இருந்து ஊதியக் கொடுப்பனவுகள் ஊழியர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இதனடிப்படையில் வடமாகாணத்தில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 38 பேருக்கு 22 இலட்சத்து 76 ஆயிரத்து 970 ரூபா தொழில் தருநர்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இருந்து இந்த சம்பள நிலுவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் யாழ்.மாவட்டத்தில் 3 பேருக்கு 80 ஆயிரத்து 800 ரூபாவும், கிளிநொச்சியில் 2 பேருக்கு 49 ஆயிரத்து 480 ரூபாவும் என 5 பேருக்கு 13 ஆயிரத்து 280 ரூபாவும் பெற்றுக் கொடுக்கப் பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் 5 பேருக்கு 3 லட்சத்து 93 ஆயிரத்து 510 ரூபாவும், வவுனியாவில் 4 பேருக்கு ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 293 ரூபாவும், 9 பேருக்கு 5 லட்சத்து 37 ஆயிரத்து 803 ரூபாவும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் 2 பேருக்கு ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 917 ரூபாவும், கடந்த ஏப்ரல் மாதம் 5 பேருக்கு ஒரு லட்சத்து 13 ஆயிரம் ரூபாவும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் 5 பேருக்கு 4 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், வவுனியாவில் 5 பேருக்கு ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 960 ரூபாவும் என 10 பேருக்கு 6 லட்சத்து 14 ஆயிரத்து 960 ரூபா பெற்றுக் கொடுக்கப் பட்டது.

கடந்த ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் 4 பேருக்கு 5 லட்சத்து 67 ஆயிரத்து 10 ரூபாவும், வவுனியாவில் 3 பேருக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் என 7 பேருக்கு 42 ஆயிரத்து 10 ரூபாவும் பெற்றுக் கொடுக்கப் பட்டது.

இதனடிப்படையில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 38 பேருக்கு 22 லட்சத்து 76 ஆயிரத்து 970 ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டது-என்றார். (வ-14)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

2½ மாதங்கள் நிரம்பிய Lion German Shepherd குட்டிகள் உண்டு

தொடர்பு: 0778448696

**தேவை Clerk**

கணினியில் பணி செய்யக் கூடிய A/L சித்தியடைந்த யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0217904941

**தவறிவிட்டது**

சாவகச்சேரி, கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் ஜீவராணி என்பவரது மணிபர்சுடன் இரண்டு காசோலைகள், 3 தேசிய அடையாள அட்டைகள், , வாகனவரி, வாகன காப்புறுதி, கையடக்கத் தொலைபேசி 3ஆயிரம் ரூபா பணம், அடைவு பற்றுச்சீட்டு ஆகியவை நேற்று (15.08.2013) கைதடி யூனியன் பெற்றோல் செற்றுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் 0777197488 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**தவறி விட்டது**

17/4அ, நந்தாவில்லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த அருளானந்தம் அருள்க் குமார் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ், லான்ட்மாஸ்டர் இன்சூரன்ஸ், ரக்ஸ் புத்தகம் பெயர் மாற்றத்துக்காக அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு, ஆகியன 10.08.2013 சனிக்கிழமை சின்னக் கடைக்கும், கொக்குவிலுக்கும் இடையில் தவறி விட்டது. கண் டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 9989589

**COMPUTER AND ACCESSORES SALES, 30% OFFER**

| | | |
|---|---|---|
| 4GB Pendrive : 850 | Intel Mother Board : 7950 | ATX Casing Tower : 2650 |
| 8GB Pendrive : 1150 | Intel Processor 2.9GHz : 8500 | 2GB DDR III Ram : 2850 |
| 16GB Pendirve : 1750 | Intel I-3 Processr 3.3GHz : 16850 | 4GB DDR III Ram : 4950 |
| 32GB Pendrive : 3350 | 500 GB Toshiba HDD : 7550 | 500GB Laptop HDD : 7900 |
| 7.2 Multy Dongle : 2950 | 500 GB Westrn Dig HDD : 7850 | Samsung DVD Writer : 2750 |
| Laser Mouse from : 250 | 1TB Westrn Digital HDD : 10750 | 450W Power Supply : 1550 |
| Keyboard from : 480 | 19" Samsung Led Monitor: 12500 | 3in1 Sams Laser Printer: 23750 |
| Wirless Key&Mous:1850 | 19" HP Led Monitor : 12750 | P-4 3rd Gen Full Set : 48850 |
| 10MP Webcam from : 775 | 19" AOC Led Monitor : 12400 | 3rd Gen Laptop from : 55850 |
| Laptop Coolar Pad : 850 | 19" View Sonic Monitor : 12600 | 3rd Gen I-3 HP Laptop:66000 |

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER

No: 228, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்) Tel : 021-222 4459, 0772533390

# யாழ்.பல்கலையில் இறுதி வருட மாணவர் 6 பேருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதி யாண்டு மாணவர்கள் 6 பேருக்கு தற்காலிகமாக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு குழுப்ப நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த இரண்டு வருட மாணவர்களுக்கும் இரண்டு வாரகால தடை விதிக்கப்பட்டு அந்தத் தடை நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் 31ஆம் திகதி மோதலில் ஈடுபட்டு குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில், 4 மாணவர்களும், அதே காலத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கு பகிடிவதை செய்த குற்றச்சாட்டில் 2 மாணவர்களுமாக 6 பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக விசாரணை இடம்பெறவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-4)

# நடமாடும் சேவை நெடுந்தீவில் ஓக.22 இல்

யாழ்ப்பாணம், ஓக.16

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை, காலம் கடந்த பிறப்பு,இறப்பு பதிவுகள் வழங்கல்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. கபே அமைப்பின் அனுசரணையுடன் நடை பெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதற்கான உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். புகைப்படம் எடுத்தல், முத்திரைகள் போன்றவற்றை கபே அமைப்பு இலவசமாக வழங்கவுள்ளது. அடையாள அட்டை இல்லாதவர்களும் பழுதடைந்த அடையாள அட்டையைப் புதுப்பிப்பவர்களும் நடமாடும் சேவையூடாக அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். (வ-17)

# ஒரே நாளில் 1,262 விண்ணப்பங்கள்

## வலி.கிழக்கு நடமாடும் சேவையில்

அச்சுவேலி, ஓக.16
வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவையில் ஒருநாளில் 1,262 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. யாழ்.மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் ஒரே தினத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை இதுவே முதற்தடவை எனக் கூறப்படுகின்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் 'கபே', 'சீ.எச்.ஆர்.' நிறுவனங்களின் அனுசரணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

அதில் கலந்துகொண்டவர்களுக்கு சகல ஆவணங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. ஒரே தினத்தில் 1,262 விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டன.

> யாழ்.மாவட்டத்தில் இதுவரை நடத்தப் பட்ட நடமாடும் சேவைகளில் ஒரே தினத்தில் ஆயிரத் துக்கும் மேற்பட்ட விண் ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட் டமை இதுவே முதற்தடவை எனக் கூறப்படுகின்றது.

வலி.கிழக்கில் இதற்கு முன்னரும் 5 தினங்கள் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன. ஐந்து தினங்களிலும் 2,533 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆறாவது தினத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்ட விண்ணப்பங்களுடன் மொத்த மாக 3,795 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மிகக் கூடியளவில் 6 தினங்கள் நடமாடும் சேவை நடத்தப்பட்டதும், அதிக எண்ணிக்கையான 3,795 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையும் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலேயே எனக் கூறப் படுகின்றது.

ஆறு தினங்களில் முதல் மூன்று தினங்களுக்கும் 'பவ்ரல்' அமைப்பும் இறுதி மூன்று தினங்களுக்கு 'கபே' மற்றும் சீ.எச்.ஆர் நிறுவனங்கள் இணைந்த நிலையிலும் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-11)



நல்லூர்க் கந்தனின் நான்காம் நாள் வீதியுலாக் காட்சி

### நவாலி ஹேமா சிறுவர் நிலையத்தில் இயங்கவுள்ள சித்த ஆயுள்வேத மருந்தகம்



யாழ்ப்பாணம், ஓக.16
வலி.தென்மேற்கு நவாலியில் சித்த ஆயுள்வேத மத்திய மருந்தகம் நவாலி ஹேமா சிறுவர் ஞாபகார்த்த நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண சுதேச வைத்திய பணிப்பாளர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு குறித்த வைத்திய நிலையம் ஊடாக வலி.தென்மேற்கில் உள்ள மக்கள் இலவசமாக ஆயுள்வேத சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்தியசாலைக்கான ஒரு தொகுதி மருந்துகள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வாரத்தில் இரு தினங்கள் என்ற அடிப்படையில் இடம்பெறும் இச்சேவையில் டாக்டர் வ.அன்பரசி வைத்தியராகக் கடமையாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-50)

## சட்டவிரோதமாக மரங்கள் தறிப்பு; பொதுமக்களே தகவல் தாருங்கள்

### இளவாலை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வலி.வடக்கு, ஓக.16
சட்டவிரோதமாக மரங்களைத் தறித்து எடுத்துச் செல்வது தொடர்பாக பொதுமக்கள் தகவல்களை உரிய முறையில் தரும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்திக்பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாதகல் உட்பட பல பகுதிகளில் சட்டவிரோதமாக மரங்களைத் தறித்து எடுத்துச் செல்லும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளனர்.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பு முழுமையாக கிடைக்கும் சந்தர்ப்பத்தில் குற்றச் செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும். இந்த வகையில் பயன்தரும் மரங்களை ஆள்கள் அற்ற காணிகளில் இருந்து திருட்டுத்தனமாக தறித்து எடுத்துச் செல்வோர் மீது பொலிஸார் முழுமையாக நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு பொதுமக்கள் வழங்கும் தகவல்களும் முக்கியமான தாகும்.

குறிப்பாக பனை மரங்கள் உட்பட மற்றும் மரங்களும் திருட்டுத்தனமாக தறித்தெடுத்தச் செல்கையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தகைய சம்பவம் ஒன்றில் 5 பனை மரங்களை வெட்ட அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுவிட்டு 15 பனை மரங்களைத் தறித்தெடுத்துச் செல்ல முற்பட்டோரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். - என்றார். (வ-86)



## எம் வாழ்வு செழிக்கச் செய்வாய்

தமிழ்த் தலைவன் எம் இறைவன்
யாழ் பாடியான் ஊரில்
நல்லூரான் சாலையெங்கும்
தோரணங்கள்..

வானமழை தூறல் கண்டு
வடிவேலனவன் அருளதனால்
பயிர் செழிக்கும்.
கானமழைச் சாரல் எல்லாம்
காதுகள் தன்னில் எலாம்
கந்தன் புகழ் தேன் நிறைக்கும்..

வண்ணமயில் வாகனனை
வந்து நீ வணங்கி நின்றால்-உன்
எண்ணமதில் ஏது
குறை நிலைத்திருக்கும்..

வேதனை தான் அகன்றிடுமே
தெய்வானை திருவாளனிவன்
முற்ற வேம்பும் வினையறுக்கும்..

ஓம் முருகா...ஓம் முருகா...
வானில்முட்டி ஒலிக்கட்டும்
ஒற்றுமையாய் எம் வாழ்வு
என்றும் செழிக்கட்டும்..

நிசா ஞானசந்திரன்

## புதுவாழ்வு காண்பதெப்போ?

நல்லூர் திருக்குமரன்
அடிபோற்றி அருள்வேண்டி
அலை அலையாய்
சனக் கூட்டம்
அடியேனும் அதிலொருவன்
நல்லூரின் வேலவனே
கேட்ட வரம் தந்தாய்- என்
கொடு நோயைத் தீர்த்து வைத்தாய்
வாட்டமுடன் வாழும்- எம்மினத்தார்
வாழ்வதனை மாற்றிடவே மனமிரங்காய்
கெஞ்சிடும் வாழ்வுடன் நாம் அஞ்சியே அவலமுறல்
தொடர் கதையாய் மாறியெமை
துயரத்தில் வாட்டுதையா
அடி பணியும் அன்பர்கள் தம்
குறை தீர்த்து வைப்பவனே- நாம்
பூபாளம் பாடித்தான் புதுவாழ்வு காண்பதெப்போ

நடராஜா- சந்திரலிங்கம்

# வடமாகாண விவசாயக் கண்காட்சி வட்டக்கச்சியில் ஐந்து தினங்கள்

யாழ்ப்பாணம் ஓக.16
வடமாகாண விவசாயக்கண் காட்சியை செம்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் தொடர்ச்சியாக 5 நாள்கள் வட்டக்கச்சியில் நடத்த விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டுவருகிறது என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி விவ சாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக வருடந் தோறும் விவசாயக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வரும் நிலையில் இந்த வருடம் வடமாகாணத்துக்குரிய கண்காட்சியை கிளிநொச்சி இராமநாதபுரம், வட்டக்கச்சி யில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செம்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ள இந்தக் கண்காட்சி தொடர்ச்சி யாக 5 தினங்கள் நடத்தப்படவுள்ளது. விவசாய நிறுவனங் கள் மற்றும் விவசாயம் சார் உற்பத்திப் பொருள் களின் விற்பனை நிலை யங்கள் உட்பட விவசாயத்துடன் தொடர்பு டைய காட்சிக் கூடங்கள் கண்காட்சியில் அமைக்கப்படவுள்ளன.

> விவசாய நிறுவனங் கள் மற்றும் விவசாயம் சார் உற்பத்திப் பொருள் களின் விற் பனை நிலையங்கள் உட்பட விவசாயத்துடன் தொடர்புடைய காட்சிக் கூடங்கள் கண் காட்சியில் அமைக்கப்படவுள்ளன.

கண்காட்சியில் முற்றுமுழுதாக விவசாயிகள் பயனடையக் கூடியதாக பயிர்ச் செய்கை தொடர்பான நுட்பங்கள், விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை அபிவிருத்திகள், பயிர்ச்செய்கை தொடர்பான ஆராய்ச்சிகள், ஒருங்கி ணைந்த பயிர்ச் செய்கைகள், நஞ்சற்ற உரப் பாவனை, சேத னப்பயிர்ச் செய்கை, இயந்திர மயமாக்கல் ரீதியான பயிர்ச் செய்கை, நீர்பாசன முறை மைகள்; தென்னைப் பயிர்ச் செய்கை, ஆயுள் வேத மூலிகை கள், மரமுந் திரிகை, விவசா யம் சார்ந்த உபகரணங்கள் என்பன அந்தந்தக் காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் கண்காட்சியில் விசேட வீடியோப் படக்காட்சிகள் ஊடாக விவசாய செய்கை முறைமைகளும் விளக்கமளிக்கப்படவுள்ளன.

இதன்போது விவசாயிகள் தமது தேவைக்கு ஏற்ப ஆலோ சனைகளைப் பெறுவதுடன் உபகரணங்களையும் கொள் வனவு செய்ய முடியும்.

கண்காட்சிக்கான முன் ஆயத் தப் பணிகளை விவசாயத் திணைக்களம் மேற் கொண்டு வருகிறது. - என்றார். (வ-14)




# கச்சதீவில் உள்ள உரிமையை நாங்கள் நிலைநாட்டுவோம்

## இந்திய சுதந்திர தின உரையில் தமிழக முதல்வர்

சென்னை, ஓக.16

கச்சதீவில் உள்ள உரிமையை நாங்கள் நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.



நேற்று தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டையில் இடம்பெற்ற இந்திய சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவின் 67ஆவது சுதந்திர தினத்தன்று, எனது அன்பு கலந்த வணக்கத்தையும், சுதந்திர தின நல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். 67ஆவது சுதந்திர தின நன்னாளில் சுதந்திரக் கொடியை ஏற்றுவதற்கு வாய்ப்பை நல்கிய தமிழக மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரம் என்ற வார்த்தை நமது மனங்களில் மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமித உணர்வையும் ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான சுதந்திரத்தைப் பெற ஆங்கிலேயர்களுக்கு எதிரான குரல் முதலில் தமிழகத்தில் இருந்தே வெளிக்கிளம்பியது. வீரபாண்டிய கட்டபொம்மன், புலித்தேவர், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை ஆகியோரின் புரட்சி மகத்தானது. இதுவே சுதந்திரப் போராட்டத்திற்கான முதல் வித்தாக அமைந்தது.

தமிழகம் வேகமாக வளர்ந்து வருகின்றது. அதற்கான பல திட்டங்களைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகின்றது. எனது தலைமையிலான அரசின் வெளிப்படையான அணுகுமுறை காரணமாக தொழில் துறையில் ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது.

இதேவழியில் அனைத்துப் பிரச்சினைகளையும் எனது அரசு கையாளும். கச்சதீவில் எமக்குள்ள உரிமையை ஒரு போதும் விட்டுக்கொடுக்க மாட்டேன். எமக்கான உரிமையை நாங்கள் நிலைநாட்டுவோம் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. சுதந்திரக் காற்றை சுதந்திரமாகவும், பெருமையுடனும் அனுபவித்து கொண்டிருக்கும் அனைவருக்கும் 67 ஆவது ஆண்டு சுதந்திர தினவிழா நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரி வித்துள்ளார். (ற)


# மணிப்பூரில் குண்டு வெடிப்பு

இம்பால், ஓக.16

இந்தியாவின் மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலின் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்ற இடத்தின் அருகே சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கு மாவட்டத்தில் மொய்ரான் கோம் என்ற இடத்திலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் குண்டுவெடிப்பில் ஏற்பட்ட சேதம் குறித்து உடனடி தகவல் ஏதும் வெளிவரவில்லை. (ற)



பெங்களூரில் இடம்பெற்ற இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது இடம்பெற்ற இந்திய இராணு வத்தினரின் சகாச நிகழ்ச்சிகளின் ஒரு காட்சி.

# வேண்டாம் பொதுநலவாய மாநாடு மீறினால் போராட்டம் வெடிக்கும்

## தா.பாண்டியன் கடும் எச்சரிக்கை

சென்னை, ஓக.16

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது. மீறி கலந்து கொள்ளும் முடிவை எடுத்தால் பெரும் போராட்டங்களை நடத்துவோம் என்று எச்சரித்துள்ளார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன்.



திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும். மாநாட்டில் பங்கேற்க மாட்டோம் என்று இந்திய மத்திய அரசு அறிவிக்க வேண்டும். மீறிப் பங்கேற்றால் தமிழகம் எங்கும் பெரும் போராட்டங்கள் வெடிக்கும். அதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப் படும்.

இந்திய இயற்கை வளங்களை தனியாருக்கு தாரை வார்க்க கூடாது. தென்னக நதிகளை இணைக்க அனைத்து அரசியல் கட்சியினரும் மற்றும் தமிழக மக்களும் ஒட்டு மொத்தமாக குரல் கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# நீர்மூழ்கி விபத்து: விசாரணை அவசியம்

## கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஓக.16

மும்பையில் இந்தியக் கடற் படையின் நீர்மூழ்கிக் கப்பலில் இடம்பெற்ற விபத்துக்கு தீவிரவாதச் செயற்பாடுகள் காரணமா என்பது குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தி.மு.க தலைவர் கருணாநிதி.

விபத்தில் 18 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நல்ல நிலையில் இருந்த நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்பட்ட திடீர் விபத்துக் குறித்து ஐயங்கள் தோன்றியுள்ளன. விபத்துக்கு தீவிரவாதச் செயற்பாடுகள் காரணமா என்பது குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் கருணாநிதி. (ற)

**வட பகுதி நெற் செய்கையாளர்களே....!**

இவ் வருட பெரும்போக செய்கைக்கு பிரதேச ரீதியில் உயர் விளைச்சலை தரும், உயர்தரம் கொண்ட

**"ஹேரலீஸ் விதைநெல்"** இனை

**Hayleys Agro Farms (Private) Limited**

உங்களுக்கு வழங்குகின்றது.

| வர்க்கம் | மாதம் | அரிசி |
|---|---|---|
| BG 406 (500-1) | 4 | சிவப்பு நாடு |
| BG 352 | 3½ | வெள்ளை நாடு |
| BG 358 | 3½ | வெள்ளை சம்பா |
| AT 362 | 3½ | சிவப்பு நாடு |
| BG 360 | 3½ | கீரி சம்பா |
| BG 300 | 3 | வெள்ளை நாடு |
| AT 308 | 3 | வெள்ளை சம்பா |

தேவையினை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்:-

யாழ்ப்பாணம் - சாந்தி அக்ரோ நீட்ஸ் - 0778814228
கிளிநொச்சி - NTM ஸ்ரோர்ஸ் - 0773048734
முல்லைத்தீவு - கலை வேளாண் சேவை - 0770153644
வவுனியா - காசி கெமிகல்ஸ் - 0776572459

பொன்னான விளைச்சலுக்கு
ஹேரலீஸ் விதைநெல்




(சி/11180)

Hayleys AGRICULTURE

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் வீதி, கொழும்பு 10.
தொடர்புகளுக்கு - கு. புவனேந்திரா - 0777594992

# சுதந்திர தினமல்ல கறுப்பு தினமே

## ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் சிதம்பரத்தில் கைது



சென்னை, ஓக.16

இந்தியசுதந்திரதினத்தை கறுப்புதினமாக அனுஷ்டிப்பதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களைமேற்கொண்ட 26 மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிதம்பரம், அண்ணாமலைநகரில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாணவர் கூட்டமைப்பு மற்றும் மாணவர் விடுதலை இயக்கம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தோ, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்தோ இந்திய மத்திய அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. எனவே இந்தியாவின் சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிப்பதாகத் தெரிவித்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுமதியின்றிப்போராட்டம் நடத்தினார் கள் என்று தெரிவித்து 26 மாணவர்களைக் கைது செய்துள்ள பொலிஸார், அவர்கள் மீது சுதந்திரத்தினத்தையும், தேசியக்கொடியையும் அவமதித்தனர் என்று வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ற)

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம், கச்சாய் வீதியிலுள்ள தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள கச்சாய், கோவிற்பற்று பாலாவி இறை "கச்சாய் தோட்டம், மாரியான் காடு" என்னும் பெயருடைய 10½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 666 0190

(31384)(6.3.11)

**வீடு வாடகைக்கு**

அம்மன் கோயிலடி, கோண்டாவில் (ஸ்ரேசனுக்கு) அருகிலுள்ள ஐந்து அறை கொண்ட சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
077 296 9638, 077 623 5793

(31381)(6.3.11)

**வான் விற்பனைக்கு**

LITE ACC 51-xxxx P/5, A/C, வான் விற்பனைக்கு உண்டு.

(சி/11179)
(7.6.3)

தொடர்பு: 077 230 6653

**வீடு விற்பனைக்கு - சுண்டுக்குளி**

All Reasonable offers Considered. 67 Crossette Lane (றக்காலேன் முடிவில், கற்பகவிநாயகர் கோயில் அருகில்) 5 அறைகள் கொண்ட இரட்டை மாடிவீடு நவீன வசதிகள், அறைகளுக்கு 3 இணைந்த குளிப்பு /கழிவு அறைகள், மின்சாரம், வாயு (gas), விறகுக்கு ஏற்ற மூன்று சமயல் அறைகள். வீட்டு நிலப்பரப்பு 3115 சதுர.அடி, காணி 3 பரப்பு. வீட்டைப் பார்த்த பின் விலை நியமிக்கலாம்.

தொடர்பு: 077 634 3863

Sureka.goringe@gmail.com

## எகிப்து வன்முறையில் ஊடகவியலாளர் உயிரிழப்பு

கெய்ரோ, ஓக.16
எகிப்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 'ஸ்கை நியூஸ்' ஊடக நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் மைக் டீன் உயரிழந்துள்ளார்.
61 வயதாகும் மைக் டீன் குறித்த ஊடக நிறுவனத்தில் வொஷிங்டன் மற்றும் ஜெருசலேமைத் தளமாகக் கொண்டு கடந்த 15 வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.
இவர், எகிப்தில் இடம்பெறும் வன்முறைகள் குறித்த செய்திகளைத் திரட்டும் நோக்கில் அங்கு சென்றிருந்தார். (ற)

## 64 அகதிகள் ஸ்பெயினில் கைது

மாட்ரிட், ஓக.16
ஸ்பெயின் மற்றும் மொராக்கோ எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 64 அகதிகள், அந்நாட்டுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஸ்பெயின் நாட்டின் தெற்கு கடற்பகுதிக்குள் நுழைய முயன்ற சமயமே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இதேபோல் கடற்படை பாதுகாப்பு எல்லையைத் தாண்ட முயன்ற 300க்கும் மேற்பட்டவர்கள் தடுத்துநிறுத்தப்பட்டனர்.
ஸ்பெயின் மீட்புக்குழுவின் செய்தித் தொடர்பாளர் இது குறித்துக் கூறுகையில்,
கைது செய்யப்பட்டவர்கள் மொராக்கோவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.
ரம்ழான் பண்டிகையைத் தொடர்ந்து, ஜிப்ரால் டர் எல்லையில் அத்துமீறி நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது என்று தெரிவித்துள்ளார். (ற)

# அடக்குமுறை கட்டவிழ்ப்பு

## இராணுவம் துப்பாக்கிச் சூடு: எகிப்தில் 327 பேர் சாவு



கெய்ரோ, ஓக.16
எகிப்தில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி முகமது முர்சியின் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் அந்நாட்டு இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 372 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 2 ஆயிரம் பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர்.
பொதுமக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் எகிப்திய ஜனாதிபதி முகமது முர்சி அந்நாட்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுப்புப் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்தநிலையில் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் முகமது முர்சியை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி ரபா-அல்-அடாவியா பகுதியில் பல்லாயிரக்கணக்கானோர் ஒன்றுகூடித் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸாரும், இராணுத்தினரும் அறிவுறுத்தியிருந்தபோதும், அவர்கள் அங்கிருந்து அகல மறுத்து தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்த னர்.
ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்ததை அடுத்து நேற்று முன்தினம் மாலை அவர்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகளைப் அந்நாட்டுப் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து ஆரம்பித்தனர்.



அதையடுத்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது.
அந்த மோதல்களில் 372 ஆர்ப்பாட்டக்காரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என்றும் சுமார் 2 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்துடன் பொலிஸார் தரப்பில் 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.
இந்த மோதல்களால் கெய்ரோ நகரின் பல பகுதிகள் போர்க்களம் போல் காணப்படுகின்றன. (ற)

## ரொரண்டோவில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் சாவு

ரொரண்டோ, ஓக.16
கனடாவின் டொரண்டோவில் இடம்பெற்ற இருவேறு துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
கனடாவின் வடமேற்குப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 21 வயதுடைய இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அதேவேளை, வேறொரு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தாம் இதுவரை 3 பேரைக் கைது செய்துள்ளனர் என்று அறிவித்துள்ள ரொரண்டோ பொலிஸார், மேலும் 4 பேரைத் தேடி வருவதாகவும் என்றும் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ள பொலிஸார் விரைவில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தனர். (ற)

## ஆப்கனின் பெண் எம்.பி. கடத்தப்பட்டார்

காபூல், ஓக.16
ஆப்கனில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலிபான்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
காபூல் நகரின் கிராமப்பகுதியில் தமது பிள்ளையுடன் பயணம் மேற்கொண்டிருந்தபோதே அவர் கடத்தப்பட்டுள்ளார் என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.
மூன்று பிள்ளைகளுடன் பயணித்திருந்த அவரை ஆயுதம் தாங்கிய குழுவினர், கடத்தியுள்ளனர் என்றும், எனினும் நேட்டோப் படையினரின் முயற்சியால் பிள்ளைகள் மூவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த பெண்நாடாளுமன்ற உறுப்பினர், பிறிதொரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் அவரை மீட்க முடியவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 3 மாதங்கள் கடலில் தத்தளித்த தம்பதியர்



நியூயோர்க், ஓக.16
மூன்று மாதங்களாக 2 குழந்தைகளுடன் கடலில் தத்தளித்து கொண்டிருந்த தம்பதியினர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.
அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தை சேர்ந்த தம்பதி ஷான் காஸ்டன்க்வேய்- ஹான்னா. இவர்களுக்கு அர்தித் என்ற 3 வயது மகளும், ரஹப் என்ற குழந்தையும் உள்ளனர்.
மத நம்பிக்கை மிகுந்த இந்த தம்பதியருக்கு அமெரிக்காவின் ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி, கருக்கலைப்பை ஏற்றுக் கொள்வது போன்ற செயற்பாடுகள் பிடிக்கவில்லை.
அதையடுத்து அவர்கள் அமெரிக்காவிலிருந்து 3 ஆயிரத்து 300 மைல் தொலைவில் உள்ள சிறிய தீவு நாடான கிரிபாட்டிக்கு செல்ல முடிவு செய்தனர்.
திட்டமிட்டபடி கடந்த மே மாதம் சான் டீகோவில் இருந்து சிறிய படகில் கிரிபாட்டிக்கு கிளம்பினர். அவர்கள் கிளம்பிய நேரத்தில் புயல் வேகமாக அடித்ததால், படகை மேலும் செலுத்த முடியாமல் கடலிலேயே தத்தளித்தனர்.
இந்நிலையில் 3 மாதங்கள் கழித்து அந்த வழியாக சென்ற கப்பல் ஒன்று அவர்களை காப்பாற்றி அருகில் உள்ள சிலி நாட்டில் கடந்த 9ஆம் திகதி இறக்கிவிட்டது.
தற்போது அவர்கள் நாடு திரும்ப அமெரிக்க அரசு விமான டிக்கெட் எடுத்து அனுப்பியுள்ளது. (ற)

## சிறப்புத் தூதுவர் தேவையில்லை

### இந்தியா – பாகிஸ்தான் பிரச்சினை குறித்து அமெ. கருத்து

வொஷிங்டன், ஓக.16
இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிறப்பு தூதர் தேவையில்லை என்று கருத்துத்தெரிவித்துள்ளது அமெரிக்கா.
தற்போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள அத்துமீறிய ஊடுருவல் காரணமான முறுகல் நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்பி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"இரு நாடுகளின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடக்கும் அத்துமீறல்கள் குறித்து வருந்துகிறோம்.
பேச்சு மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதற்காக சிறப்பு தூதர் தேவையில்லை. இரு நாடுகளிலும் உள்ள அமெரிக்க தூதர்களின் மூலம், இந்தப் பேச்சுகள் தொடர நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.
இது குறித்து இரு நாட்டு அரசுகளிடமும் தெரிவித்துள்ளோம்.
காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் கொள்கையில் எவ்வித மாறுபாடும் இல்லை. அதுகுறித்து இருநாடுகள் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் என்று நாங்கள் உறுதியாகநம்புகிறோம்" என்று அவர் தெரிவித்தார். (ற)

## மூக்கு வழியாக மூளையைத் தாக்கிய ஒட்டுண்ணி

### வெள்ள நீரில் விளையாடியதால் சிறுவன் ஆபத்தான நிலையில்

லா பெல்லே, ஓக. 16
வெள்ளத்தில் விளையாடிய சிறுவனின் மூக்கு வழியே மூளைக்குள் புகுந்துள்ள ஒட்டுண்ணியால் குறித்த சிறுவன் உயிருக்குப் போராடி வருகின்றான். இந்தப் பரிதாபச் சம்பவம் அமெரிக்காவின் லா பெல்லே நகரத்தில் இடம்பெற்றுள்ளது.
லா பெல்லே நகரத்தில் வசிக்கும் 12 வயதுச் சிறுவன் சக்காரி ரெய்னா. அவன் கடந்த வார விடுமுறையில் தனது நண்பர்களுடன் வெளியே விளையாடச் சென்றுள்ளான்.
வீட்டிற்கு அருகில் தேங்கி இருந்த ஒரு குட்டையில் அந்த சிறுவர்கள் மரக்கட்டைகளில் மிதந்தபடி விளையாடியுள்ளனர். அதன்பின் மறுநாள் முழுவதும் அவன் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட அவனது தாயாருக்கு சந்தேகம் எழுந்தது.
உடனடியாக அவனை ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்.
அங்குதான் மூளையை அரிக்கும் அரிய வகை ஒட்டுண்ணி அவனைத் தாக்கியுள்ளமை தெரியவந்தது.
ஓடாமல் நிற்கும் வெதுவெதுப்பான நீரில் பரவியிருக்கும் இந்த ஒட்டுண்ணி, ஒருவரின் மூக்கின் வழியே உடலுக்குள் நுழைந்து மூளையை அரிக்கும் சக்தி படைத்ததாகும்.
இந்த நோய் தாக்கினால் உயிர் பிழைப்பதே அரிதாகும். இந்த வகை நோய் தாக்கி இதுவரை மூன்று பேர்தான் உயிர் பிழைத்துள்ளனர்.
2003ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை 31 நோயாளிகள் இந்த வகை நோய்த்தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர் என்று நோய் கட்டுப்பாட்டு மையத்தின் கணக்கீடுகள் தெரிவித்துள்ளன.
மியாமி சிறுவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சக்காரி தற்போது தீவிர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றான். (ற)



கடந்த 10 ஆண்டுகளில் இந்த நோய் 31 பேரைத் தாக்கியுள்ளது. அதில் மூவர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளனர்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 16
நல்லூர் கந்தன் ஆலய ஐந்தாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

நிகழ்வில் 'நலம் காப்பான் நல்லூரான்' என்ற பொருளில் பொன்.சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவும், ஏழாலை ஸ்ரீ கண்ணகை அம்பாள் அறநெறிப் பாடசாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை, புன்னாலைக் கட்டுவன் திடப்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெற வுள்ளது. இசையரங்கில் வீணை இசையை சிவஸ்ரீ மகாதேவ சோமசுந்தர சர்மாவின் மாணவிகள் வழங்குவர். மிருதங்கம்- எஸ்.துரை ராஜா வழங்குவார்.

இசைக் கச்சேரியில் பாடல் களை ந.தனசொரூபி வழங்க அணிசேர் கலைஞர்களாக வயலின்- ஆர்.ஜெயராமன், மிருதங்கம்-க.கண்ணதாசன், கெஞ்சிரா-கே.அனந்த கோபன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-86-7)

# வரணி சந்தையில் ஜப்பான் மீன்கள்

வரணி, ஓக. 16
வரணிச் சந்தையில் தற்சமயம் ஜப்பான் மீன்கள் தாராளமாக கிடைக்கின்றன. இந்தக் கிராமத்தின் வடக்கு பிரதேசம் உவர்நீர் சதுப்பு நிலம் ஆகும். இந்த சதுப்பு நிலப் பகுதியில் கோடை காரணமாக நீர் வற்றிச் செல்லும் நிலையில் இந்தப் பகுதியில் குறிப்பிட்ட ஜப்பான் மீன்கள் தாராளமாக பிடிபடுகின்றன. அத்துடன் மணலை, விரால் போன்ற மீன்களும் பிடிக்கக் கூடியதாக உள்ளதென அந்தப் பகுதியில் மீன்பிடிப்போர் தெரிவிக்கின்றனர்.

கடலுணவு தட்டுப்பாடான இந்தக் கால கட்டத்தில் ஜப்பான் மீன்கள் குறைந்த விலையில் பெறக்கூடியதாக உள்ளன. எனினும் விரால், மணலை போன்ற மீன்களின் விலைகள் கூடிய விலைக்கு பெற வேண்டிய நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-122)



யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற இரதோற்வத்தின்போது முனீஸ்வரர் வீதியுலா வந்த அருட்காட்சி. (ஒ)

## அன்பைக் கொடுத்து அன்பைப் பெறு

இறைவன் அறச்செம்மையுடையார்பால் அன்பு வைக்கிறான். பக்குவப்பட்டு அருட் செம்மையுடையார் பால் அருள் வைக்கிறான்.

ஆன்மாக்கள் இறைவனிடம் அன்பாகிய வித்தை விதைத்தால் அருளாகிய பழம் பழுக்கும். நாம் இறைவனிடம் அன்பு வைக்க வேண்டும். அவன் எமக்கு அருள் வழங்குவான். பணத்தைக் கொடுத்துப் பண்டத்தைப் பெறுவதுபோல் அன்பைச் செலுத்தி அருளைப் பெறவேண்டும் எனத் தெளிந்து கொள்ளுங்கள்.

ஞானக்கதிர்

நன்றி:- ஞானச்சுடர்

# சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், ஓக. 16
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனந்த லெட்சுமி மாணிக்கராஜசர்மா தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் க.நீல கண்டன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். ஆசியுரையை ஸ்ரீபால கதிர் காம ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.குமாரக் குருக்கள் வழங்குவார். 'சுந்தரரும் வாழ்வும்' என்ற பொருளில் நி.பாபுதரனின் சிறப்புச் சொற்பொழிவும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-7)

# ஒரே நாளில் ஆறுபேர் நாய்க் கடிக்கு இலக்கு

தென்மராட்சி, ஓக.16
சாவகச்சேரிப் பகுதியில் ஒரே நாளில் ஆறு பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகினர். இவர்களில் நான்கு பேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மிருசுவில், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் நேற்று மதியம் இவர்கள் விசர்நாய்க் கடிக்கு இலக்காகினர்.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த தங்கவேல் சுகந்தினி (வயது -11), மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்தவர்களான அழகரத்தினம் சுகந்தினி (வயது-17), சுதன்-சுரேன் (வயது-08) மற்றும் தவராசா - ரதீஸ்வரன்



(வயது-26) ஆகியோரே கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். கொடிகாமம் பெரிய நாவலடிப் பகுதியில் குறித்த விசர் நாயினால் கடியுண்ட இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளனர்.

இந்த ஆறு பேரையும் கடித்த நாய் கொடிகாமம் பகுதியில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் நாய்க்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இந்த மாதம் இதுவரை 56 பேர் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து அறியமுடிகின்றது. (ஐ-9-400)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக.16
தென்புலோலியூர் ஆண்டியா வளவு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த மணவாளக் கோலமும் சங்காபிஷேகமும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (ந-14)

★ ★ ★

வரணி மாசேரி பொற்பத்தங் கேணி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-122)

# கூட்டுறவு விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 16
நெடுந்தீவு பல.நோ. கூ. சங்கத்தின் கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை ஆண்கள் பெண்களுக்கிடையிலான கிரிக்கெட்போட்டி நடைபெறவுள்ளது என சங்கத்தின் தலைவர் அ.லெ.அரியநாயகம் தெரிவித்தார். (ந-7)

# கடலில் மூழ்கி ஒருவர் சாவு

வடமராட்சி, ஓக.16
கடலில் குளித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செம்பியன்பற்று வடக்குக் கடலில் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த ஜேக்கப் அன்ரன் (வயது-55) என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-8-400)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய சித்தன்கேணி வாசி சாவு

யாழ்ப்பாணம், ஓக.16
மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை விபத்தில் சிக்கி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இந்த விபத்து கடந்த முதலாம் திகதி கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளும் 'படி' வாகனமும் மோதியே விபத்து ஏற் பட்டது. இதில் வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த சிவசுந்த ரம்பிள்ளை உருத்திர





மூர்த்தி (வயது-51) என்பவரே உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-4-78)

# பிரேக் இல்லாத ஓட்டோ சாரதிக்கு ஆள் பிணை

தென்மராட்சி, ஓக. 16
'பிரேக்' இல்லாத ஓட்டோவைச் செலுத்தி வந்து வீதி விபத்தை ஏற்படுத்திய சாரதியை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை 'வாகனத்தை பரிசோதிக்காமல் வீதியில் செலுத்தியமை', 'வீதியில் ஏற்பட்ட விபத்து குறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்காமை', 'விபத்தில் காயமடைந்த வரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க முயற்சி செய்யாமை' வாகன விபத்தைத் தடுக்க முயற்சி செய்யாமை ஆகிய ஐந்து குற்றச்சாட்டுக்களுடன் ஓட்டோ சாரதி நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு சாரதியை 50 ஆயிரம் ரூபா ஆள்பிணை யில் செல்ல அனுமதிக்கப்பட்டது. ஓட்டோவினால் மோதுண்டு காயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்து கடந்த 13 ஆம் திகதி மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் இடம்பெற்றது. (ஒ-9)



மாதகலில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் மாதகல் சங்கமித்த விகாரையில் கிடைக்கும் நிதியில் இருந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட கல்வியில் திறமையான 20 மாணவர்களுக்கு 750 ரூபா வீதம் கல்விக்கான நிதி உதவியாக வழங்கியுள்ளனர்.

மாதகல் சங்கமித்த விகாரையில் மாதகல் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி எ.தரங்கா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கடற்படைகளின் கட்டளை அதிகாரி அட்மிரல் உடவத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உதவி நிதியையும் சான்றிதழ்களையும் வழங்கியதுடன் பெற்றோருக்கும் மாணவர்களின் ஊட்டத்துக்கான உணவுப் பொருள்களையும் பெற்றோர்களிடம் கையளித்தார். (வ-86)

# நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஓக.16
மட்டுவில் வடக்கு மோகன தாஸ் சனசமூக நிலைய அபிவிருத்திக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இந்த வருட பன்முகப் டுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கீட்டில் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை மோகன தாஸ் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் சனசமூக நிலையத்தினர் தெரிவித்தனர். (ந-9)

# போதையில் முகாமுக்குள் நுழைந்தவர் அட்டகாசம்


தென்மராட்சி, ஓக. 16
மது போதையில் படை முகாமுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த மூன்று பேரையும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

கடந்த 30 ஆம் திகதி இரவு படை முகாமுக்குள் புகுந்து அங்கிருந்த படையினரை தகாத வார்த்தைகளால் ஏசி அட்டகாசம் புரிந்த மூவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவரையும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (வ-9)

# அனுமதியற்ற கட்டடங்கள் மீது நடவடிக்கை அவசியம்

## வலி. தென்மேற்கு பிரதேச சபையிடம் மக்கள் வலியுறுத்து



வலி.தென் மேற்கு, ஓக.16
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சபையின் அனுமதியில்லாத கட்டடங்கள் அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதனால் எதிர் காலத்தில் வீதிகளை அகலிக்க முடியாத நிலை ஏற்படுமென்று மக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.
இந்த நிலை குறித்து சபையின் கவனத்துக்கு தெரியப்படுத்திய போதிலும் உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை மேற் கொள்ளாததால் சட்டத்தை மீறுபவர்களுக்கு அது சாதகமாக அமைந்துள்ளது.
வலி.தென் மேற்கு பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், ஆனைக்கோட்டை கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.
குறித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கட்டடங்களை அமைக்க வேண்டுமானால் முன் கூட்டியே பிரதேச சபையிடம் அனுமதி பெற வேண்டும். சிலர் இந்த நடைமுறையைப் பின்பற்றாமல் தங்கள் வசதிகளுக்கு கேற்றபடி வீடுகளைத் திருத்தி அமைப்பதிலும் சுற்று மதில்கள் அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.
இதுகுறித்து பிரதேச சபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்திய போதிலும் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் கட்டட வேலைகள் பூர்த்தியடைகின்றன. சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் தடங்கல்கள் ஏற்படுகின்றன.
இதேவேளை, சட்ட விரோத கட்டடங்கள் தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேச சபையால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் போது, கட்டடங்கள் முழுமையாக நிறைவேற முன்பு ஆரம்பித்திலேயே சட்ட நவடிக்கை எடுத்திருக்கலாம் என்று நீதிவானால் தெரிவிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-115)

# குப்பைத்தொட்டி வந்தும் அலங்கோலம்



சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக நகர சபையினால் வைக்கப்பட்டுள்ள பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகளுக்கு மூடி இல்லாததால் நாய்கள் அதனை கீழே வீழ்த்தி அதனுள் காணப்படும் கழிவுகளை வெளியே இழுத்து அந்தப் பகுதியை அசிங்கப்படுத்துகின்றன. (ஓ-9)

# வரணி- மிருசுவில் வீதியை புனரமைக்க கோரிக்கை


தென்மராட்சி, ஓக.16
வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயத்திலிருந்து வடக்கு மிருசுவிலுக்குச் செல்லும் வீதியை புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.
குறித்த வீதி நாவற்காடு, குடமியன் பிரிவுகளுடாக வடக்கு மிருசு விலுக்குச் செல்வதால் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுடன் மிருசுவில் ஊடாக வடமராட்சிக்குச் செல்லும் பெருமளவு மக்களும் வாகனங்களும் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.
கடந்த வருடம் வீதி புனரமைப்புக்கென வீதியில் பறிக்கப்பட்ட களிமண் வீதியின் போக்குவரத்தை முழுமையாக மேற் கொள்ள முடியாத நிலையை உருவாக்கி உள்ளது.
களிமண் பரவியுள்ளதால் பாடசாலை மாணவர்களும் வாகனங்களில் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
எனவே இந்த வீதியை விரைவில் புனரமைத்து வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (வ-9)

### பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பால்

# மின் கட்டண நிலுவையை செலுத்த முடியாது பாடசாலைகள் திணறல்

## வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் கல்வி அமைச்சருக்குக் கடிதம்

வலி.தென்மேற்கு, ஓக. 16
மின்கட்டண அதிகரிப்பால் பாதிப்புக்குள்ளான பாடசாலைகள் மின்கட்டண நிலவையைச் செலுத்த முடியாத நிலையிலுள்ளனர்.
இதனால் மின்சாரம் துண்டிக்கப்படும் நிலையில் மாணவர்களின் கல்வியிலும் கணிசமான பாதிப்பு ஏற்படும் என்று கருதுகிறேன்.
எனவே, பாடசாலையினதும், மாணவர்களினதும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள மின்கட்டணத்தை மீளாய்வு செய்யுமாறு வலிகாமம் மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி என்.ஐங்கரன் கல்வியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.
"மின் கட்டண அதிகரிப்பால் பாட சாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்" என்ற தலையங்கத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனாவுக்கு தவிசாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகள் அண்மையில் ஏற்பட்ட மின் கட்டண அதிகரிப்பால் மிகுந்த தாக்கத்தை எதிர்கொண்டுள்ளன.
இவ்வாறு அதிகரித்த மின் கட்டண உயர்வால் அரச பாடசாலைகள் மாதாந்த மின் கட்டணங்களை இலங்கை மின்சார சபைக்கு செலுத்துவதில் இடர்பாடுகளை எதிர் நோக்கி வருகின்றன.
நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளுக்கான மின் கட்டணம் மாதம் ஒன்றுக்கு அரசின் ஒதுக்கீடானது ஆரம்பப் பாடசாலைகளுக்கு 750 ரூபாவும், கனிஷ்ட இடை நிலை பாடசாலைகளுக்கு ஆயிரம் ரூபா வும் சிரேஷ்ட இடை நிலை பாடசாலைகளுக்கு 1250 ரூபாவும் மத்திய மகா வித்தியாலயங்களுக்கு 1500 ரூபாவும் மட்டுமேயாகும்.
இதேவேளை வழமையாகவே பாடசாலைகளுக்கான மின் கட்டணங்கள் அதிகமாக வருகின்றமையை தாங்கள் அறிந்ததே.
இந்தச் சந்தர்ப்பத்தில் மேலதிகமான தொகை பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் ஊடாக பெற்றே இது வரை காலமும் செலுத்தப்பட்டு வருகின்றன.
ஆனால் தற்போது அதிகரித்த மின் கட்டணத்தால் மாதாந்த நிலுவையைச் செலுத்த முடியாத நிலையில் பாடசாலைகள் உள்ளன.
இதனால் பாடசாலைகளில் மின்சாரம் துண்டிக்கப்படும் நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம். இவ்வாறான நிலை மாணவர்களின் கல்வியில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் என கருதுகின்றேன்.
இந்த விடயம் தொடர்பில் தாங்கள் சிறப்பு கவனம் எடுத்து பாடசாலைகளுக்கான மின் கட்டணம் தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டும் என மிக வினயமாக கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது. (வ-115)




### பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்ட

# தனியார் பஸ் நடத்துநர் பணியிலிருந்து இடைநிறுத்தம்


யாழ்ப்பாணம், ஓக.16
தனியார் பஸ்ஸில் இளம் பெண்ணிடம் இளைஞர் ஒருவர் அநாகரிகமாக நடந்து கொண்டது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் நடத்துநரிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்காது அலட்சியப்படுதிய பஸ்ஸின் நடத்துநர் தற்காலிகமாக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.
இவ்வாறு காரைநகர் தனியார் பஸ் சங்கத்தலைவர் எஸ். ரி.சிங்க அரியரட்ணம் தெரி வித்துள்ளார்.
கடந்த 4 ஆம் திகதி காரைநகரில் இருந்து மானிப்பாய் வீதியூடாக சேவையில் ஈடுபட்ட 782 வழி இலக்க தனியார் பஸ்ஸில் அலுவலகப் பணிக்காக ஆனைக்கோட்டைப் பகுதியில் ஏறிய இளம் பெண்ணிடம் அநாகரிகமாக இளைஞர் ஒருவர் நடந்துள்ளார். இது தொடர்பில் குறித்த பெண் கடமையில் இருந்த நடத்துநரிடம் தெரிவித்துள்ளார்.
ஆனால் நடத்துநர் அதனை அலட்சியப்படுத்தியதுடன் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டார்.
இது தொடர்பாக காரைநகர் பஸ் சங்கத்துக்கு குறித்த பெண்ணால் முறைப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டது. அதை அடுத்து சங்கத் தலைவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.
நடத்துநர் வேலையில் இருந்து மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளார்.
நடத்துநரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் சங்கத்தின் தலைவர். (ஓ-14)

# மூடப்பட்ட கடைகளை பொறுப்பேற்றது பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஓக.16
திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உரிமையாளர்களால் மூடப்பட்ட 9 வர்த்தக நிலையங்களை நல்லூர் பிரதேச சபை பொறுப்பேற்றுள்ளது.
பிரதேச சபையுடன் மேற் கொள்ளப்பட்டு ஒப்பந்தத்துக்கு முரணாகச் செயற்பட்டதால் குறித்த கடைகள் மூடப்பட்டன.
தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்த கடைகளை உரிமையாளர்கள் மீண்டும் திறக்காத காரணத் தால் அவற்றை பிரதேச சபை பொறுப் பெடுத்துள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (வ-400-7)

# வீதிச்சுற்று வட்டம், சந்தி நடுப்பிரிகைக் கற்கள் பிரதான சந்திகளில் அமைக்கப்பட வேண்டும்

கொழும்புத்துறை ஓக.15
யாழ்.நகரின் பிரதான சந்திகள் பலவற்றில் வீதிச்சுற்று வட்டம் மற்றும் சந்தி நடுப் பிரிகைக் கற்கள் என்பன நிறுவப்படாமையால் வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும், பயணிகளும் போக்குவரத்தில் பல்வேறு இடர்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.
யாழ்.நகரின் அனைத்து பிரதான போக்குவரத்து வீதிகளும் அகலிக்கப்பட்டு "காப்பெற்" வீதியாக மாற்றப்பட்டுப் பல மாதங்கள் கடந்து விட்டன. இந்த நிலையில் சந்திகளில் வாகனங்கள் தத்தமது பாதைகளில் பிரிந்து பயணிக்க வசதியாக சுற்றுவட்டம், வீதிப் பிரிகைக் கற்கள் அமைப் பதில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது.
இதனால் பல இடங் களில் சன நெருக்கடியான நேரங்கள், பண்டிகைக் காலங்களில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. அதேவேளை எந்த நேரமும் பொலிஸாரின் வழி நடத்தலும் தேவைப்படுகிறது.
பண்ணைச் சந்தியில் சுற்று வட்டம் அமைக்கப்படாது தற்காலிக சுற்றுவட்ட அடையாளத்துக்கான கொங்கிறீற் கற்கள் வைக்கப்பட்டு பல மாதங்களாகின்றன.
இதனைவிட சத்திரச் சந்தி, மிட்டாஸ்கடைச் சந்தி, வின்சர் சந்தி, ஆரியகுளம் சந்தி, ஆஸ்பத் திரிச் சந்தி, வெலிங்டன் சந்தி, தந்தை செல்வா சதுக்கச் சந்தி என்பவற்றலும் வீதிப் புனர மைப்புக்கள் முடிவுற்ற நிலை யிலும் சுற்று வட்டங்கள் அமைக்கப்படாதுள்ளன.
எனவே போக்குவரத்தை இலகுபடுத்தவும், விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளவும் மேற்படி சந்திகளில் உரிய போக்குவரத்து வழிகாட்டுதல் நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)



யாழ்.நகரின் பிரதான சந்திகள்


உதயன்
16/08/2013

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

அம்பாறை.ஒக.16
ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நபரொருவரை வீட்டினுள் புகுந்து கூரிய வாளால் தாக்கிக் காயப்படுத்தியதுடன் வீட்டுப் பொருள்களுக்கும் சேதம் விளைவித்து விட்டுத் தலைமறைவாக இருந்து வந்தவர் புதன்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

# அம்பாறைத் தமிழ் கிராமங்கள் அபிவிருத்திகளில் புறக்கணிப்பு

## பிரதேச மக்கள் கவலை



அம்பாறை.ஒக.16
அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்கள் அபிவிருத்திகளில் இருந்து புறக்கணிக்கப்படுகின்றன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.
அம்பாறையில் அதிக அளவில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்படுகின்றன.
எனினும் திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, கல்முனை தமிழ் பிரதேசம் உட்பட பல பகுதிகளில் உள்ள மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கின்றனர்.
இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் கடந்த தேர்தல்களில் அரச தரப்புக்கு வாக்களிக்காமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த் நிலையில் புலம்பெயர்ந்த அமைப்புகள் தங்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகளை வழங்குமாறு இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## சிறுமி உயிரைப் பறித்த பெருநாள் புத்தாடை

### அலுமாரி கவிழ்ந்ததால் விபரீதம்

திருகோணமலை.ஒக.16
கிண்ணியா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த மர அலுமாரி விழுந்ததில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலிருந்த சிறுமி புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.
இந்தச் சிறுமி கண்டி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். கிண்ணியா, றகுமானிய்யா நகரை சேர்ந்த அப்துல் ஜப்பார் சியானா (வயது-9) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
தனக்கு வாங்கிய பெருநாள் ஆடையை அணிந்து அழகு பார்ப்பதற்காக அலூமாரியின் மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்த புதிய ஆடையை அலுமாரியில் ஏறி எடுக்க முயன்றுள்ளார். இதன்போது அலுமாரி முன்புறமாக கவிழ்ந்து விழுந்துள்ளது.
சத்தத்தைக் கேட்டு பெற்றோர் வந்து பார்த்தபோது அலுமாரிக்குக் கீழே சிறுமி வீழ்ந்து கிடந்ததை அவதானித் துள்ளனர். உடனடியாக சிறுமி கிண்ணியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அவசர சிகிச்சைக்காக அவர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் கண்டி வைத்தியசாலையில் சிறுமி உயிரிழந்துள்ளார். (ச-10)

## இமாம்களின் விவரம் பொலிஸாரால் சேகரிப்பு

மட்டக்களப்பு.ஒக.16
காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களில் கடமையாற்றும் இமாம்களின் பெயர் விவரங்கள் பொலிஸாரினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.
இந்தப் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களில் கடமையாற்றும் இமாம்களின் பெயர், முகவரி மற்றும் கடமையாற்றும் பள்ளிவாசல் போன்ற விவரங்கள் பொலிஸாரினால் திரட்டப்பட்டு வருகின்றன.
இந்த விவரங்கள் கடந்த மூன்று தினங்களாக காத்தான்குடி பொலிஸாரினால் திரட்டப்பட்டு வருகின்றன.
கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் இமாம்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அதற்காகவே இமாம்களின் விவரங்கள் திரட்டப்படுகிறது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விவரங்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் சிவில் பாதுகாப்பு குழுவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியால் திரட்டப்பட்டு வருவதான காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## வெள்ளப் பெருக்கினை தடுக்க வேலைத்திட்டம்

மட்டக்களப்பு.ஒக.16
மட்டக்களப்பு, நகர் வருடா வருடம் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுவரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக நீர் வடிந்தோடும் இடங்களை தேர்ந்தெடுத்து சீர்படுத்தும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த வேலைத்திட்டங்களை கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், இடர் முகாமைத்துவ பிரிவு ஆகியவை இணைந்து மேற்கொண்டு வருகின்றன.



மட்டக்களப்பு நகரின் நாவற்கேணி, கருவேப்பங்கேணி, சின்ன ஊறணி, இருதயபுரம், பார் வீதி, ஜெயந்திபுரம், தாமரைக்கேணி, கூழாவடி, மாமாங்கம் போன்ற கிராமங்கள் நீரில் மூழ்குவதற்கு ஒரு சிலர் ஓடைகளை அடைத்து வைத்திருப்பதே காரணமாகும்.
இயற்கையாக நீர் வடிந்தோடும் ஓடைகளைத் தடுத்து பெரும்பாலான மக்கள் தங்களுக்கு சாதகமான முறையல்ல மதில்கள் மூலம் தடுப்புச் சுவர்கள் அமைத்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் கே.சிவநாதன், மண்முனை வடக்கு பிரதேச செயலர் எஸ்.கிரிதரன் ஆகியோர் தெரிவித்தனர். (ச)




கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் பஸ் ஒன்றுக்கு சட்டத்துக்கு புறம்பாக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதைக் கண்டித்து வரையறுக்கப்பட்ட தென் கிழக்கு தனியார் பேருந்து அமைப்பினர் நேற்று வியாழக்கிழமை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பொதுபல சேனா பற்றவைத்த நெருப்பே சுடர்விட்டு எரிகிறது

## அதன் எதிரொலியே கிராண்ட்பாஸ் தாக்குதல் என்கிறது முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு

அம்பாறை.ஒக.16
கொழும்பு கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தாம் சம்பந்தப்படவில்லை என்று பொதுபல சேனா அமைப்பு கூறியுள்ள போதிலும் அவர்கள் எண்ணெய் ஊற்றிப் பற்ற வைத்த நெருப்பே இவ்வாறெல்லாம் சுவாலைவிட்டு எரிந்து கொண்டி ருக்கிறது.
இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.
கொழும்பு கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல்தீனுல் இஸ்லாம் பள்ளிவாசல் மீது பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
முஸ்லிம் மக்களின் மதச் சுதந்திரம் இந்த நாட்டில் அண்மைக்காலமாகக் கேள்விக் குறியாக்கப்பட்டு வரும் நிலையில், அரசு தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



நாட்டில் நல்லிணக்கமும், நிரந்தர சமாதான சூழ்நிலையும் நிலவுவதாகக் காட்டிக் கொள்ளும் அரசு நாட்டின் சிறுபான்மைச் சமூகமொன்றின் மத சுதந்திரம் கேள்விக் குறியாக்கப்படுவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது நல்லாட்சிக்கான வரைவிலக்கணமா என்ற கேள்வியை எழுப்புகின்றது.
ஜெனிவா வரைசென்று முஸ்லிம்கள் அரசுக்கும் நாட்டுக்கும் காட்டிய விசுவாசத்துக்கும், நாட்டுப் பற்றுக்கும் வழங்கப்பட்டுள்ள பரிசுதான் இன்று முஸ்லிம்கள் அனுபவிக்கும் அவலங்களாகும்.
பள்ளிவாசல்கள் மூடப்படுகின்றன. பள்ளிவாசல்கள், மத ஸ்தலங்கள் தாக்கப்படுகின்றன; காவி உடை தரித்தவர்கள் கூட இந்த ஈனச் செயல்களில் சம்பந்தப்பட்டும் இது வரை இத்தகையவர்கள் மீது எத்தகைய நீதி நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.
எனவே அரசு இனியும் மௌனம் காக்காது முஸ்லிம் சமூகம் மீதான, அடாவடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும்.
இதற்கான காத்திரமான நடவடிக்கைகளை எந்தவிதத் தயக்கமுமின்றி எடுப்பதுடன் இதற்குத் தூபமிடும் அமைப்புக்களைத் தடை செய்யவும் அரசு முன்வரவேண்டும்.
கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் சம்பவத்துடன் தமக்குத் தொடர்பில்லையென பொதுபல சேனா ஊடகங்கள் மூலம் தெரிவித்துள்ளது.
ஆனால் பொதுபல சேனா எண்ணெய் ஊற்றிப் பற்ற வைத்த நெருப்பே இன்று கிராண்ட்பாஸ் வரை சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றது.
எனவே பொதுபல சேனா முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கைவிட்டு, பௌத்த தர்மத்தின் வழி செயற்படவேண்டும்.
முஸ்லிம்கள் இன்று இந்த நாட்டில் அனுபவிக்கும் துன்ப, துயரங்களுக் கெல்லாம் தமது பலவீனமான அரசியல் தலைமைகளே காரணம் என்பதைப் புரிந்து கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## வெலிவேரிய தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் வேண்டும்


### ரோசி சேனாநாயக்க வேண்டுகோள்



கொழும்பு.ஓக.16
வெலிவேரிய தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.
ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் கருத்துக்களை வெளியிட்டபோதே இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வெலிவேரிய சம்பவத்தின் போது இராணுவத்தினர் பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.
இவ்வாறான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் போது யார் உத்தரவு பிறப்பித்தாலும் இராணுவத்தினர் பொறுப் புணர்ச்சியுடன் செயற்பட்டிருக்க வேண்டும்.
பயங்கரவாதிகள் அல்லது குற்றவாளிகளுக்கு எதிராக தாக்கதல் நடத்தப்படவில்லை. குடிதண்ணீரைக் கேட்டு போராடிய அப்பாவி மக்களே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். -என்றார். (ச)

# இலங்கையில் எரிவாயுவை பெறத் தயாராகிறது இந்தியா

கொழும்பு.ஓக.16
இலங்கை அரசால் மன்னார் வளைகுடாப் பிரதேசத்தில் அகழ்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவரும் எரிவாயுக் கிணறுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் இயற்கை வாயுக்களைப் பெற்று கொண்டு, அவற்றுக்குப் பதிலாக பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்க இந்தியா ஆயத்தமாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தத் தகவலை இந்தியப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான பேச்சுக்களை மேற்கொள்ள இந்திய கனிம எண்ணெய் வள அமைச்சர் விரைவில் இலங்கை வரவுள்ளார்.
கெயான் இந்தியா நிறுவனத்தினால் இலங்கையின் மன்னார் வளைகுடாப் பிரதேசத்தில் தோண்டப்பட்டுள்ள இரு எரிவாயுக் கிணறுகளில் ஏற்கனவே இயற்கை வாயுக்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.



இவற்றுக்கு மேலதிகமாக மன்னார் வளைகுடா மற்றும் காவேரிக் கடற்படுகையில் எஞ்சியுள்ள 13 கடற்படுகைகளில் அகழ்வுப் பணிகள் தொடர்பாக முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு இலங்கை அரசு சர்வதேச ரீதியில்கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

> கெயான் இந்தியா நிறுவனத்தினால் இலங்கையின் மன்னார்வளைகுடாப் பிரதேசத்தில் தோண்டப்பட்டுள்ள இரு எரிவாயுக்கிணறுகளில் ஏற்கனவே இயற்கை வாயுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## நிதி வர்த்தகச் சட்டத்தில் திருத்தம்; மேற்கொள்ள ஆராய்கிறது அரசு

கொழும்பு. ஓக.16
நிதி வர்த்தகச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
இந்தத் தீர்மானம் அண்மையில் நிதி அமைச்சில் இடம் பெற்றுள்ள உயர் மட்டத் தரப்புகள் கலந்துகொண்டுள்ள கலந்து ரையாடலின் போதே எடுக்கப்பட்டது.
இந்த திருத்தங்களின் மூலம் நாட்டின் நிதிக் கொள்கையை வேறு திசையொன்றுக்குத் திருப்பிவிடும் விதத்தில் செயற்பட வேண்டியுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாட்டிலுள்ள நிதி நிறுவனங்கள் சம்பந்தமாகத் தலை தூக்கியிருந்த பிரச்சினைகள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இந்த நிதி நிறுவனங்கள் மத்திய வங்கி வகித்துவரும் பொறுப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
அதனூடாக வைப்புத் தொகைகளுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படக் கூடும் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ச-22)

> வைப்புத் தொகைகளுக்கான பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படும்.

## வெலிவேரியச் சம்பவம்; அறிக்கை அடுத்தவாரம்

### சுரங்க ஆய்வு மையம் தகவல்

கொழும்பு.ஓக.16
வெலிவேரிய, ரத்துபஸ்வல சம்பவம் குறித்த அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.
இந்த அறிக்கை சுற்றாடல் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கட்டட ஆய்வு மற்றும் சுரங்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
ரத்துபஸ்பல சம்பவம் தொடர்பில் வேறு தரப்பினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை, பிரதேச மக்களுக்கு குழாய் நீர் விநியோகம் செய்யவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (ச)

## கப்பம் பெற்ற கணிப்பீட்டாளர் வசமாக மாட்டினார்




கொழும்பு.ஓக.16
அனுராதபுரம், பெரனி நகரிலுள்ள பஸ்தரிப்பிடத்தில் பஸ்களில் கப்பம் பெற்ற நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அனுராதபுரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, குறித்த நபர் கைதாகியுள்ளார்.
இவர் குறித்த பஸ் நிலையத்தின் நேரக் கணிப்பீட்டாளர் என்று தெரியவந்துள்ளது.
சந்தேகநபர் கைது செய்யப்பட்டவேளை பஸ் நடத்துனர் ஒருவரிடம் இருந்து 200 ரூபா பணம் பெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.
சந்தேகநபர் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச)

## மக்கள் முறையிட்டால் நடவடிக்கை எடுக்கலாம்

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு தகவல்

கொழும்பு.ஓக.16
இலங்கையில் சட்டத்தை மீறிச் செயற்படுகின்ற பொலிஸாருக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடுகளை செய்தால் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
பொலிஸார் சட்டப்படியான தமது கடமைகளை செய்யத் தவறினாலோ அல்லது சட்டத்தை மீறிச் செயற்பட்டாலோ அதுபற்றிய முறைப்பாடுகளை நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள பிராந்திய அலுவலகங்களில் மக்கள் நேரடியாக முறைப்பாடு செய்ய முடியும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஆரியதாச குரே தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கொழும்பிலுள்ள தமது தலைமையகத்தினூடாக முறைப்பாடுகளை பதிவுசெய்ய முன்வரவேண்டும்.
2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு இயங்கத் தொடங்கியது.
கடந்த ஆண்டில் 601 முறைப்பாடுகள் கிடைத்தன. அவற்றில் 591 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. இந்த ஆண்டில் இதுவரை 230 முறைப்பாடுகளில் 145 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது.
கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்டபோது, பொலிஸார் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாக கூறப்படுவது தொடர்பில் பொதுமக்களிடமிருந்து நேரடியாக முறைப்பாடு வந்தால், அது குறித்து விசாரணையை தொடங்க முடியும்.
கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்டபோது பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்ததாக முஸ்லிம் அமைச்சர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.
குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் உத்தியோத்தர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தேசிய பொலிஸ் ஆணைக் குழு விசாரிக்க மட்டுமே முடியும். ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரம் இல்லை.-என்றார். (ச)



அரச நிர்வாக சேவை பரீட்சையில் தமிழ்மொழி மூலம் சித்தியடைந்து ஒரு வருட பயிற்சியை முடித்துக் கொண்ட நிர்வாக அதிகாரிகள் 43 பேர் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சேவையில் அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை புதன்கிழமை அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்..

## நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சி

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு.ஓக.16
நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.
மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரின் பின்னர் நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.
போர் இடம்பெற்ற காலத்தில் வாரந்தோறும் குண்டுகள் வெடித்தன.
ஊடகங்களில் நாடு ஸ்திரமற்ற நிலையில் காணப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
போர் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ளன. நாட்டில் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்தும் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த முயற்சியில் அமெரிக்கா



மேன்மைட்ட நாடுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன.-என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போனோர் குறித்த விசாரணை முழுமையான பயனைத் தரட்டும்

போர்க் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனவர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்வதும் தேவைப்படும் பட்சத்தில் புலனாய்வு செய்வதும் ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளாக அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆள்கள் கடத்தப்பட்ட அல்லது காணாமற் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் கண்டறியப்படுமிடத்து. அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆள்களைக் கடத்தியதில் அல்லது காணாமற் போகச் செய்ததில் பங்குடையவர்கள் என்று விசாரணை மூலம் உறுதி செய்யப்படுவோர் மீது. சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணைக் குழுவுக்கு. ஜனாதிபதி அதிகாரம் வழங்கி உள்ளார்.

நாட்டின் வடக்கு. கிழக்கில் போர் நடைபெற்ற காலத்தில் மட்டுமன்றி. அது முடிவுக்கு வரும் வேளையிலும். அதனை அண்டிய காலப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி. சமூகத்தில் மக்கள் நலன் நாடி உழைத்த. மக்களின் மதிப்புக்கு உரியவர்களாக விளங்கிய. அறிவுசால் பிரமுகர்களும் கடத்தப்பட்டார்கள். காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்பது நீண்ட கால வேதனை அதிகாரம்.

ஏன்? போர் முடிவுற்ற சூட்டோடு சூடாக. இரண்டொரு வார இடைவெளியில். அப்பாவிகள் பலரும் கடத்தப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்பது வடக்கு. கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கேள்வியுற்ற சோகக் கதைகளாகவே வெறுமனே புதைந்து போயின.

போர் முடிவுற்ற கையோடு மட்டுமன்றி. அதற்கு முன்னரும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் நான்கு தானத்தை எட்டும் வரையிலான எண்ணிக்கையில் காணாமற்போகச் செய்யப்பட்டனர் எனக் கொள்வது தப்பன்று.

மிகவும் காலம் பிந்தி உருவாக்கப்பட்டுள்ள. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள காணாமற் போனவர்களைக் கண்டறியும் குழுவின் நியமனம். இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளரின் விஜயத்தை அண்டியது என்று கருதுவதும் பொருத்தம்.

எதுவோ-

தமது குடும்பத் தலைவருக்கு. பிள்ளைக்கு. மகனுக்கு. மகளுக்கு. மருமகனுக்கு என்ன நடந்தது அவர் எங்குற்றாரோ என்று நாளாந்தம் கண்ணீர் வடித்து வாடி வதங்கும் பெற்றோர் மற்றும் குடும் பத்தவருக்கு. ஜனாதிபதியின் அறிவிப்பு தற்காலிகமாகவேனும் ஆறுதல் தருமா என்பது இனிமேல் தான் தெரியவர வேண்டும்.

காணாமற்போனோர். காணாமற்போகச் செய்யப்பட்டோர் விடயத்தில். ஏனோதானோ என்ற மூடி மறைப்பைக் கையாண்ட அரசு. திடீரென கடந்த நவம்பர் மாதத்தை அண்டிய காலத்தில்-

காணாமற்போனோர் பட்டியலில் உள்ளோரில். முப்பத்தேழு பேர் மீது சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதாக திடு திப்பென ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு அறிவித்திருந்தது.

இந்த வருட முற்பகுதியில் (மார்ச் மாதத்தில்) காணாமற் போனோர் குறித்து கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியிருந்த கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கில் இருந்து சென்ற பெரும் எண்ணிக்கையிலான பாதிப்புற்றோர் வவுனியாவில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டிருந்த சம்பவம்-

காணாமற்போனோர் விவகாரத்தை மூடிமறைக்கும் திட்டத்துடன் அரசு செயற்படுவதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டறியும் குழுவின் தகவலின் பிரகாரம் மூவாயிரத்துக்கும் மேலானாரின் விவரங்கள் உள்ளதாகவும்- காணாமற்போனோரின் விவரம் கைவசம் உள்ளதாகவும்- தகவல்கள் தொடர்ந்து திரட்டப்படுவதால் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு என்றும். சுமார் ஐந்து மாதங்களுக்கு முந்திய தகவல்கள் தெரிவித்திருந்தன.

இப்போதும். எதிர்காலத்திலும் காணாமற்போகும் சம்பவங்கள் நடைபெறாது தடுப்பதற்கும். பொதுமக்களின் பாதுகாப்பு. நல்வாழ்வு கருதியும் காணாமற்போனவர்களைக் கண்டறியும் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது உள்ளார்ந்து செயல் வடிவம் எடுத்தால் நல்லதே.

காணாமற்போனோர். காணாமற் போகச் செய்யப்பட்டோர் விவகாரத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடுவதற்கே அரசு இப்போதும் எத்தனிக்கிறதோ என்ற சந்தேகம் பாதிப்புற்ற தமிழ் மக்களின் மனங்களில் எழுவது இயல்பே.

எந்தெந்த வகையான. என்னென்ன விதமான. விசாரணை மற்றும் பூசிமெழுகும் மாய்மால நடவடிக்கைகளை மேற் கொண்டாலும் பரவாயில்லை- காணாமற் போனோரை கண்டுபிடிப்பதில் உரிய பலனைத் தரும் செயற்பாடு அரச தரப்பில் இருந்து மேலெழுந்து வரும் என்று காத்திருக்க முடியுமா? நம்பினார் கெடுவதில்லை என்பதனை அரசு செயலில் காட்டுமா?

# எவரும் தொடர்ந்து துன்பத்தை மட்டுமே அனுபவித்தனர் என்பதாகச் சரித்திரமில்லை

## இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டிய பாடம் இது

ராஜராஜன்

**எவரும் தொடர்ந்து துன்பங்களையே அனுபவித்துக் கொண்டிருப்பதாக சரித்திரம் எதுவுமில்லை. ஆட்சியாளர்களின் நீதி நியாயமற்ற செயற்பாடுகள் என்றோ ஒரு நாள் அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிச்சயம் நிறுத்தியே தீரும். அதுமட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விலும் வசந்தம் வீசுவதை எவராலும் தடுக்க முடியாது.**

சிந்திக்கும் திறனை இழந்து தவறான முடிவுகளை மேற்கொள்ளும் ஆட்சித் தலைவர்கள் தமது நாட்டுக்கும். மக்களுக்கும் இன்னல்களையே ஏற்படுத்தி வருகின்றனர்.

உலக நாடுகளை ஆட்டிப்படைத்த ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரில் இருந்து இன்று ஆட்சியில் இருக்கும் தலைவர்களில் அநேகர் வரை இது தான் தொடர்கின்றது.

தமது ஆட்சி நீடிக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய பாதகச் செயல்களையும் மேற்கொள்வதற்குத் தயங்காதவர்கள் இவர்கள்.

ஹிட்லரினால் இழைக்கப்பட்ட கொடுமைகளின் தாக்கம் இன்றுவரை உணரப்படுகின்றது. ஆனால் சுமார் 60 லட்சம் யூத மக்களை விஷவாயுக் கூண்டில் அடைத்துக் கொன்ற அந்த ஈனனின் இறுதி முடிவு பரிதாபமானதாக அமைந்தது. அது இன்று வரை அவிழ்க்கப்பட முடியாத பல மர்ம முடிச்சுக்களையும் கொண்டுள்ளது.

ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டதால் ஜேர்மனி என்ற பலம் மிக்க நாடு இரண்டாகப் பங்கிடப்பட்டது.

ஒரே நாடு. ஒரே இனம் என வாழ்ந்த மக்கள் கதறக் கதறப் பிரிக்கப்பட்டனர். பெர்லின் சுவரும் எழுப்பப்பட்டது.

மேலும் ஜேர்மனியர்கள் ஏனைய நாட்டு மக்களால் புறமொதுக்கப்படும் நிலைகூட காணப்பட்டது.

இவைதான் இந்த உலகையே தனது காலடியில் கொண்டு வருவதற்குக் கனவுகண்ட சர்வாதிகாரி ஹிட்லர் தனது நாட்டு மக்களுக்கு வழங்கிய பரிசுகள்.

ஆனால் யூத மக்களுக்கு ஹிட்லரால் இழைக்கப்பட்ட கொடுமைகளே தமக்கும் ஒரு தாயகம் வேண்டுமென்ற சிந்தனையை அவர்களிடத்தில் தூண்டியது. இதன் விளைவாக இஸ்ரேல் என்ற புதிய தேசம் உதயமாகியது.

இன்றும் கூட யூதர்கள் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற போதிலும் இஸ்ரேல் நாட்டைத் தமது தாயகமாகப் போற்றி வணங்குகின்றனர்.

பாகிஸ்தான் நாட்டிலும் இதேபோன்றதொரு நிலை ஏற்பட்டது. இந்தியா வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அந்த நாட்டிலிருந்து பிரிந்து பாகிஸ்தான் தேசம் உருவானது. ஆனால் பூகோள ரீதியாக மேற் குப் பாகிஸ்தான். கிழக்குப் பாகிஸ்தான் என இந்த நாடு பிளவு பட்டுக் கிடந்தது. மேற்குப் பாகிஸ்தான் உருது மொழியைப் பேசுகின்ற மக்களையும். கிழக்குப் பாகிஸ்தான் வங்காள மொழியைப் பேசுகின்ற மக்களையும் கொண்டிருந்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் கிழக்குப் பாகிஸ்தான் பெரும்பான்மை மக்களைக் கொண்டிருந்த போதிலும் சிறுபான்மையினராகிய மேற்குப் பாகிஸ்தானியர்களே ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் எழுபதுகளில் பாகிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெற்றன. இதில் கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த முஜிபுர் ரகுமான் தலைமையிலான அவாமி லீக் கட்சி நாடாளுமன்றத்தின் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆனால் அப்போதைய பாகிஸ்தான் பிரதமராக இருந்த பூட்டோ தேர்தல் முடிவுகளை ஏற்கவில்லை. கிழக்குப் பாகிஸ்தானியர் ஒருவர் நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொள்வதையும் அவரால் பொறுக்க முடியவில்லை. இதனால் கிழக்குப் பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. மக்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனைச் சாக்காகக் கொண்டு பாகிஸ்தான் இராணுவம் நாட்டின் கிழக்குப் பகுதிக்குள் நுழைந்து கொண்டது. அங்கு வாழ்ந்த மக்கள் இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். பெண்களைக்கூட இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. கிழக்குப் பாகிஸ்தான் திட்டமிடப்பட்ட வகையில் நிர்மூலமாக்கப்பட்டது.

அண்டை நாடான இந்தியாவால் இவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தி அம்மையார் கிழக்குப் பாகிஸ்தான் மக்களைக் காப்பாற்றும் பொருட்டு பெருமளவு இராணுவத்தினரை அங்கு அனுப்பினார். பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவத்தினரால் தோற்கடிக்கப்பட வங்காள தேசம் என்ற புதிய நாடு உருவானது.

ஈரான். ஈராக். உகண்டா. எகிப்து. லிபியா. பிலிப்பைன்ஸ் உட்பட இன்னும் பல நாடுகளில் சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தி வந்த ஆட்சியாளர்களுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை இந்த உலகம் அறியும். ஆனால் அந்த நாட்டு மக்கள் தான் இதற்கான விலையைக் கொடுத்து வருகின்றனர்.

எமது நாட்டில்கூட நாடு சுதந்திரமடைந்து 65 ஆண்டுகள் கடந்த நிலையிலும் பெரும்பான்மையின ஆட்சியாளர்களின் மனநிலையில் மாற்றங்கள் எதனையும் காண முடியவில்லை.

மாறாக சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான கடும் போக்குத் தன்மையே அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

மக்கள் தொகையில் சுமார் முக்கால் பங்கினரான பெரும்பான்மையின மக்களின் பிரதிநிதிகளாகவே இவர்கள் தம்மைக் கருதுகின்றனர். இதனால் சிறுபான்மையின மக்களை ஒரு பொருட்டாக இவர்கள் மதிப்பதில்லை. மேலும் இங்கு வாழுகின்ற சிறுபான்மை இனத்தவர்கள் தமக்கு இடையூறாக இருப்பதாகவும் சிந்தனைகள் தோன்றியுள்ளன. இத னால் இவர்களை அடக்கி. ஒடுக்கி. அழிக்க வேண்டுமென்ற திட்டம் இவர் களின் மனதில் உருவாகியது.

இதனை நிறைவு செய்வதற்கான சந்தர்ப்பம் இலங்கையின் இறுதிப் போர் ரூபத்தில் வந்து வாய்த்தது. இதில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் தமது உயிர்களை இழந்தனர். ஏராளமானோர் அங்கவீனர்களாயினர். தமிழர்களின் சொத்துக்கள். வாழ்விடங்கள் என்பன திட்டமிடப்பட்ட வகையில் அழித்தொழிக்கப்பட்டன. மனிதாபிமானப் போர் எனப் பெயர் சூட்டப்பட்ட இந்தப் போர் மனிதாபிமானத்தின் நிழல் கூடப் பதியாது மிகக் கொடுமையான வகையில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்கள் இவ்வாறு அழித்தொழிக் கப்பட்ட பின்னரும் ஆட்சியாளர்களின் வெறி அடங்கியதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் இருப்பையே சிதைக்கும் நடவடிக்கைகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. தமிழர்களின் பூர்விக நிலங்கள் பெருமளவில் அபகரிக்கப்படுகின்றன. அவர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் மறைக்கப்படுவதுடன் பெரும்பான்மை இனத்தவர் தமிழர் பகுதிகளில் பெருமளவு குடியேற்றம் செய்யப்படுகின்றனர்.

தமிழர்கள் முழு நாட்டிலுமல்ல அவர்களின் பூர்விக இடங்களிலும் சிறுபான்மையினர் தான் என்ற மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது.

இவையெல்லாம் நல்லதற்கல்ல என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வேறு நாடுகள் பலவற்றில் இடம்பெற்ற சம்பவங்களை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். எவரும் தொடர்ந்து துன்பங்களையே அனுபவித்துக் கொண்டிருப்பதாக சரித்திரம் எதுவுமில்லை.


எனவே ஆட்சியாளர்களின் நீதி நியாயமற்ற செயற்பாடுகள் என்றோ ஒருநாள் அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிச்சயம் நிறுத்தியே தீரும். அதுமட் டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விலும் வசந்தம் வீசுவதை எவராலும் தடுக்க முடியாது.



# தேன் தேடி அலையும் தேனீக்கள்

சோபனா

மக்களது வேண்டுகோளுக்கு காது கொடுக்காத அரசியல் வாதிகளுக்கு இப்போது திடீரென எங்கிருந்து ஞானம் பிறந்திருக்கோ? தேர்தல் காலத்தில் வழமையாக இடம்பெறும் ஒன்றாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவையெல்லாம் தீர்வைப் பெற்றுத்தருமா?



எப்பவோ கட்டின கட்டடத் துக்கு வெள்ளை அடிச்சுப் போட்டு. நான் திறக்கிறன் . நீ திற என்று போட்டி போட்டுக்கொண்டு திறக்கினம். இதெல்லாம் செய்யவேண்டும் என்று அப்ப இவையளுக்கு தோன்றவில்லை. இப்ப திடீரென்று எங்கையிருந்து இவையளுக்கு இந்த ஞானம் வந்ததோ தெரியவில்லை. அரசியல் கட்சி தலைவர் ஒருவரால் திறக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா ஒன்றில் முதியவர் ஒருவர் இவ்வாறு வசை பாடிக் கொண்டு இருந்தார். என்னையா சொல்றீங்கள்? இந்தக் கட்டடம் எப்ப கட்டினது? ஏன் புதுசா வெள்ளை அடிச்சிருக்கினம்? என்றேன் நான் பாட்டிற்கு. அதை ஏன் கேக்கிறியள். கட்டடம் கட்டி வருசக் கணக்காச்சு. யார் திறக்கிறது என்ற போட்டியில் கிடந்தது. இப்பதான் நானா நீயா என்று போட்டியில நிக்கினம். அதுதான் திடீரென்று திறக்கினமாம். அவரது வசை பாடல் ஓயவில்லை. குடாநாட்டில் அண்மைக்காலமாக புதியபுதிய அபிவிருத்திப் பணிகள் மக்களது கோரிக்கைகள் கூட இல்லாமல் புதுமையாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இது சனத்துக்கு தெரியாம இல்லை. இது எப்படி நடக்குது? ஏன் நடக்குது? எதற்காக நடக்குது? அதன் பின்னூட்டல்களை தாராளமாக அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

பொதுமக்களின் தேவைகளுக்காக நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்திகளால் அவர்கள் பயனடைகிறார்களோ இல்லையோ அரசியல் வாதிகள் ஒரு வகையில் பயனடைகிறார்கள். தேர்தல் சூட்டில் யாழ்ப்பாணம் களை கட்டத் தொடங்கியுள்ளது. மக்களைக் கூட்டம் கூட்டி பிரசாரம் செய்ய முடியாத சூழ் நிலையில் வேட்பாளர்கள் இருப்பதனால் மக்களை அபிவிருத்தி என்ற போர்வையில் ஈர்த்து கூட்டம் கூட்டி கத்த ஆரம்பித்துள்ளார்கள். மீனவர்களுக்கு இளைப்பாறும் மண்டபம், மின்சாரம் கிடைக்கப் பெறாத இடங்களுக்கு மின்ஒளி, புதிய கட்டடங்கள் என எல்லாம் சரமாரியாக அபிவிருத்தி என்ற போர்வையில் நிறைவேற்றப் பட்டுக் கொண்டு இருக்கின்றன. நாங்கள் எத்தனை வருசமாக கோரிக்கை வைச்சம். ஐயா இதைத் திறந்து விடுங்கோ? எங்களையும் கண் திறந்து பாருங்கோ? கருணை காட்டுங்கோ ஐயா! என்று நாங்கள் வைக்காத கோரிக்கைகள் இல்லை.எழுத்து மூலக் கோரிக்கையிலிருந்து ஆர்ப்பாட்டம் வரைக்கும் எங்கட பிரதேசங்க ளின்ர அபிவிருத்திக்காக குரல் கொடுத்தம்.

செவிடன் காதில சங்கு ஊதினது போல யாருமே அவற்றைக் கண்டுகொள்ளவே இல்லை. நாங்களும் அலுத்துப் போய் அப்பிடியே விட்டிட்டம். இப்ப என்னடா என்றால் அதிசயங்கள் நிகழ்வதைப் போல திடீர் திடீரென நாங்கள் கேட்காததைக் கூட செய்யிறதுக்கு 'ரெடி'யா இருக்கினம். எல்லாம் எதுக்கெண்டு தெரியும்தானே? வடமாகாண சபைத் தேர்தலின் எதிர்பார்ப்புகள் மக்கள் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கு. எதைக் கொடுத்தால் எதை வாங்கலாம் என்று அரசியல் வெற்றிக்கான துடிப்போடு செய்ய ஆரம்பித்துள்ளார்கள். அவற்றில் ஒன்றுதான் இந்தப் புதுமையான அபிவிருத்திகள். முன்பெல்லாம் மக்களது வேண்டுகோளுக்கு காது கொடுக்காத அரசியல் வாதிகளுக்கு இப்போது திடீரென எங்கிருந்து ஞானம் பிறந்திருக்கோ? தேர்தல் காலத்தில் வழமையாக இடம்பெறும் ஒன்றாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவையெல்லாம் தீர்வைப் பெற்றுத்தருமா?

வாக்குகளின் வேட்டைக்காகக் களமிறங்கியுள்ள இவர்களால் தொடர்ந்து மக்களுக்கு நன்மையைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? இது எவ்வாறாக இருந்தாலும் வாக்காளர்களான அப்பாவிப் பொதுமக்கள் இரண்டும் கெட்டான் நிலையில் கைவிடப்பட்ட நிர்க்கதி நிலையில்தான் எப்போதும். வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் சரியாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தால் பிரதேச அபிவிருத்திகள் உரிய, நியாயமான விதத்தில் தானாகவே நடந்தேறி இருக்கும். தேர்தல் திருவிழாவுக்காக புதுப்பொலிவு பெறவேண்டிய அவசியம் தற்போது இல்லை. அரசால் பாரபட்சமின்றி மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்திப் பணிகள் சரியாக உரிய விதத்தில் நிறைவேற்றப்பட்டு இருந்தால் மக்களின் பொருளாதாரமும் உயர்வடைந்து இருக்கும். நலிவுற்ற மக்களது வாழ்வில் ஒளியேற்றப்பட்டு இருக்கும். இதுவரை மௌனமாக இருந்த அரச அதிகாரிகளும் தேர்தல் நாடகத்தில் தாங்களும் பாத்திரமேற்று இணைந்து புதிய காட்சிகளை மேடையேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மக்களது பொருளாதார முன்னேற்றம் குறித்து முன்னர் அக்கறை எடுக்க அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. தேர்தல் திருவிழா யாழ்ப்பாணத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது தேர்தலை எதிர்பார்த்து மக்கள் ஆரவாரப் படுகிறார்களோ இல்லையோ? வேட்பாளர்கள் ஆரவாரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தம்மை அடையாளப் படுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீ செய்வதா? நான் செய்வதா? என்ற போட்டா போட்டி அவர்களது முக்கிய செயற்பாடாக ஆகி உள்ளது. தேர்தலில் வேட்பாளர்கள் வெற்றிபெறுகிறார்களோ இல்லையோ, பாவம், அப்பாவி பொதுமக்கள் தோற்றுவிடுவார்கள். அவர்கள் தான் ஏமாற்றப்படுபவர்களாகவும் உள்ளனர். தற்போது மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் தடல்புடலாக இடம்பெற்றாலும், இதனால் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றி கணிப்பிட அரசியல்வாதிகளால் இயலவில்லை.

நலிவடைந்த மக்களுக்கு தருணத்துக்கு ஏற்றாற் போல் எதையாவது கூறி, எதையாவது கொடுத்து ஏமாற்றி, அவர்களிடமிருந்து பொன்னான வாக்குகளைக் கவர்ந்தெடுத்துக் கொள்வதே அவர்களது இன்றைய முக்கிய குறிக்கோள், அபிலாஷை, விருப்பு எல்லாமே. மற்றப்படி தேனீக்கள் போன்று இந்தத் தேர்தல் சமயத்தில் இங்கு படையெடுக்கும் தரப்புக்கள் தேர்தல் திருவிழா முடிந்ததும் நீயாரோ, நான் யாரோ என்ற பாணியில் பொதுமக்களை மறந்து தத்தம் பாட்டில் தத்தம் சோலியைப் பார்க்கச் சென்று விடுவர் என்பது யதார்த்த உண்மையொன்றே.

# மங்கையர் அனுஷ்டிக்கும் வரலட்சுமி விரதம்

இ.நிஷாந்தன்
இராமநாதபுரம்

இன்று வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத நன்னாளாகும்.

சனாதன தர்மம் என சிறப்பிக்கப்படும் இந்து மதத்தில் சைவர்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற விரதங்களிலே தனிப்பட்ட சிறப்புடைய விரதமாக கருதப்படும் விரதம் வரலட்சுமி விரதமாகும். விரதங்கள் ஒவ்வொன்றும் எமது வாழ்வியல் அம்சங்களோடு தொடர்புபட்டனவாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் இந்த வரலட்சுமி விரத மும் வாழ்வியல் நெறியை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

மகாவிஷ்ணு பகவானின் இதயக் கமலத்திலே வீற்றிருக்கும் திருமகளுக்கு வரலட்சுமி எனும் நாமமும் உண்டு. அஷ்டலட்சுமிகள் எண்மருடன் ஒன்பதாவதாக இணைந்து கொள்கிறாள் வரலட்சுமிதேவி. ஆவணி மாத துவாதசி வெள்ளிக்கிழமை அன்றே மகாலட்சுமி தேவி பாற்கடலிலே இருந்து தோன்றினாள் என புராணங்கள் கூறுகின்றன. எனவே ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்வரும் துவாதசி வெள்ளிக்கிழமையன்று இந்த விர தம் அனுஷ்டிக்கப்படுவதாகும். பெண் கள் வேண்டும் வரங்களை அளிப்ப தனால் மகாலட்சுமி வரலட்சுமியாக பூஜிக்கப்படுகின்றாள். வரலட்சுமி விரதத்தின் சிறப்பைப் பற்றி கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. ஒரு முறை பார்வதிதேவி சிவபெருமானிடம் பூலோகத்தில் உள்ள பெண்கள் என்றும் மாங்கல்யத்தோடு வாழ வேண்டும். அதற்கு ஏதாவது விரதம் இருக்கின்றதா? எனக் கேட்டாள். அதற்கு சிவபிரான் அதுவே வரலட் சுமி விரதம். மகாலட்சுமியின் அவதார நாளன்று அவளைப் பூசித்து வழிபடும் பெண்கள் மாங்கல்ய பாக்கியத்தையும் நல்ல கணவன்மார்களைப் பெற்றும், சகல செல்வங்களும் கிடைக்கப் பெறுவார்கள் என கூறியருளினார்.

இவ்வாறான இந்த விரதத்தை மகாலட்சுமி தாயாரே உபதேசம் செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. மகத நாட்டிலே சாதாரண குடும்பத்தில் பிறந்த பெண் சாருமதி. ஆயினும் அவள் மிகுந்த தெய்வ பக்தி கொண்டவள். எனவே அவள் தனது கணவன், மாமன், மாமியாரை மதித்து அவர்களுக்கு உரிய பணிவிடைகள் செய்து வந்தாள். இது கண்டு மகிழ்வடைந்த மகாலட்சுமி அவளது கனவிலே வரலட்சுமியாகத் தோன்றி வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் முறையைக் கூறி அருளினாள்.

அதன்படி சாருமதியும் அவ்வாறே வரலட்சுமி பூசையை செய்து என்றும் சுமங்கலியாக வாழும் பாக்கியம் பெற்றாள். இவ்விதமே பூமியிலே வரலட்சுமி விரதம் தோன்றியது.

எனவே இவ் விரதம் அனைத்து சுமங்கலிப் பெண்களும் கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் பெண்கள் தங்களது மாங்கல்யம் என்றும் நிலைத்திருக்கவும் தமது சுமங்கலிப் பாக்கியம் என்றும் நிலைத்திருப்பதற்கும் இந்த வர லட்சுமி பூசையை மேற்கொள்ள வேண்டும்.



சித்தங்கேணி சிவன் ஆலயத்தில் நடைபெறும் வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு வசந்தமண்டபத்தில் எழுந்தருளி இருக்கும் மகாலட்சுமி.

இந்தப் பூசை வழிபாட்டை மேற்கொள்ளும் முறையைச் சுருக்கமாக நோக்குவோம். விரதம் அனுஷ்டிக்கும் அன்று வெள்ளிக்கிழமை அதிகாலை எழுந்து நீராடி வீட்டைச் சுத்தம் செய்து வாசலில் அழகான கோலமிட்டு பூசை அறையில் மகாலட்சுமியின் படத்துக்குப் பூ, பூமாலைகள் சாத்தி, நைவேத்தியங்கள் படையல் செய்து மகாலட்சுமி தேவியை பக்தியோடு வழிபட வேண்டும். சர்க்கரைப் பொங்கல், உழுத்தம் வடை, கற்கண்டு, பால்,அன்னம் போன்ற நைவேத்தியங்கள் மகாலட்சுமிக்கு அளிக்கலாம். இப்போது இந்த விரதமானது விஷ்ணு மற்றும் அம்பாள் ஆலயங்களில் அனுஷ்டிக்கப்படுவதால் சுமங்கலிகள் அந்த ஆலயங்களிலே இந்தப் பூசை வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

அவ்வாறு இயலாதவர்கள் தமது வீட்டுப் பூசை அறையில் உரிய முறைப்படி இதனை மேற்கொள்ளலாம். பூசை செய்யும் போது மகாலட்சுமி அஷ்டகம், லட்சுமி அஷ்டோத்திர நாமாவளி, கனகதாரா ஸ்தோத்திரம், துளசி ஸ்தோத்திரம் என்பவற்றை கூறிவர வேண்டும். பின் பூசை நிறைவு பெற்றதும் காப்பினை அணிந்து கொள்ளலாம்.

எனவே பாற்கடலிலே பள்ளிகொள்ளும் விஷ்ணு பகவானுக்கு விருப்புடன் பாத பூசை செய்யும் அப் பாற்கடலிலேயே தோன்றிய மாலட்சுமி தேவியின் திருவருள் கருணையை பெற வேண்டுமாயின் பக்திச் சிரத்தையுடன் இந்த வரலட் சுமி விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.


அவ்வாறு இந்த விரதத்தைக் கடைப்பிடித்தால் நிறைந்த ஆயுளும் அதிக மாங்கல்ய பாக்கியமும் என்றும் அழிவற்ற சுமங்கலி எனும் நிலையையும் பெற முடியும். அது மட்டுமன்றி திருமணமாகாத பெண்களுக்கு மனத்திற்கினிய கணவன் கிடைத்து தீர்க்க சுமங்கலியாக வாழ்வார்கள். அத்துடன் வாழ்விலே அமைதியும் சகல செல்வங்களும் கிடைக்கப்பெற்று சந்தோஷம் நிலவும்.

இவ்வாறு சிறப்புக்கள் மிகுந்துள்ள இந்த வரலட்சுமி விரதத்தை அனைத்துச் சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் கடைப்பிடித்து செல்வங்கள் அனைத்துக்கும் அதிபதியாக இருக்கின்ற மகாலட்சுமித் தாயாரதும் அத் தேவியை தனது இதயக் கமலத்திலே கொண்டுள்ள வாசனை மிக்க துளசி மாலையைச் சூடிய விஷ்ணு பகவானதும் வற்றாத கருணையையும், திருவருளையும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.


# சூரிய மின்சக்தியில் இயங்கும் மடிக்கணினி உருவாக்கம்

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக கணனிகளின் அளவு சுருங்கி இன்று 'ரப்லட்' வரை சிறிதாக மாறியுள்ளது. இந்த நிலையில் அவற்றின் பாவனையை மேலும் இலகுபடுத்தும்பொருட்டு மேலும் பல தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன.
அதற்கிணங்க தற்போது சூரிய மின் சக்திக்கலத்தினால் செயற்படக்கூடிய மடிக்கணினிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நீடித்து செயற்படக்கூடிய மின்கலம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் 2 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்த பின்னர் சுமார் 8 தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக செயற்படக்கூடிய சக்தியை குறித்த மின்கலம் வழங்குகின்றது. இந்த நீண்ட பாவனையின் பொருட்டு இக்கணினிகளில் உபுன்டு (Ubuntu) இயங்குதளம் நிறுவப்பட்டுள்ளது. கனடிய நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இக்கணினிகளின் விலை 300 டொலர்கள் வரை இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்த பின்னர் சுமார் 8 தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக செயற்படக்கூடிய சக்தியை குறித்த மின்கலம் வழங்குகின்றது.



# மாணவர்களுக்கு உதவும் பயனுள்ள மென்பொருள்




கல்வியை ஆக்கிரமித்து வரும் கணினித்துறை காரணமாக ஒவ்வொரு கல்வித் துறை சார்ந்தும் காலத்துக்கு காலம் பல்வேறு மென் பொருட்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.
இவற்றின் வரிசையில் எசெஞ்சல் அனரொமி (Essential Anatomy) என்ற புதிய மென்பொருளும் இணைந்துள்ளது.
விஞ்ஞானத்துறையில் அதிக ஈடுபாடு உடைய மாணவர்களுக்கு இம்மென்பொருள் பெரிதும் பயனுள்ளதாக காணப்படுகின்றது.
அதாவது மனித உடலில் உள்ள அனைத்து பாகங்களையும் முப்பரிமாண முறையில் துல்லியமாகவும் விவரமாகவும் அறிந்து கொள்ள இம்மென்பொருள் பயன்படுகின்றது.
மேலும் இது மக்ஸ் இயங்குதள (Mac OS) கணினிகளிலும் ஐபோன் சாதனங்களிலும் செயற்படக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# உலகின் அதிக வலுவுடைய லேசர் லைற்றர் உருவாக்கம்

தற்காலத்தில் பல்வேறு துறைகளிலும் லேசர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் தொடர்ந்தும் லேசர் தொடர்பான பல ஆராய்ச்சிகள் இடம்பெற்றுவருகின்றன. இந்நிலையில் தற்போது உலகிலேயே அதிக வலுவுடைய எரிக்கும் தன்மை கொண்ட லேசர் லைட்டர் உருவாக்கப்பட்டுள்ளது. ரி லித்தியம் - அயன் (T lithium-ion) மின்கலத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த லேசர் லைற்றர் ஆனது ஒரு சதுர மீற்றருக்கு 2,000,000 வாற்ஸ் வலுவை பிறப்பிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் இதன் கதிர் அடர்த்தியானது சூரியனை விட 2,000 மடங்கு அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் கதிர் அடர்த்தியானது சூரியனை விட 2,000 மடங்கு அதிகம்



# கியோசேரா அறிமுகப்படுத்தும் நீரிலிருந்து பாதுகாப்பைக் கொண்ட ஸ்மார்ட் கைபேசி




கியோசேரா (Kyocera) நிறுவனம் நீரிலிருந்து பாதுகாப்பைக் கொண்ட கியோசேரா ஹைரோ எட் (Kyocera Hydro Edg) எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கை பேசியை அறிமுகப்படுத்தவிருக்கின்றது.
கூகுள் நிறுவனத்தின் அன்ரோயிட் (Android) 4.1 ஜெலி பீன் (Jelly Bean) இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இக் கைப்பேசி 1 ஜிபி வேகத்தில் செயற்படக்கூடிய அன்ரோயிட் 4.1 ஜெலி பீன் 4 அங்குல அளவுடைய தொடு திரை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
இவை தவிர 4ஜிபி சேமிப்பு நினைவகம், 5 மெகாபிக்சல்களை உடைய கமெரா போன்றனவும் இணைந்துள்ளன.

# வியூசொனிக் அறிமுகப்படுத்தும் அன்ரோயிட் ரப்லட்

வியூசொனிக் (ViewSonic) நிறுவனம் இந்த வாரம் வியூசொனிக் 100கியூ எனும் 'அன்ரோயிட்' இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட 'ரப்லட்' ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. 10.1 அங்குல அளவுடைய தொடு திரையினைக் கொண்ட இந்த 'ரப்லட்' ஆனது றொக்சிப் ஆர்.கே. (Rockchip RK) 3188 குவாட் அன் கோ புறோசெசர் (Quad&Core Processor) மற்றும் பிரதான நினைவகமாக 2 ஜிபி நினைவகம் (ரம்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதில் சேமிப்பு நினைவகமாக 16ஜிபி தரப்பட்டுள்ளதுடன் மைக்றோ எஸ்.டி. (Micro SD) 'கார்ட்'டின் உதவியுடன் இதனை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும். இதன் விலையானது 230 டொலர்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.



# வட்டக்கச்சி மம்மில் குளத்தின் தூய்மை பேணல் அவசியம்

## கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

கிளிநொச்சி, ஒக.16
வட்டக்கச்சி மம்மில் குளத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதை வலியுறுத்தும் அறிவித்தல் பலகைகளை நடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் விஷ்ணு சுவிஸ்கரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இவர் இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையிடம் கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார்.




அந்தக் கடிதத்தில்: வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள மம்மில் குளத்தின் அருகில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் தீர்த்தமாடும் புனித இடமாக இந்தக் குளமும் இந்தப் பகுதியும் காணப்படுகின்றன.
அந்தக்குளத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபையின ராகிய எமக்கு உள்ளது.
இந்தக் குளப் பகுதியில் சில வேளைகளில் குளத்தின் தூய்மையைக் கெடுக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.
ஆகையால் இந்தக் குளத்தின் புனிதத் தன்மையை பேணும் வகையில் குளத்தின் எல்லைக்குள் குப்பை கொட்டுதல், கழிவுப் பொருள்களைப் போடுதல், வாகனங்களைக் கழுவுதல், சலவை செய்தல், கால் நடைகளைக் குளிப் பாட்டுதல், சுடலைச் சாம்பல் கரைத்தல், மலசலம் கழித்தல், பாதணிகளுடன் உட்செல்லல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அறிவுறுத்தும் வகையில் முக்கியமான மூன்று இடங்களில் பிரதேச சபையால் பலகைகள் நடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-426)

# பயணிகளுக்குப் பயன்படாது செல்கின்ற பஸ்கள்



கிளிநொச்சி, ஒக. 15
கிளிநொச்சி, இரணைமடுச் சந்தி ஆகிய இடங்களுக்குச் செல்வதற்காக ஏ-9 வீதியிலுள்ள பரந்தன் சந்தியில் காத்திருக்கும் பயணிகளை பஸ்கள் ஏற்றாமல் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதே நிலைதான் பரந்தன், உமையாள்புரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் மக்களுக்கும் ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது.
ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் செல்லும் தனியார் மற்றும் அரச பஸ்களே இவ்வாறு பயணிகளை ஏற்றாமல் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி நகரப் பகுதிக்குத் தமது முக்கிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். பரந்தன் பகுதியில் மருத்துவ மனைகள் இல்லாததால் இங்குள்ள மக்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே செல்கின்றனர்.
மேலும் கிளிநொச்சி நகரப் பகுதியிலேயே கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், புனித தெரேசா பெண்கள் கல்லூரி, கிளி.இந்துக் கல்லூரி ஆகிய பிரதானமான பாடசாலைகளும் உள்ளன. இதனால் பரந்தன், உமையாள்புரம் ஆகிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் இந்தப் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.
ஆனால் இவர்களை பஸ்கள் ஏற்றாமல் செல்வதால் நீண்ட நேரம் இவர்கள் வீதியில் காத்திருப்பதைக் காணமுடி கின்றது. (க-426)

# வெறிச்சோடிய நிலையில் கனகராயன்குளம் சந்தை




மாங்குளம், ஒக.16
பெரும் பொருள் செலவில் அமைக்கப்பட்ட கனகராயன் குளம் பொதுச் சந்தை மக்கள் நாடாத நிலையில் வெறிச் சோடிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கனகராயன்குளம் கடைத் தொகுதியிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்தச் சந்தையை சேவா லங்கா நிறுவனம் பெரும் நிதியைச் செலவழித்து அமைத்துக் கொடுத்தது.
சந்தை அமைக்கப்பட்ட ஆரம்பத்தில் இங்கு மரக்கறி வகைகள், பழவகைகள், தேங்காய், மீன், இறைச்சி என மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் விற்பனை செய்யப்பட்டு வந்தன.
இதனால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தினமும் இந்தச் சந்தையை நாடிச் சென்று தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வது வழக்கமாக இருந்தது.
ஆனால் தற்போது ஒரேயொரு மரக்கறி வியாபாரி மட்டுமே இங்கு உள்ளார். அவரும் தமக்குத் போதிய வியாபாரம் நடைபெறுவதில்லையெனத் தெரிவித்தார். கனகராயன் கடைத்தொகுதியில் அமைந்துள்ள கடைகளில் மரக்கறி வகைகளும் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் சந்தையை நாடுவதில்லையென வும் அவர் தெரிவித்தார்.

> மீன்வியாபாரிகள் தமது வியாபாரத்தை இந்தச் சந்தையைத் தவிர்த்து வேறு இடங்களில் மேற்கொள் கின்றனர்

மேலும் மீன்வியாபாரிகள் தமது வியாபாரத்தை இந்தச் சந்தையைத் தவிர்த்து வேறு இடங்களில் மேற்கொள்வதைக் காண முடிகின்றது.
அத்துடன் இறைச்சிக் கடைகளுக்கான குத்தகையை எவரும் கோராத நிலையில் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.
எனவே கடைகளில் இடம்பெறும் மரக்கறி வியாபாரத்தை நிறுத்துவதுடன் முன்னர் போன்று மீன், இறைச்சி ஆகியவற்றையும் சந்தையில் விற்பனை செய்தால் கனகராயன்குளம் சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்து விடுமென இங்குள்ள பலரும் தெரிவிக்கின்றனர். (க)

# நெடுங்கேணி குளத்தில் சட்டவிரோத மீன்பிடி



நெடுங்குளம், ஒக.16
நெடுங்கேணியிலுள்ள குளங்களில் சிங்கள மக்கள் சட்டவிரோதமான வகையில் மீன்பிடியில் ஈடுபடுவதாக வவுனியா வடக்கு மீனவர் சங்கத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
நெடுங்கேணியிலுள்ள மருதோடைக்குளம், பெரியகுளம், இலுப்பைக்குளம், நெடுங்கேணிக்குளம் ஆகிய குளங்களில் சிங்கள மக்கள் குளங்களில் சுருக்குவலை, தங்கூசி வலை ஆகிய தடைசெய்யப்பட்ட வலைகளைக் கொண்டு இவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் குளங்களில் விடப்பட்ட மீன்குஞ்சுகள் அழிவடைவதால் எதிர்காலத்தில் குளங்களில் மீன்கள் இல்லாத நிலை காணப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-435)

# பலமான நிலையில் நீர்த்தடுப்பணை

## அக்கராயனில்



அக்கராயன், ஒக.16
கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் நீர்த்தடுப்பணை உடைப்பெடுக்க முடியாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
சுமார் 350 மில்லியன் ரூபா செலவில் அக்கராயன்குளம் பீஸ் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டது. இந்த புனரமைப்பின் போது வான் வெள்ளம் வீதியை குறுக்கறுத்துப் பாயாமல் உருவாக்கப்பட்ட நீர்த்தடுப்பணை பல தடவைகள் உடைப்பெடுத்தது.
இதனால் தற்போது பலமான நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. நீர் தடுப்பணை உடைப்பெடுக்கக் கூடிய இடத்தில் கற்கள் அடுக்கப்பட்டுள்ளன.
வான்வெள்ளம் பாய்ந்து நீர்த்தடுப்பணை உடைப்பெடுக்குமாயின் சமாதானபுர வயல் வெளியெங்கும் வெள்ளம் பாய்ந்து நெற்பயிர்கள் அழிவடையும் அபாயம் உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# தும்பு, நெசவுத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க கிளாலி மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஒக.16
கிளிநொச்சி மாவட்டம் பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிளாலிக் கிராம மக்கள் தமது கிராமத்தில் தும்பு மற்றும் நெசவுத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
போரின் பின்னர் மீள்குடியமர்ந்துள்ள தமக்கு தொழில் வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்தத் தொழிற்சாலைகளை அமைக்குமாறு மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இரு வருடங்களுக்கு முன்னர் மீள்குடியமர்த்தப்பட்ட இந்தக் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எவையும் இல்லாத நிலையில் வசித்து வருகின்றனர்.
வீதிகள், மின்சார வசதி என்பனவும் இங்கு இல்லை. கடற்றொழிலையே நம்பி வாழும் இங்குள்ள மக்கள் அத் தொழிலை மேற்கொள்வதற்கான வசதிகள் இல்லாத நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
தமக்கு வாழ்வாதார உதவிகள் அதிகளவில் தேவைப்படுவதாகவும் இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.
கடந்த போரின்போது கிளாலிக் கிராமம் பேரழிவுகளை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# உதவி வழங்க முன்வந்துள்ளது மகளிர் விவகார அமைச்சு

புதுக்குடியிருப்பு, ஒக.16
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் போரின்போது கணவன்மாரை இழந்து குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் பெண்களுக்கு உதவு வதற்கு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு முன்வந்துள்ளது.
இதன் முதற் கட்டமாக இத்தகைய பெண்களுக்கு தொழில் சம்பந்தமான பயிற்சிகளை வழங்குவதற்கான ஒழுங்குகளையும் அமைச்சு மேற்கொண்டுள்ளது.
முல்லை மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர் காரணமாக கணவனை இழந்த பெண்கள் தலைமை தாங்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வருமானமின்றிக் கஷ்டப்படுகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொண்டுள்ள அமைச்சு, மல்லிகைத்தீவு கிராமத்தைத் தெரிவு செய்துள்ளதுடன் அங்கிருந்து 40 பயனாளிகளை இந்தத் திட்டத்தில் இணைத்துள்ளது.
இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது. (க-115)

# சின்னப்பல்லவராயன்கட்டு மக்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

பூநகரியிலுள்ள சின்னப்பல்லவராயன் கட்டு கிராம மக்களுக்கு பூநகரி பிரதேச செயலகத்தினால் காணிகள் இனம் காட்டப்பட்டுள்ளன. கடந்த 13 ஆம் திகதி முற்பகலில் பூநகரிப் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் உள்ள தென்னம்பிள்ளைக் காணியில் 25 ஏக்கரை இந்த மக்களுக்கு இனம் காட்டினார்.
ஆனால் கிராம மக்கள் ஒன்று திரண்டு தமக்கு ஒதுக்கப்பட்ட காணியைத் துப்புரவு செய்வதற்குச் சென்றபோது ராணுவத்தினர் அவர்களைத் தடுத்தனர். இதனையடுத்து மக்கள் பூநகரி பிரதேசசெயலகத்துக்கு நிலமைகளைத் தொலைபேசிகள் வாயிலாக அறிவித்தனர். பின்னர் பூநகரிப் பிரதேச செயலர் எடுத்த பெரும் முயற்சி காரணமாக ராணுவம் மக்களை அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிக்குள் செல்வதற்கு அனுமதித்தது.
சின்னப்பல்லவராயன் கட்டு கிராமத்தில் உள்ள 48 குடும்பங்களில் 30 குடும்பங் களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான பெயர் விவரங்கள் வெளியாகிய நிலையில் பெரும் இழு பறிகளுக்கு மத்தியில் தற்போது காணிகள் இனம் காட்டப்பட்டுள்ளன.
இதேவேளை 100 ஏக்கர் கொண்ட தென்னம்பிள்ளைக்காணி இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



# வட்டக்கச்சி பிரதான வீதியை புனரமைக்க வேண்டுகோள்

அக்கராயன், ஓக.16
கிளிநொச்சி வட்டக்கச்சி கிராமத்துக்கான பிரதான வீதியைப் புனரமைத்து வழங்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.
இந்த வீதியில் கிளிநொச்சி நகரிலிருந்து 12 கிலோ மீற்றர் நீளத்துக்கு கற்கள் பரவப்பட்டு தார் ஊற்றப்பட்டுள்ள போதிலும் வாகனங்கள் துள்ளித் துள்ளிப்பயணிப்பதைக்காணமுடிகின்றது.
இதேவேளை, வட்டக்கச்சி கிராமத்தின் உள்வீதிகளும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.
நெற்செய்கையைப் பிரதான தொழிலாகக் கொண்ட இந்தக் கிராம மக்கள் தமது நெல் மூடைகளை வயல் நிலங்களிலிருந்து தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.
மழை காலங்களில் வட்டக்கச்சி கிராம வீதிகளில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பது வழமையெனவும் தெரியவருகின்றது. (க-18)



யாழ். தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின்போது உதயன் பணிமனைக்கும் வந்திருந்தனர். அவர்கள் உதயன் அச்சிடும் நடவடிக்கைகளை பார்வையிட்ட பின்னர் எடுக்கப்பட்ட படம். (ஒ-10)

# சாவகச்சேரி நகரசபை நிதி மூலம் மேலும் இரு வீதிகள் சீராக்கப்படும்

தென்மராட்சி, ஓக. 16
சாவகச்சேரி நகர சபையால் மேலும் இரு வீதிகள் சபை நிதியிலிருந்து புனரமைக்க நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நுணாவில் மேற்கில் உள்ள ஆறுமுகம் வீதி, நான்கு ஐந்து எல்லை வீதி ஆகியவை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த வருடம் சபையின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் போது உறுப்பினர்களால் வழங்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் பத்துக்கு மேற்பட்ட வீதிகள் சபைநிதியின் மூலம் புனரமைக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# தீவக மாணவருக்கு பசுப்பால்

யாழ்ப்பாணம், ஓக.16
தீவகக் கல்வி வயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பசுப்பால் வழங்க கல்வி வலயம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
வழங்கவுள்ள பசுப்பாலை தீவகப் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போர்களிடமிருந்து ஒரு லீற்றர் 50 ரூபாப் படி கொள்வனவு செய்யவுள்ளதாகவும்–
வழங்க விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் தமக்கு அருகிலுள்ள பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கேட்டுள்ளார். (வ-400)

# மக்களின் பங்களிப்புடன் மயான அபிவிருத்தி

கொழும்புத்துறை, ஓக. 16
துண்டி இந்து மயான அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மயான அபிவிருத்திப் பணிகளின் நிதி அறிக்கை வெளியீடு ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.
போரினால் சேதமடைந்த மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் அமைக்கப்பட்டு நுழைவாயில் கதவு அமைக்கப்பட்டு சங்க நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி மக்களின் பங்களிப்புடன் மயான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

# நல்லூரில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஓக.16
நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் கொக்குவில் பகுதியில் இடம்பெறவுள்ளன.
இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் பகுதியில் இடம்பெறும் செயற்பாடுகளில் நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சபை எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ள வுள்ளனர். (வ-7)

# புறநெகுமவின் கீழ் வீதிகள் புனரமைப்பு

பருத்தித்துறை நகர சபையால் புறநெகும திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபாய் செலவில் வாய்க்கால்கள் மற்றும் வீதிகள் புனரமைக்கப்படு கின்றன.
இதில்.75 மீற்றர் நீளம் கொண்ட பெருவெட்டி விஸ்வபுல ஒழுங்கை வாய்க்கால் புனரமைக்கப்பட்டு நிறைவுறும் நிலைக்கு வந்துள்ளது.
அதேபோல் 365 மீற்றர் நீளமான பருத்தித்துறை பெருந்தெருவுக்கு கொங்கிறீற் வீதியும் அமைக்கப்படவுள்ளது. இவ்விரு வேலைத்திட்டத்துக்கு 10 மில்லியன் ரூபா நிதிஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-422)

# முதுகல்விமாணி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.16
யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாத இறுதியில் இடம்பெறும்.
இதற்கான ஏற்பாடுகளை உயர் கற்கைநெறி பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார்.
குறித்த கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சையில் நாடு முழுவதும் இருந்து ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்டோர் சித்தியடைந்திருந்தனர். இம்மாத இறுதியில் இடம்பெறும் நேர்முகப் பரீட்சை மூலம் முதுகல்விமாணிக்கான ஆள்சேர்ப்பு இடம்பெறும். (வ-50)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். மனதுக்கு இதமான செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.



**இடபம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.



**மிதுனம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் நிறைவேறும்.



**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை களுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.



**சிங்கம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவ, மாணவிகளின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.



**கன்னி:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**நாளை**
ஆவணி-01 சனிக்கிழமை 17.08.2013
திதி: ஏகாதசி மா.05.25 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.07.09 வரை
சுபநேரம்: 03.05 - 04.35 வரை
இராகுகாலம்: 09.05 - 10.35 வரை



**துலாம்:** வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வீர்கள்.



**விருச்சிகம்:** அரச விடயம் தாமதமாக நிறைவேறும். நெருங்கியவர்கள் சிலரால் தர்ம சங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது.



**தனுசு:** வெளியூர் பயணங்கள் திருப்திக ரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதி கரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**மகரம்:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.



**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். மலைபோலிருந்த தடைகள் உடைபடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 5 | 7 | | | 4 | 2 |
| 5 | | 4 | | 3 | | | | |
| | 2 | | 9 | 6 | | | 8 | 3 |
| | | | 2 | 4 | | | | 8 |
| 2 | 9 | | | | | | 5 | 1 |
| 4 | | | | 1 | 9 | | | |
| 7 | 4 | | | 2 | 1 | | 9 | |
| | | | | 9 | | 6 | | 7 |
| 9 | 3 | | | 5 | 6 | | 1 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 4 | 2 |
| 5 | 8 | 4 | 1 | 3 | 2 | 7 | 6 | 9 |
| 1 | 2 | 7 | 9 | 6 | 4 | 5 | 8 | 3 |
| 6 | 7 | 1 | 2 | 4 | 5 | 9 | 3 | 8 |
| 2 | 9 | 3 | 6 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 4 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 | 7 | 6 |
| 7 | 4 | 6 | 8 | 2 | 1 | 3 | 9 | 5 |
| 8 | 1 | 5 | 4 | 9 | 3 | 6 | 2 | 7 |
| 9 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 20[illegible] இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு இந்தியாவின் வழங்கிய உதவிகள்

## சுதந்திர தின நிகழ்வில் பட்டியலிட்டார் மகாலிங்கம்

யாழ்ப்பாணம், ஒக.16


இந்தியா 67 ஆவது சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்திலும் கொண்டாட்ட நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டதையடுத்து துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் ஆற்றிய உரையின்போது இந்தியா இலங்கையில் மேற்கொண்டுள்ள வளர்ச்சி மற்றும் நலன்சார் பணிகளை பட்டியலிட்டு விவரித்தார்.

அவர் கூறியவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் முழு அளவிலான துணைத்தூதரக அலுவலகம் ஒன்று போதிய பணியாளர்களுடன் நிறுவப்பட்டுள்ளது. பல வளர்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்.தேவி பயணிகள் ரயில் அடுத்த மாதம் கிளிநொச்சியை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர்.

2012 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஏறத்தாழ 14 ஆயிரம் வீடுகள் பல்வேறு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த மே மாத வவ் வில் காங்கேசன்துறை துறைமுகம் தூர் வாரப் பெற்று அங்கே மூழ்கிக்கிடந்த உடைந்த தளபாடங்கள் அகற்றப்பட்டு ஆழமாக்கப்பட்டுள்ளது. இந்திய உதவியுடன் அச்சுவேலி கைத்தொழில்பேட்டை விரைவில் நிறுவப்படவிருக்கின்றது. 25 ஏக்கர் காணியில் 21 தொழில் நிலையங்கள் அமையவிருக்கின்றன.

இந்திய நன்கொடையின் மூலம் பெறப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்டு நோர்த்சீ நிறுவனத்தால் மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. அதன் உற்பத்தி 5 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (ப-7)



இந்தியாவின்67ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்றன. துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதையும் நிகழ்வில் பங்குபற்றியவர்களையும் காணலாம். (ஒ-7-86)

# தென்மராட்சி முன்பள்ளிகளில் ஆக்கத்திறன் கண்காட்சி



தென்மராட்சி, ஒக.16

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் வலயமட்ட ஆக்கத்திறன் பொருள்களின் கண்காட்சி நேற்று வியாழக்கிழமை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியை சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி.ரஞ்சனா நவரத்தினம், வேள்ட் விஷன் நிறுவன இணைப்பாளர் ர.ஜீ.ரொனசரோ ஆகியோர் கூட்டாகத் திறந்து வைத்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 83 முன்பள்ளிகளிடையே கச்சாய், கொடிகாமம், வரணி, சாவகச்சேரி, மட்டுவில், கைதடி ஆகிய இடங்களில் இடம்பெற்ற குடும்ப மட்டக் காண்காட்சிகளில் தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்கள் வலயமட்டக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

சாவகச்சேரி கோட்ட கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கொண்ட குழுவால் தெரிவுசெய்யப்படும் ஆக்கங்கள் மாகாண மட்ட கண்காட்சிக்குக் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தொல்பொருள் ஆய்வில் தென்னிலங்கை குழு

யாழ்ப்பாணம், ஒக.16

தென்னிலங்கைப் பகுதியில் இருந்து வருகை தந்துள்ள தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் யாழ்ப்பாணக் கடற்கரைப் பிரதேசங்களில் புராதன தொல்பொருள் சின்னங்களை மேலோட்டமாக ஆய்வு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே தொல்பொருள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் புராதன சின்னங்கள் சில அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ்ப்பாணக் கடற்பிரதேசங்களில் தென்னிலங்கைப் பகுதியைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் குழு மேலோட்ட ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

> ❝ காங்கேசன்துறை கடற்பகுதி உட்பட யாழ்ப்பாணத்தின் கடற்கரை பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காங்கேசன்துறை கடற்பகுதி உட்பட யாழ்ப்பாணத்தின் கடற்கரை பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னர்களது காலத்தில் பயன்பாட்டில் இருந்த மந்திரி மனை ம்ற்றும் மன்னர் கால பாவனைப் பொருள்கள் என் பன ஆய்வு நடவடிக்கைகளின் போது இனங்காணப்படலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலோட்டமான இந்த ஆய்வு வெற்றியளிக்கும் பட்சத்தில் முழுமையான ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆய்வுகள் ஊடாக யாழ்ப்பாணத்தின் புராதனச் சின்னங்கள் அடையாளப்படுத்தப் படவுள்ளன. (வ-14)

# ஆரோக்கிய வாழ்வு குறித்த கருத்தரங்கு இணுவிலில் நாளை

யாழ்ப்பாணம், ஒக.16

இணுவில் லயன்ஸ் கழகம் நடத்தும் ஆரோக்கிய வாழ்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

"அதி இரத்த அழுத்தம் தவிர்ப்போம்" என்ற தலைப்பில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் அதி இரத்த அழுத்தம் ஏற்படக் காரணம், பாதிப்படையும் இலக்கினர் யார், உடற் பருமனுக்கும் அதி இரத்த அழுத்தத்திற்கும் ஆன தொடர் புகள், இரத்த அழுத்த நோயின் குணங்குறிகள், சிக்கல்கள், இதற்கான சிகிச்சை, தவிர்க்கும் வழிமுறைகள் தொடர் பான பிரச்சினைகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளன.அத்துடன் வைத்திய பரிசோதனையும் இடம்பெறும்.

கருத்தரங்கில் பேராசிரியர் க.தேவராஜா, மருத்துவர்களான க.குமாரகுலசிங்கம், ஏ.நாகராஜா, உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றுவர். (ஒ-14)

# மாட்டிறைச்சிக் கடைக்கு சீல் நெளுக்குளத்தில் சம்பவம்

## பொது மக்களின் கோரிக்கையை அடுத்து நடவடிக்கை

வவுனியா, ஒக.16

நெளுக்குளம் மாட்டிறைச்சிக் கடைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பலரின் கோரிக்கைக்கு அமைவாக இந்தக் கடைக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

அண் மைக்காலமாக நெளுக்குளம் பகுதியில் மாடுகள் திருட்டுப் போவதாக பல்வேறு முறைபாடுகள் பொதுமக்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை சட்டத்துக்கு முரணான வகை யில் இந்தக் கடை செயற்படுவ தாக சுகாதாரப் பிரிவினரின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டதை அடுத்து அவர்களின் திடீர்ப் பரிசோதனையின் பின் னர் இந்த இறைச்சிக்கடை சீல் வைத்து மூடப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. மேலும் இந்தக் கடையை அகற்றக் கோரி பொது மக்கள் பெரும் போராட்டத்துக்குத் தயாராக இருந்ததாகவும், கடை சீல் வைத்து மூடப்பட்டதால் முரண்பாடு கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டு சுமூகமானதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமெனத் தெரிவித்த நெளுக்குளம் பொலிஸார் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாட்டையும் முன்னெடுத்துள்ளனர்.(க-402)

# கதிர்காமத்துக்கு ஞாயிறன்று விசேட பஸ் சேவை




யாழ்ப்பாணம், ஒக.16

கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபையால் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து விசேட பஸ் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் காலை 8 மணியிலிருந்து பயணிகள் வருகைக்கு ஏற்ப சேவை இடம்பெறும். இந்த பஸ் சேவை யாழ்.மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து வவுனியா, ஹபறணை ஊடாக கதிர்காமம் ஆலயம் வரை சேவையில் ஈடுபடும் என்று சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

# இளைஞர், யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பு செயலமர்வு



யாழ்ப்பாணம், ஒக.16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமானது. நல்லூர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேஷ் திருநாதன் வழிகாட்டல் கருத்தரங்கை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்.

உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள மனித வள வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய நல்லூர் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளர் வே.முத்ரூபன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

ஆளுமை விருத்தி தொடர் பாடல் தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்தல், தொழில் வழிகாட்டல், சுயதொழில் வாய்ப்பை ஊக்குவித்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய இந்தச் செயலமர்வு 8 தினங்கள் இடம்பெறவுள் ளன. (வ-7)

# மாற்றுத் திறனாளி மாணவருக்கு கலைத்திறன் கண்காட்சி உடுவிலில்

யாழ்ப்பாணம், ஒக.16

மாற்றுத்திறனுடைய மாணவர்களின் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை உடுவில் ஆர்க் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்சகோதரி அருள் மத்தியூஸ்பிள்ளை கலந்து கொள்வார்.

மாற்றுத்திறனுடைய மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்க அவர்களால் உருவாக்கப்பட்ட கலைத் திறன்களையும், ஆற்றல்களையும் கண்டு களித்து ஊக்குவிக்குமாறு பாடசாலை நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ)

உதயன்
16/08/2013

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.07.1940

உதிர்வு
16.08.2010

அமரர்
**தர்மலிங்கம் தர்மராஜா**

[முன்னைநாள் உதவித் தொழில் ஆணையாளர்,தொழில் திணைக்களம் வவுனியா]

**திதி:13.08.2013**

பாசஉறவொன்று பார் விட்டுப் போய் மூன்றாண்டு சென்றதுவோ!
நேச முகம் தேடி நெடுநாளாய் காத்திருந்தோம் அப்பா!
உங்கள் வாசம் தன்னும் நுகர முடியவில்லை வாடுகின்றோம்
விநாயகர் பாதத்தில் சாந்தி பெற்றிடுங்கள் அப்பா !

'தேவி மஹால்',
கோப்பாய் மத்தி, கோப்பாய். (31389)(5-6-3)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன் மற்றும்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தையா சுப்பிரமணியம்**

தோற்றம்
22.10.1943

மறைவு
28.07.2012

குடும்பத்தின் ஒளிவிளக்காய், குவலயத்தே மிளிர்ந்திரே!
கூரறிவு கொண்டவராய், எமையென்றும் வளர்த்தீரே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய் திகழ்ந்திரே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோம் உம்மை.

32/14, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**ஞானேஸ்வரி (மனைவி)**
மற்றும் குடும்பத்தினர்.
(31377) (45.6.3)

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வ பரப்ரஹ்மணே நம

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07.02.1929

மறைவு
28.07.2012

அமரர் **செல்லையா நடராஜா**

திதி: 16.08.2013

என்றென்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.

நாகலிங்க சுவாமிகள் வீதி.
சங்கானை. 077 016 6030
(31290)(6.7.11)

# நீங்காத நினைவுகளில்...
## ஐந்தாம் ஆண்டு



மண்ணில்
11.12.1987

விண்ணில்
16.08.2008

செல்வன்
**வீரசிங்கம் செந்துஷன்**
(மாசார் பளை)

என் அன்புச் செல்வமே துஷாக்குட்டியே
குறும்புக் கதைகள் பலபேசி எல்லோர்
மனங்களிலும் இடம்பிடித்த என் கடைக்குட்டியே
வித்தைகள் பல காட்டிய வித்தகனே இப்போ
நீ துஷா இல்லாதது என் வீடே இருண்டதய்யா
நீ இல்லாத வேதனை சொல்லிலடங்காதய்யா
எமக்கு சோகமே சொத்தாகி துயரமே
தொடர் கதையாகியுள்ளதய்யா
எப்படி ஆறுவோம் முடியுதில்லையைய்யா
கண்கெட்ட ஜமன் என்பிள்ளையின்
உயிரை எடுத்தானோ ஐயா மீண்டும்
எம்மிடம் ஓடி வந்திடய்யா.

உன் துயரலையில் பரிதவிக்கும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அ[illegible], பெறாமக்கள்,
[illegible]ஷன், அபிஷன்

வீரசிங்கம்
மாசார் பளை
(31393) (7.6.3)

# றோட்டரிக் கழக ஏற்பாட்டில் நாளை விருந்தினர் உரை

யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் "நீங்கள் தலைமை தாங்கப் போகிறீர்களா, பின் பற்றப் போகிறீர்களா?" என்ற தலைப்பிலான விருந்தினர் உரை நாவலர் வீதியில் உள்ள 'உதயன்' விருந்தினர் விடுதியில் நாளை சனிக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

விருந்தினர் உரையை நியூயோர்க்கிலுள்ள விற்மன் பாடசாலையின் பேராசிரியரும் மானிப் பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் அதிபரு மாகிய அலெக்ஸ் தேவரஞ்சன் நிகழ்த்துவார்.

ஆர்வமுள்ளவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று யாழ். றோட்டரி கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ)

# இன விரோத வன்முறைகளை தடுத்து நிறுத்துவது அரசின் கடமை

யாழ்ப்பாணம், ஓக.16

நாட்டில் மீண்டும் இன விரோத வன்முறைகள் இடம்பெறாது பாதுகாக்க வேண்டி யது அர சின் பொறுப்பாகும். இத்தகைய வன்செயல்கள் இடம் பெறாது தடுத்து நிறுத்தவேண்டும். இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் பி.ஏ.எஸ். சுபியான் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி கொழும்பு கிராண்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்டமை தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிராண்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். எமது நாட்டில் வாழும் மக்களுக்கு இனமத பேதம் இன்றி அனைவருக்கும் சமவுரிமை வழங்க வேண் டும் என்பது ஜனாதிபதியின் கொள்கை. எனி னும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை ஏன் அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. சகல இன மக்களதும் மத உரிமைகளைப் பாதுகாப்பதுடன் மதத் தலங்களையும் பாது காத்து கண்ணியப்படுத்த வேண்டும்.

மீண்டும் எமது நாட்டில் எந்த விதமான இன விரோத செயல்களும் இடம்பெறாது பாதுகாக் கப்பட வேண்டியது அரசின் கடமையாகும். பள்ளி வாசல் தாக்கப்பட்ட சம்பவம் இஸ்லாமியருக்கு எதிரான செயலாக் கருதப்படுகிறது. இதனை உட னடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-14)

# தீவக வலயத்துக்கு சங்கீத பாடநூல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்கள் பயன் பெறக்கூடிய சங்கீதப் பாடப் புத்தகங்கள் தீவக வலயத்துக்கு நலன் விரும்பி ஒருவரால் வழங் கப்பட்டுள்ளன. தீவக வலயத்துக்கு உட்பட்ட மாணவர்கள் இந்தப் புத்தகங்களைப் பெற்று பயன் பெறலாம் என்று கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் அறிவித்துள்ளார். (ஓ-14)

# பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் இன்று நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஓக.16

பரந்தன் பொதுநோக்கு மண்டபத் தில் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கண்டா வளைப் பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில் நடமாடும் சேவையொன்று இடம்பெறவுள்ளது.

கபே அமைப்பின் அனுசரணை யுடன் கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த நடமாடும் சேவை யின்போது தேசிய அடையாள அட்டை முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றை வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

மேலும் புதிய மற்றும் தொலைந்த தேசிய அடையாள அட்டைகள் முதியோர் அடையாள அட்டைகள் என்பவற்றை இங்கு வைத்துப் பெறவிரும்புவர்கள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் சமுகம் தருமாறும் புகைப்படம் இலவச மாக எடுத்து வழங்கப்படும் எனவும் கண்டாவளைப் பிரதேச செயலத்தினால் அறிவிக்கப்பட்டுள் ளது. (க-426)

# கண்ணீர்த் துளிகள்



14.08.2013 அன்று
இறைவனடி சேர்ந்த
**கந்தையா அம்பலவாணர்**

*(ஸ்தாபகரும், தலைவரும்
மேற்கன்ரைல் பாதுகாப்புச் சேவை, யாழ்ப்பாணம்)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மேற்பார்வையாளரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும்,
**மேற்கன்ரைல் பாதுகாப்புச் சேவை, முல்லைத்தீவு மாவட்டம்.** (31385)(3.6.7)

# மரண அறிவித்தல்

## முருகவேல்த்தேவர் சுப்பிரமணியம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும் இந்தியாவை வசிப் பிடமாகவும் கொண்ட முருக வேல்த்தேவர் சுப்பிரமணியம் (14.08.2013) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முரு கவேல்த்தேவர் மற்றும் சீனி யம்மா தம்பதியரின் அன்பு மக னும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரு ம், சரவணன், சுகன்யா, காளீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்புலட்சுமி (யாழ்), கருப்பையா (யாழ்), மீனாட்சி (இந்தியா), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சாந்தினி (இந்தியா), வசந்தினி (இந்தியா) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், சங்கிலித்தேவரின் அன்பு மருமகனும், பழனி வேல்த்தேவர் (இந்தியா), சுப்பிரமணி (இந்தியா), விஜயபாண்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(15.08.2013) வியாழக் கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P- 077 175 8891 (31378)(3.6.11)

தகவல்:
M.கருப்பையா
(சகோதரன்)

# மரண அறிவித்தல்

## கந்தையா தருமராசா



ஆசிரியமணி ஆறுமுகம் வீதி, கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமராசா 13.08.2013 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், டச் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அருமை மருமகனும், இராசலட்சுமியின் அன்புக்கணவரும் கஜேந்திரன் (ஆஸ்திரேலியா), கலைவாணி (நோர்வே), கலைவதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிசானி (ஆஸ்தி ரேலியா), நெவில் (நோர்வே), தவராசா (கனடா) ஆகியோரின் அருமை மாமனும், கவின், அபினா (ஆஸ்திரேலியா), டால்ற்றன், எல்றன், ஜரின் (நோர்வே), துவாரகா, அர்ஜிதன், அபரினன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மாணிக்கர் சிவக்கொழுந்து, தம்பையா ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற நடராசா, கதிரமலை, வள்ளியம்மை மற்றும் அன்னம்மா, புவனேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற திலகவதி, அப்புத்துரை மற்றும் மயில்வாகனம், கமலாதேவி, இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் நாகராசா, இராசலிங்கம், அருமைத்துரை, தேவராசா, கதிர்காமநாதன், திருநாவுக்கரசு, தவமணிதேவி, பூமலர், பாக்கியலட்சுமி, தேவராணி, புஸ்பராணி ஆகியோரின் அருமை மைத்துனரும், யாழேந்தி, லோகினி, மனோகரி, மாலினி, காலஞ்சென்ற திருலோகவரன் ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (31387) (45.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திட்டமிடல் அலுவலருக்கு மூன்றுநாள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஓக.16
வடமாகாணத்தில் பல்வேறு அரச திணைக்களங்களில் கடமையாற்றும் திட்டமிடல் அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி நேற்று முன்தினம் யாழ்.ஸ்ரெப் நிறுவனத்தில் ஆரம்பமாகின.
வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி நெறியில் 25 பட்டதாரி அரச அலுவலர்கள் கலந்துகொண்டனர்.
பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் கலந்துகொண்டு 'குறிக்கோள் நோக்கிய திட்டமிடலின் பயன்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.
சிறப்பு அதிதியாக வடமாகாண உட்கட்டுமான அமைச்சின் செயலாளர் ஏ.ஈ.எஸ். இராஜேந்திரா சிறப்புரையாற்றினார்.
வளவாளர்களாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரும் முன்னாள் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான எவ்.ஜோன், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் ஜெ.ஜெ. சி.பெலிசியன் ஆகியோர் குறிக்கோள் நோக்கிய திட்டமிடல் தொடர்பான கருத்துரைகளை வழங்கியுள்ளனர். (எ-41)

## பஸ் சீரின்மையால் பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 16
சித்தன்கேணியூடாக அராலி யாழ் செல்லும் 789 இலக்க தனியார் பஸ் சேவையும் - இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அரச பஸ் சேவையும் சீராக இடம்பெறுவதில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



காலை வேளையில் ஆஸ்பத் திரி செல்லும் நோயாளர், பாடசாலை பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள், அரச அலுவலர்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
தாங்கள் விரும்பிய நேரத்தில் பஸ் சேவைகளை ஆற்றுவதாகவும், நேர ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படாததால் இவ்வாறான சேவைகளில் எவ்வித பயனுமில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதேவேளை, அராலி பொது அமைப்புக்களின் ஒன்றியம் பஸ் சேவைகளை சீராக மேற்கொள்ளுமாறு கோரி மக்களின் கையெழுத்து கடிதத்தை சம்பந்தப்பட்ட இரு சபைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் இதன் பிரதியை யாழ்.அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளது. (எ-50)

## வருமானங்களை அதிகரிப்பது தொடர்பாக விசேட பயிற்சி

வடமாகாண உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்- அதிகா ரிகளுக்கான வருமான மூல கங்களை அதிகரிப்பது தொடர் பான விசேட பயிற்சி அநுராதபுரம் லியோனி ஹோட்டலில் இடம்பெற்றது. உள்ளூராட்சி மற்றும் நல்லாட்சி நிறுவனப் பிரிவின் தலைவி சிராணி விஜயசுந்தரம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அதிகாரிகள் உட்பட 42 பேர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் பிரதம அதிதி யாக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கலந்து கொண்டு நல்லாட்சி தத்துவத்தின் கீழ் ஓர் உள்ளூராட்சி சபையினர் மக்களுக்கானமுழுச்சேவையை நான்கு வருடங்களில் எவ்வாறு வழங்கலாம் என்ற கருத்தையும், சட்டத்தரணியும் நல்லாட்சி மற்றும் சட் டப்பிரிவு ஆலோசகர் எச்.ஜி. சிறில் ஜெயதிஸ்ஸ வருமான மூலகங்களை எவ்வாறு செயற்படுத்துவதன் மூலம் கூடிய வருமானங்களைப் பெறலாம் என்ற தலைப்பில் கருத்து ரையாற்றினர்.
மேலும் நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாளர் ச.மணிமா றன் நிகழ்ச்சிக்கான தொகுப்பு ரைகளையும், ஊவா சக்தி நிறுவனத்தின் தலைவர் குமார் நடேசன் வடக்கு தெற்கு அனு பவப் பகிர்வு மூலம் உள்ளூராட்சி சபை அலுவலர்கள் , உறுப்பினர்கள் அடைந்து கொண்ட அனுபவங்களையும் விளக்கினார்கள். (எ-50)

## ரத்துபஸ்வல பிரதேச நீரில் அமிலத்தன்மை அதி உச்சமட்டத்தில்

கொழும்பு.ஓக.16
வெலிவேரிய.ரத்துபஸ்வல பிரதேசத்து நீரில் அமிலத் தன்மை கலப்பு அதி உச்ச மட்டத்தில் நிலவுகிறது என்று இலங்கைப் பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தால் மேற்கொள்ளப் பட்டுள்ள பரிசோதனை ஒன்றில் வெளிப்பட் டுள்ளது.
ரத்துபஸ்வல பிரதேசத்தில் அமைந்துள்ள சர்ச்சைக்குள்ளாகியுள்ள தொழிற்சாலைச் சுற்றாடலில் ஒரு கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் நீர் மாதிரிகள் பரி சோதனைக்கு உள்ளாக்கப்பட்டபோது, அந்த நீரில் அமிலத் தன்மை உச்ச மட்டத்தில் நிலவுவது உறுதிப்படுத்தப்பட்டுள் ளது என்று இலங்கை பொறியியல் தொழில் நுட்ப நிறுவனத்தின் தலை வர் விமல தர்ம அபே விக்கிரம தெரிவித்தார்.
இந்தப் பிரதேசத்தில் நீரில் அமிலத் தன்மை உச்சமடை வதற்கு தொழிற்சாலையில் இருந்து வெளியேற றப்டும்கழிவுப் பொருள்கள் காரண மாயிருக்கக் கூடும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, மேலும் விரிவான பரிசோ தனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா அம்பலவாணர்

Rtd. Staff Sergeant- Sri Lankan Army ordinance Corp.
Chairman - Mercantile Security Service (Pvt) Ltd

அவர்களின் மறைவு சொன்ன செய்தி கேட்டு செய்வதறியாது திகைத்து நிற்கின்றோம். நாம் சோர்ந்து போகும் செயற்பாடுகள் கண்டு நகைப்புக் கலந்த வார்த்தைகளால் எம்மைத் தட்டிக் கொடுத்து நிறுவனத்தை ஆல் போல் வளர்த்து அறுகுபோல் வேரூன்ற வைத்த நெஞ்சகலா நேயனின் மறைவு கண்டு துயருறுகின்றோம்.
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து, துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து துயர் பகிர்கின்றோம்.

**மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்**
**அலுவலக ஊழியர்களும் மேற்பார்வையாளர்களும்**
**651/12, நாவலர் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.**

(31391)(6.3.11)

## மரண அறிவித்தல்

### செபமாலை டேவிற் (செல்லக்கிளி)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை டேவிற் (செல்லக்கிளி) 12.08.2013 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை-அன்ரனிக்கா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மைக்கல்-ஞானம்மா தம்பதியரின் மருமகனும், லீலியற்றின் அன்புக் கணவரும், நவநீதன் (ஜேர்மனி), சுகிர்தா, டெலிசியா (இத்தாலி), டனிசியஸ் (இத்தாலி), ஜெனிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கீர்த்திகா (ஜேர்மனி), நீதிராசா, ஜீவன் (இத்தாலி), ஜீவிதா (இத்தாலி), காலஞ் சென்ற டேமியன் ஆகியோரின் மாமனாரும், அபிஷாக், ஜெனிபர், அஜி, செரோன், ஜெஷானியா, ஜோசுவா, டானியல், ஜகாசியா, யாபேஸ், டேனுஜா ஆகியோரின் பேரனும், காலஞ் சென்றவர்களான ஞானம்மா, முத்தம்மா மற்றும் கனகம்மா, திருச்செல்வம், பூமணி, சரசி, இராசேந்திரம், காலஞ் சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/1, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


தகவல்:
லீலியற் (மனைவி),
பிள்ளைகள்.

(31392) (7.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தையா அம்பலவாணர்

Rtd. Staff Sergeant - Sri Lankan Army Ordinance Corp,
Chairman - Mercantile Security Services (Pvt) Ltd.



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொழுது 651/12, நாவலர் வீதி, நல்லூரில் வசித்து வந்தவருமான கந்தையா அம்பலவாணர் 14.08.2013 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மூத்தபிள்ளை தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம், செல்லம்மா, சின்னம்மா, பொன்னையா, நல்லதம்பி, பவளம்மா ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கார்த்திகேசு, சுப்பிரமணியம், சிவக்கொழுந்து, பரிமளம், பேரம்பலம், மங்கையர்க்கரசி, நமசிவாயம், பரமசிவம், பத்மநாதன், சுப்பிரமணியம் மற்றும் நடராசா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறீதரன் (ஹொலன்ட்), கமலாசினி (நோர்வே), ரவீந்திரன், நிதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசாயீஸ்வரி (ஹொலன்ட்), பரஞ்சோதிநாதன் (நோர்வே), சுகுமாரன் (நிர்வாகப் பணிப்பாளர் - மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவை தனியார் நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரோஜன் (ஹொலன்ட), நேமிக்கா (ஹொலன்ட்), காலஞ்சென்ற யசோதரன் மற்றும் கேளிதரன் - தவநிதி, ரமேஷ்தரன் - பிரியந்தி, தாருணி - பகீரதன், தர்சிகா, லவீனா, செந்தூரன் (பிரான்ஸ்), டில்லிக்குமாரன் (ஜேர்மனி), நிரோஷி (A/L-2013, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் கிஷாந்தன், ரம்மியா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

651/12, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 35 வயதைக் கடந்துள்ள பட்டதாரிகளுக்கு அநீதி

## சேவை நிரந்தரமில்லை என்கிறது பட்டதாரிகள் சங்கம்

கொழும்பு.ஓக.16
அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 35 வயதைக் கடந்துள்ள பட்டதாரிகளின் சேவை நிரந்தரமாக்கப்படவில்லை. அதன் காரணமாக 5.000 பேர் வரையிலான பட்டதாரிகள் பெரும் அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று நிரந்தர நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
இந்தப் பட்டதாரிகள் ஓராண்டு காலத்துக்கும் மேலாக அரச நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். எனினும் அவர்களது சேவை நிரந்தரமாக்கப்படாதிருப்பதால் அவர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பட்டதாரிகள் சங்கத்தின் பொதுச் செயலர் சந்தன சூரியாரச்சி தெரிவித்தார்.
ஏனைய பட்டதாரிகளின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள நிலையில், 35 வயதைக் கடந்துள்ள பட்டதாரிகள் இன்னமும் 10.000 ரூபா என்ற சொற்ப சம்பளத்துக்குச் சேவையாற்றி வருகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
அரச சேவைக்குச் சேர்த்துக் கொள்ளும் சாதாரண வயதெல்லை 45 வயது என்ற போதிலும், தற்போதைய அரசு அந்த வயதெல்லையை 35 வயதாகக் குறைத்துவிட்டுள்ளது. அதனாலேயே இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
எனவே அரச சேவைக்குச் சேர்த்துக் கொள்ளும் வயதெல்லையை 45 வயதாக உயர்த்த வேண்டும். 35 வயதைக் கடந்துள்ள பட்டதாரிகளின் சேவையை நிரந்தரமாக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-22)






இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தினம் நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடை பெற்ற போது, இலங்கைக்கான இந்தியத் தூதர் வை.கே சிங்கா இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

# வாக்காளர் அட்டை 27இல் விநியோகம்

கொழும்பு.ஓக.16
வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது. தபால் மூல வாக்களிப்பின் போது வாக்குச் சீட்டுகளையும் அதே நாளில் தபாலில் சேகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.
வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று தேர்தல்கள் செயலக ஆலோசகர் டபிள்யூ.பி.சுமனசிறி தெரிவித்தார். (ச)

# தெற்கு அதிவேக பாதையில் வேகக் கட்டுப்பாட்டு சட்டம்

## 24 மணி நேரமும் பொலிஸார் சேவையில்




கொழும்பு. ஓக. 16
தெற்கு அதிவேகப் பெருந்தெரு மார்க்கத்தில் மணிக்கு 100 கிலோமீற்றர்கள் என்ற வேகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்தும் நடைமுறையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
அதற்கமைய கடந்த 9 ஆம் திகதியில் இருந்து 11 ஆம் திகதி வரை வேகக் கட்டுப்பாட்டை மீறியுள்ள சாரதிகள் 150 பேருக்கு அபராதச் சிட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதிவேக மார்க்கத்தில் வேகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறும் சாரதிகளைக் கண்காணிக்க பொலிஸ் உத்தியோகத்தர்கள் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
அதனால் வேகக் கட்டுப்பாட்டை மீறிப் பயணிக்கும் வாகனங்கள் வேகமாணிகள் மூலம் இனங்காணப்பட்டு அந்த வாகன இலக்கங்கள் உடனடியாக பொலிஸ் கண்காணிப்பு கூடத்துக்கு அறிவிக்கப்படும்.
அதனையடுத்து குறிப்பிட்ட வாகனம் பொலிஸ் கண்காணிப்பு கூடம் அமைந்துள்ள இடத்தை நெருங்கும்போது தடுத்து நிறுத்தப்பட்டு வாகனச் சாரதியின் அனுமதிப் பத்திரம் பொலிஸாரால் கைப்பற்றப்படும். அத்தோடு அபராதச் சிட்டை சாரதிக்கு வழங்கப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.
இந்த மார்க்கத்தில் அதிக வேகத்தில் வாகனங்கள் செலுத்தப்படுவதால் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அதனைக் கருத்தில் கொண்டே வேகக் கட்டுப்பாட்டுச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று அவர் கூறினார். (ச-22)

# பணம் கொடுத்து கைதிகளை வெளியில் எடுக்கும் வேட்பாளர்

## நன்றிக் கடனாக பிரசார நடவடிக்கையில்

கொழும்பு. ஓக.16
அபராதத் தொகைகளைச் செலுத்த இயலாத நிலையில் சிறைவாசம் அனுபவித்து வரும் நபர்களை விடுவித்துக் கொள்ளும் செயற்றிட்டத்தை அரச தரப்பிலிருந்து மாகாண சபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆரம்பித்துள்ளனர்.
இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் கேகாலை, வாரியப்பொல மற்றும் கண்டி ஆகிய சிறைச் சாலைகளில் உள்ள 25 பேருக்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் அவர்களால் விடுவித்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
இந்தக் கைதிகளை விடுவித்துக் கொள்வது தொடர்பாகத் தேவைப்படும் பணத் தொகைகள் வேட்பாளர்களால் கைதிகளின் குடும்பத்தவர்களிடம் கையளிக்கப்பட்டே, அவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.
கைதிகளுக்காக 10.000 ரூபாவிலிருந்து ஒரு லட்சம் ரூபா வரையில் சம்பந்தப்பட்ட கைதிகளின் குடும்பங்களுக்கு வேட்பாளர்களால் வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு விடுதலை பெற்றுள்ள அனைவரும் அவர்களது விடுதலைக்குப் பணம் கொடுத்து உதவி புரிந்துள்ள வேட்பாளர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் முகமாக தற்போது அவர்களது தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
களவுகள், தாக்குதல் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த நபர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)


# ஆஸி.செல்வோரை தடுக்க ரோந்து சேவைகள்



கொழும்பு. ஓக.16
தென்பகுதிக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லும் தரப்பினரை சட்டத்தின் பிடிக்குள் அகப்படுத்திக் கொள்ள தெற்குக் கடல் பிராந்தியத்தில் கடற்படைப் படகுகளின் இறுக்கமான ரோந்துச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
இந்தத் தகவலை ருஹுணு கடற்படை முகாமின் அதிகாரி ஒருவர் 'மவ்பிம' சிங்களப் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களில் இருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிக்கும் தரப்பினர் தெற்குக் கடல் பிராந்தியத்தையே பயன்படுத்திவருகின்றனர்.
அதனால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

# இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களை கைப்பற்றுக


## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவு



கொழும்பு, ஓக 16
மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெறும் வடமேல், மத்திய மற்றும் வட மாகாண பிரதேசங் களில் இலக்கத் தகடுகள் இல் லாது பயணிக்கும் வாகனங் களை திடீர் வீதி தடை களைப் போட்டு கைப்பற்று மாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன அந்தந்தப் பிரதே சங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.
சில குழுக்கள் வன்முறை ஒன்றை உருவகப்படுத்தி பொய்ப் பிரசாரங்களை மேற்கொள் வதற்கு முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன என்று அவர் கூறினார்.
பொய்வதந்திகளைப் பரப்பி செயற்படும் நபர்கள் சம்பந்தமாக விழிப்புடன் இருக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# நுரைச்சோலை மின் நிலையத்தில் மீண்டும் தொழில்நுட்பக் கோளாறு

## நாளொன்றுக்கு ரூ.40 மில்லியன் நட்டம்



கொழும்பு. ஓக.16
நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தில் மீண்டும் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.
அதன் காரணமாக அதன் நாளாந்த மின் உற்பத்தி 120 மெகா வோல்ற்றால் கீழிறங்கியுள்ளது என்று இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தின்றன.
இதன் காரணமாக கடந்த ஜூலை 27 ஆம் திகதியில் இருந்து இதுவரை இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 40 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.
அதற்கமைய நாளாந்தம் நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் 270 மெகாவோல்ற் அளவான மின் உற்பத்தியில் தற்போது 150 மெகா வோல்ற் மின்சாரமே உற்பத்தியாகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த மின் உற்பத்தி நிலையத்தில் தொழில்நுட்பக் கோளாறு 20 ஆவது தடவையாக ஏற்பட்டுள்ளது.
நீர்மின் உற்பத்தி உச்ச அளவில் மேற்கொள்ளப்படுவதால், நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திலிருந்து உச்சமின் உற்பத்தி அவசியப்படாது என்று மின்சார சபையின் தலைவர் ட[illegible] பூ. டிகனேகல தெரிவித்தா[illegible] (ச-22)

# எரிபொருள் நிலையங்களை 24 மணி நேரம் திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஒக. 16

யாழ். குடாநாட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான முக்கிய எரிபொருள் விற்பனை நிலையங்களை 24 மணிநேரமும் திறந்து சேவையாற்றுவதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் விற்பனை நிலையங்களின் இரவு நேரப் பாதுகாப்பு மற்றும் வியாபார நடவடிக்கைகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்காக நிலையங்களை 24 மணிநேரமும் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இவ்வாறு 24 மணி நேரமும் விற்பனை நிலையங்கள் திறப்பதன் மூலம் திருட்டுச் சம்பங்களைத் தடுக்கக் கூடியதாக இருப்பதுடன் சங்கங்களின் வியாபார நடவடிக்கை களையும் அதிகரிக்க முடியும்.

குறிப்பாக கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் விற்பனை நிலையங்களை 24 மணி நேரமும் திறப்பதற்கு கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (த-17)



இந்தியாவின் 67 ஆவது சுதந்திரதினக் கொண்டாங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திலும் நடைபெற்றன. துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் உரையாற்றுகிறார்.

# நவியை ஏமாற்ற அரசு கபட நாடகம்

## காணாமல்போனோர் விசாரணை

## ஆணைக்குழு நியமனம் குறித்து ஐ.தே.க. காட்டம்

கொழும்பு, ஒக. 16

"பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், நவநீதம்பிள்ளை ஆகியோரை ஏமாற்றுவதற்கான அரசின் கபட நாடகமே காணாமற்போனோர் குறித்தான விசாரணை ஆணைக் குழு நியமனம்."



இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் ஐ.தே.கவின் சிரேஷ்ட உப தலைவரும், கண்டிமாவட்டஎம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல. யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசா ரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக் குழு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இது விடயம் சம்பந்தமாக நல்லிணக்க ஆணைக் குழுவும் சிபாரிசுகளை முன் வைத்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த முன்வ ராத அரசு இந்தக் குழுவின் மூலம் எதைச் சாதிக்கப் போகின்றது? மகஸின் சிறைச்சாலைத் தாக்குதல் தொடர்பிலான ஆணைக் குழு, ரொஷான் சானக்க தொடர்பிலான ஆணைக்குழு ஆகியவற்றுக்கு என்ன நடந்துள்ளது? இதற்கு முன்னரும் அரசு ஆணைக் குழுக்களை நியமித்தது. ஆனால் அவற்றால் எதுவும் நடைபெறவில்லை" - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, பொதுநலவாய மாநாடு, மனித உரிமை ஆணையாளரின் இலங்கை வருகை ஆகியன இடம்பெற்றுள்ள நிலையில், அரசின் இத்தகைய தொரு செயல் ஏமாற்றுவித்தையாகும் என்றே கூறவேண்டும்" எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

# யுவதியின் தங்கச்சங்கிலி பறிபோனது

வீட்டுக் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த யுவதியிடமிருந்து பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி ஒன்றை அபகரித்தனர் திருடர்கள்.

இந்தச் சம்பவம் உடுப்பிட்டியில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுக் கேற்றினூடாக உள்ளே நுழைந்த திருடன் ஒருவன் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த யுவதியை இழுத்து விழுத்தி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு வீதியில் மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்தவருடன் ஏறித்தப்பி விட்டார் என்று முறைப்பாடில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் சாவு

கிளிநொச்சி.ஒக. 16

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த குணசீலன் டினோஜன் (வயது -7) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

வீட்டுக்கு அருகில் இருந்த கிணற்றுக்கு காலை முகம் கழுவச்சென்ற சிறுவன் தவறி வீழ்ந்ததாகவும் உடனடியாக அவனை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் இடைவழியில் உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மரண விசாரணைகளின் பின்னர் சிறுவனது உடல் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-426)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வாக்காளர் விவரம் எதனையும் படைகளுக்கு வழங்க வேண்டாம்

முன்தினம் இடம்பெற்றது. இதில் கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர். கரைதுறைப்பற்றில் கிராம அலுவலர்களிடம் செல்லும் படையினர் அப்பகுதி வாக்காளர் எண்ணிக்கை, அவர்களின் குடும்ப விவரம் உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு நிர்ப்பந்திப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் 'கபே' அமைப்பினால் தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. படையினர் கிராம அலுவலர்களை நிர்ப்பந்திப்பதால் அவர்கள் வாக்காளர் தொடர்பான விவரங்களை வழங்க வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் நடந்த கலந்துரையாடலின் போது, அவ்வாறான விவரங்களை எதனையும் கிராம அலுவலர்கள் படையினருக்கு வழங்க வேண்டாம் என்றும் அப்படி ஏதாவது சம்பவம் நடந்தால் அதுகுறித்து தனக்கு அறிவிக்குமாறும் உதவித் தேர்தல் ஆணையாளர் பணித்துள்ளார். (த-4)

## மரண அறிவித்தல்



### ஜேக்கப் அன்ரன் (லோகதாஸ்)

செம்பியன்பற்று வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜேக்கப் அன்ரன் (14.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதித்திருப்பலி இன்று (16.08.2013) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பிலிப்பு நேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

(35223) (16,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து கோபாலகிருஷ்ணன்

(தாவடி துர்க்கா வெல்டிங் உரிமையாளரும் புதுக்குடியிருப்பு அகத்தியன் இரும்புத் தொழிற்சாலை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கோபாலகிருஷ்ணன் (15.08.2013) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குட்சைட் றோட்,
கோண்டாவில்.

(31397)

தகவல்:
குடும்பத்தினர்.

# லக்ஸபான மின்சாரம் இன்று சுன்னாகத்துக்கு

குப் பரீட்சார்த்தமாக வழங்கப்படுகிறது. வடமாகாணம் இது வரை நாட்டின் ஏனைய பகுதிகளுக் கான மின்மார்க்க வலைப் பின்னலுடன் இணைக்கப் பட்டிருக்கவில்லை. 132 கிலோவோல்ட் மின்சாரம் கிளிநொச்சியிலிருந்து சுன்னாகத்துக்கு வழங்கப் படுவதன் மூலம் வடமாகாணமும் தேசிய மின் மார்க்கத்தினுள் இணைக்கப்பட்டு 24 மணி நேரம் மின்சாரத்தை பெறவுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள பிரதான மின் நிலையத்திலிருந்து புதுக்காடு ஊடாக குடாநாட்டின் சில பகுதிகளுக்கு தற்போது லக்ஸபான மின்சாரம் வழங்கப் படுகிறது. 33 கிலோ வோல்ட் மின்சாரம் இவ்வாறு வழங்கப்படுகிறது.

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் , ஆனையிறவு, இயக்கச்சி, கோயில்வயல், சோரன்பற்று, மிருசுவில், எருவன், கொடிகாமம், வரணி, மந்துவில், சரசாலை, மட்டுவில், புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி, அச்செழு, போயிட்டி, நீர்வேலி, ஊரெழு ஊடாக சுன்னாகம் மின்நிலையத்துக்கு இந்த அதியுயர் மின்மார்க்கம் ஊடாக மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இத்தகைய மின்மார்க்க கோபுரங்களை அண்மித்துள்ளவர்கள் கோபுரங்களிலிருந்து விலகி அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (த-4)

# தம்புள்ளையில் பத்திரகாளி கோவிலை அகற்ற முயற்சி

இந்த நிலையிலேயே தற்போது குறித்த கோயிலை அகற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்தக் கோயிலைச் சுற்றி வாழ்ந்து வந்த 25 அப்பாவி தமிழ்க் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டு அவர் களை அங்கிருந்து அகற்றியுள்ளனர்.

இதனால் அவர்கள் தற்போது நிரந்தர வசிப்பிடமின்றி நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர். தாங்கள் தற்போது தற்காலிகமாகத் தங்கியுள்ள பகு தியிலிருந்து பூசை வழிபாட்டுக்காக இந்தக் கோயிலை நாடிவருகின்றனர்.

சிறுபான்மை மக்கள் இன்று தமது மத வழிபாடுகளைக் கூடச் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத ஒரு நிலைக்கு தள் ளப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழலை அகற்றி தமது பிர தே சங்களில் சுதந்திரமாக மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சூழலை அமைத்துக்கொடுப்பது அரசின் கடப் பாடாகும்-என்றார். (த)

# யாழ்.மாநகர சபையின் பதவிக் காலம் நீடிப்பு

பதவிக்காலம் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஓகஸ்ட 31 ஆம் திகதி வரை அது நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அறிவித்துள்ளார். இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த ஜூலை 29 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இது குறித்து யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அது குறித்து கடிதம் எதுவும் தமக்குக் கிடைக்க வில்லை என்று அவர் கூறினார். (த-7-14)

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளராகக் கடமையாற்றும்
திரு.இராயப்பு அன்ரனி
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
### டெனிஸ் இராயப்பு
அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்ினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(சி/11182)

## மரண அறிவித்தல்



### சிவசுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி

(கட்டட ஒப்பந்தகாரர்)

வட்டு. வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி நேற்று (15.08.2013) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2013) அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

(31398)

தகவல்: குடும்பத்தினர்.

## கரப்பந்து போட்டிகள் சனியன்று

யாழ்ப்பாணம், ஓக.16
பிரித்தானியா தமிழ் விளையாட்டு சங்கத்தின் ஆதரவில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தால் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.
யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்களை யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் மனோகரனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டள்ளது. (ற-86)

## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், ஓக.16
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்துக்கும், மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் கிரிக்கெட் தொடர்


# உதயசூரியன் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக.16
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் '20/20' மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்லை விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில், சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.
அதில் வரின்ரன் 43 ஓட்டங்களையும், அஜந்தன் 19 ஓட்டங்களையும், நிரோ 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் வல்லை விளையாட்டுக் கழக அணி சார்பில் றஜித், ஜெகன், சயந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கபிலன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
126 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்லை விளையாட்டுக் கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.
அதில் றஜத் 16 ஓட்டங்களை யும், தீபன் 20 ஓட்டங்களையும், றஞ்சன் 10 ஓட்டங்களை யும் வல்லை அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி சார்பாக சாந்தன் 4 இலக்குகளையும், அனுகாந்தன் 3 இலக்குகளையும், வரின்ரன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தொடரின் இறுதியாட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும், கொக்குவில் ஏபி அணியும் மோதவுள்ளன. (ற-23)

## நியூ ஸ்ரார் '20/20' கிரிக்கெட் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஓக.16
கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் பிறிமியர் லீக் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது.
4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படும் ஆட்டங்களில், 1 ஆம், 2ஆம் சுற்றுக்கள் லீக் முறையில் நடத்தப்படும். 4 பிரிவுகளிலும் அதிக புள்ளிகளைப் பெறும் இரு அணிகள் காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## பயிற்சி முகாம்.....



யாழ்ப்பாணம், ஓக.16
2018 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் போட்டிக்காக கனிஷ்ட வீரர்களை தெரிவு செய்து பயிற்சியளிப்பதற்கான வடமாகாண வீராகளுக்கான பயிற்சி முகாம் நேற்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 வீரர்கள் இந்த பயிற்சி முகாமில் பங்கு கொண்டனர். அவர்களுக்கான பயிற்சிகளை இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீராங்கனையும் விளையாட்டுத் துறை அமைச்சரின் ஆலோசகருமான சுசந்திக்க ஜெயசிங்க மற்றும் எதிர்வீரசிங்கம் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.
இந்தப் பயிற்சி முகாம் இன்றும் காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளது. (ற-23)

## சம்பூர் ஸ்ரீ கணேசா சம்பியனாகத் தெரிவு



திருகோணமலை, ஓக.16
சம்பூர் ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட நான்கு பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில், சம்பூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.
சுமார் 70க்கும் அதிகமான விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இந்தத் தொடரில் இரண்டாம் இடத்தை சந்தோசபுரம் ஒளி ஒளி விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தினை தம்பலகாமம் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.
மூதூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் பு.காளிராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு நிகழ்வுகளுக்கு அதிதிகளாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன், சேனையூர் வர்ணகுல விநாயகர் ஆலயத்தின தலைவரும், கட்டைபறிச்சான் வடக்கு கிராம உத்தியோகத்தருமான க.செல்வரெத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-40)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக.16
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் நெடிய காடு இளைஞர் விளையாட்டுக் கழகம். (ற-23)

ஞானம்ஸ் மென்பந்து தொடர்

# இறுதியாட்டங்கள் எதிர்வரும் சனியன்று



பருத்தித்துறை, ஓக.16
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 6 பேர் பங்குபற்றும் மென்பந்து கிரிக்கெட் மற்றும் 10 பந்துபரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறவுள்ளன.
முதலில் இடம்பெறவுள்ள 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரின் இறுதியாட்டத்தில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணியும், வதிரி ஞான வைரவர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.
தொடர்ந்து இடம்பெறும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஜங்கரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெற்கொழு விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.
இந்த இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை ஞானாசாரியார் பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.சிற்றம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். (ற-34)

கரவெட்டி ஜங்கரா





## ஸ்கொட்லாந்துக்கு ஆதரவாக திரண்ட ரசிகர்கள்



இங்கிலாந்துக்கும் ஸ்கொட்லாத்துக்கும் இடையே நடைபெற்ற நட்பு உதைபந்தாட்டத்தில் பெருந்தொகையான ஸ்கொட்லாந்து அணியின் ரசிகர்கள் திரண்டதால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது இங்கிலாந்துப் பொலிஸார் திக்குமுக்காடினர்.
இங்கிலாந்து உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 150ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, வெம்ப்லி மைதானத்தில் இங்கிலாந்து- ஸ்கொட்லாந்து அணிகள் மோதும் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.
இந்தப் போட்டியை கண்டு களிப்பதற்காக ஸ்கொட்லாந்து அணியின் ரசிகர்கள் டிராபல்கர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திண்டாடினர்.
எப்போதும் உலக கிண்ண மற்றும் ஐரோப்பிய உதைபந்துப் போட்டிகளுக்கு தான் இந்த அளவிற்கு ரசிகர்கள் கூட்டம் அலை மோதும். ஆனால் இந்த ஆட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக திரண்ட ஸ்கொட்லாந்து ரசிகர்கள் தங்களது அணிக்கு ஆதரவாக முழக்கமிட்டனர்.
இங்கிலாந்து அணிக்கு எதிராக ஸ்கொட்லாந்து அணி 110 போட்டிகளில் விளையாடி உள்ளது. இங்கிலாந்தின் ஆட்சியின் கீழ் உள்ள ஸ்கொட்லாந்து தனி நாடாகப் பிரிவதற்கான வாக்கெடுப்பு அடுத்தாண்டு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

## அணியிலிருந்து வெளியேறினார் இம்ரான் பர்ஹத்



சிம்பாப்வேக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் இருந்து இம்ரான் பர்ஹத் வெளியேறியுள்ளார். தனிப்பட்ட காரணங்களாலேயே அவர் அணியில் இருந்து வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த டெஸ்ட் அணியில் எதிர்பார்க்கப்பட்ட வீரர்களான உமர் அக்மல், நசீர் ஜம்ஷெத் ஆகியோரை முந்திக் கொண்டு இம்ரான் பர்ஹத் சேர்க்கப்பட்டிருந்தார்.
எனினும் தற்போது தனிப்பட்ட காரணங்களைக் காட்டி இம்ரான் பர்ஹத் அணியிலிருந்து விலகியுள்ளார். அவரதுமனைவியின் உடல்நிலை காரணமாகவே அவர் இக்குழாமிலிருந்து விலகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.
அதையடுத்து இம்ரான் பர்ஹத்திற்குப் பதிலாக 23 வயதான இளம் வீரர் ஷான் மசூட் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# சமநிலையில் முடிந்தது மகளிர் ஆஷஷ் தொடர்






இங்கிலாந்தில் இடம்பெற்ற இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மகளிர் ஆஷஷ் டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. 4 ஆம் நாள் ஆட்டத்தில் இரு அணிகளும் போராட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி, தோல்வியற்ற முடிவைப் பெற்றுள்ளனர்.

சேர் போல் கெற்றி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சாரா எலியற்றின் 104 ஓட்டங்கள், அலெக்ஸ் பிளெக்வெல்லின் 54 ஓட்டங்கள், ஜெஸ் கமரனின் 50 ஓட்டங்கள், மெக் லெனிங்கின் 48 ஓட்டங்கள் மற்றும் எலைஸ் பெரியின் ஆட்டமிழக்காத 31 ஓட்டங்களின் துணையோடு 6 இலக்குகளை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக லாரா மார்ஷ், அனியா ஷ்ரப்சோல் இருவரும் தலா 2 இலக்குகளையும், கத்தரின் பிரின்டில் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஹீதர் நைற் இன் 157 ஓட்டங்கள், லாரா மார்ஷின் 55 ஓட்டங்கள், சாரா ரெய்லரின் 33 ஓட்டங்களின் துணையோடு சகல இலக்குகளையும் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எரின் ஒஸ்போர்ண் 4 இலக்குகளையும், ஹொலி பேர்லிங் 2 இலக்குகளையும், எலைஸ் பெரி, மேகன் ஸ்கட், சாரா கொய்ற் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

17 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய ஆஸ்திரேலிய அணி ஜோடி பீல்ட்ஸின் ஆட்டமிழக்காத 78 ஓட்டங்கள், மெக் லெனிங்கின் 36 ஓட்டங்களின் துணையோடு 5 இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணிக்கு 249 ஓட்டங்களை வெற்றி இலக்காக வழங்கியது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜெனி கண் 2 இலக்குகளையும், அனியா ஷ்ரப்சோல், லாரா மார்ஷ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் முடிவுக்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக சாரா ரெய்லர் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும், சார்லட் எட்வேர்ட்ஸ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும், அர்றன் பிரின்டில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக சாரா எலியற் ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

ஆட்ட நாயகியாக இங்கிலாந்து அணியின் ஹீதர் நைற் தெரிவானார்.(ற)




# கரீபியன் பிறிமீயர் லீக்கில் இணைகிறார் மஹேல

இடம்பெற்றுவரும் கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாகப் பங்குபற்றுவதற்காக மஹேல ஜெயவர்த்தன மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிப் பயண-மாகவுள்ளார்.

திடீரெனக் கிடைக்கப்பெற்ற அழைப்பின் காரணமாக இத் தொடரில் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக அந்தத் தொடரில் பங்குபற்றவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணியின் வெளிநாட்டு வீரராக ஏற்கனவே இணைந்திருந்த ஆரொன் பின்ச் தொடரில் இருந்து விலகிய பின்னர் மஹேல ஜெய-வர்தன அந்தஅணியில்இணைக்-கப்பட்டுள்ளார்.

ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பில் றொஸ் ரெய்லர், கெவின் ஓபிரையன், டேவிஜேக்-கப்ஸ் ஆகியோருடன், நான்காவது வெளிநாட்டு வீரராக மஹேல ஜெயவர்தன இணைய-வுள்ளார்.

ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ இத்தொடரின் முதல் 3 ஆட்டங்களில் தோல்வியடைந்த பின்னர், அடுத்த 2 ஆட்டங்களிலும் வெற்றிகொண்டிருந்தது. எனினும் 6 அணிகள் பங்கு கொள்ளும் இத்தொடரில் புள்ளிகளின் பட்டியலில் 5ஆவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இலங்கை - பாக். இடையே பகலிரவு டெஸ்ட் ஆட்டம்




முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. டிசெம்பர் இறுதியில் ஆரம்பிக்கவுள்ள இரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் ஓர் ஆட்டத்தை பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளதையடுத்தே இதற்கான வாய்ப்புக்கள் எழுந்துள்ளன.

பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை கடந்தாண்டு அனுமதி வழங்கியிருந்தது. அதையடுத்தே தற்போது இந்தத் தொடரில் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்துவதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விருப்பம் வெளியிட்டு, அது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையிடம் கலந்துரையாடியுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை அதற்கு சம்மதம் தெரிவித்தால் இத்தொடரில் ஒரு டெஸ்ட் ஆட்டம் பகலிரவு ஆட்டமாக இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளுக்குமிடையில் எந்த வகையான பந்தைப் பயன்படுத்துவது, எந்த நிறத்தினாலான பந்தைப் பயன்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை இதுவரை தங்களுக்குள் நடாத்தியிருக்கவில்லை எனத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஜெயந்த தர்மதாச, மிகப்பெரியளவு தடைகள் ஏற்பட்டாலன்றி பகலிரவு ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கை உதைபந்தாட்ட அணி பயிற்சியாட்டத்தில் வெற்றி

அடுத்த மாதம் நேபாளத்தில் இடம்பெறவுள்ள தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளன சம்பியன் கிண்ணப் போட்டிகளுக்கான முதலாவது பயிற்சிப் போட்டி யில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. கஸ்ரம் ஸ்யுனைட்டட் விளையாட்டுக் கழகத்தையே இலங்கை அணி வெற்றிகொண்டது.

பயிற்சி ஆட்டங்களுக்காக தாய்லாந்திற்குச் சென்றுள்ள இலங்கை அணி, பாங்கொக் கில் வைத்து இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதற்பாதியில் இரு அணிகள் சார்பாகவும் எந்தவிதக்கோல்களும்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. இரண்டாவது பாதியில் இலங்கை அணியின் உப தலைவர் சுத்தர குணரத்ன முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்து இலங்கைக்கு முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார்.

இலங்கை அணி 1:0 என்ற முன்னிலையைப் பெற்ற பின்னர், மொஹமட் சமீர் மற்றொரு கோலைப் பெற்றுக் கொடுக்க, இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றது.

அடுத்த பயிற்சியாட்டத்தில் இலங்கை அணி தாய்லாந்து இராணுவ அணியுடனும், அதற்கடுத்த போட்டியில் தாய்லாந்தின் 21 வயதிற்குட்பட்ட தேசிய அணியுடனும் மோதவுள்ளது. (ற)

# ஆஸ்திரேலியாவை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்தியா



தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுவந்த ஆஸ்திரேலிய, இந்திய, தென்னாபிரிக்க 'ஏ' அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் தொடரில் இந்திய 'ஏ' அணி சம்பியனாகத் தெரிவாகியது. இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய 'ஏ' அணியை வீழ்த்தியே இந்திய அணி சம்பியனாகத் தெரிவாகியது.

எல்.சி. டீ வில்லியர்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய 'ஏ' அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய 'ஏ' அணி 49.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

2 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி சார்பாக 3 ஆவது இலக்குக்காக ஷீகர் தவான், டினேஷ் கார்த்திக் இருவரும் 108 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். எனினும் 3ஆவது இலக்காக ஷீகர் தவான் ஆட்டமிழந்த பின்னர் இந்திய 'ஏ' அணி இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய 'ஏ' அணி சார்பாக டினேஷ் கார்த்திக் 75 பந்துகளில் 73 ஓட்டங்களையும், ஷீகர் தவான் 65 பந்துகளில் 62 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு 49 பந்துகளில் 34 ஓட்டங்களையும், ரிதிமான் சகா 41 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய 'ஏ' அணி சார்பாக ஜோஸ் ஹேஷல்வூட், நேதன் கோர்ட்டர் நீல் இருவரும் தலா 3 இலக்குகளையும், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 2 இலக்குகளையும், கிளென் மக்ஸ்வெல், மிற்சல் மார்ஷ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

244 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய 'ஏ' அணி 46.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 193 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

2 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவ்வணி, அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து, 8 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களுடன் தடுமாறியது. இறுதியில் ஓட்டங்கள் குவிக்கப்பட்ட போதிலும் அவ்வணியால் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாது போனது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய 'ஏ' அணி சார்பாக ரிம் பெய்ன் 76 பந்துகளில் 47 ஓட்டங்களையும், ஜோஸ் ஹேஷல்வூட் 44 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய 'ஏ' அணி சார்பாக சபாஷ் நதீம் 3 இலக்குகளையும், மொஹமட் ஷமி 2 இலக்குகளையும், சுரேஷ் ரெய்னா, ஈஷ்வர் பாண்டே, பர்வீஸ் ரசூல் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற)



# உத்துரவுக்கு ஆறுதல் வெற்றி

இலங்கையின் உள்ளூர் '20/20' தொடரின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உத்துர அணி ஆறுதல் வெற்றிபெற்றது. கந்துரட்ட அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் உத்துர அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இறுதியாட்டத்துக்கு கந்துரட்ட, பஸ்னாகிர அணிகள் ஏற்கனவே தகுதிபெற்றிருந்த நிலையில் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உத்துர அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய உத்துர அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்து இலக்குகளை சீரான இடைவெளியில் இழந்த அவ்வணி, 8.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. எனினும் அணித்தலைவர் டினேஷ் சந்திமால் சிறப்பாக ஆடி அவ்வணிக்கு சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் உத்துர அணி சார்பாக டினேஷ் சந்திமால் 57 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களையும், ஜீவன் மெண்டிஸ் 23 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கந்துரட்ட அணி சார்பாக தம்மிக்க பிரசாத், அஜந்த மெண்டிஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், கௌஷல்ய லொக்குவாராய்ச்சி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

159 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கந்துரட்ட அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்கை 3 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 7.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கு இழப்பிற்கு 60 ஓட்டங்களுடனும், 10.2 பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகள் இழப்பிற்கு 80 ஓட்டங்களுடன் காணப்பட்டது. எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாகப் பிரகாசிக்கத் தவறியதால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் கந்துரட்ட அணி சார்பாக திலின கண்டம்பி 54 பந்துகளில் 90 ஓட்டங்களையும், பபசர வடுகே 20 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் இரட்டை ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

பந்துவீச்சில் உத்துர அணி சார்பாக றமித் றம்புக்வெல 2 இலக்குகளையும், சத்துரங்க பீரிஸ், ஷமின்ட எரங்க, திஸர பெரேரா, மதுஷங்க ஏக்கநாயக்க, அலங்கா அசங்க சில்வா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற)

hp pavilion-i5E
I5-3230m 3rd, 4Gb Ram, 750Gb HDD, 15.6' LED, DOS. Rs82,500/=
hp pavilion g6-2230TU
I3-3110M 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED, Dos Rs63,800/=
hp 1000-1311TU
D.core 3rd, 2Gb Ram, 500Gb HDD, 14.0' LED Dos. Rs51,500/=
hp 242 G1
I3 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED F.Print, Dos. Rs71,000/=
FREE Anti virus for 1Year FREE Headphone FREE Mouse FREE Lap Bag
Dell inspirion-3521
I3-3227 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED Win-8 Original Rs72,000/=
Dell inspirion-3521
I5-3337 3rd, 4Gb Ram, 750Gb HDD, 15.6' LED 2Gb VGA, Dos Rs83,500/=
Dell inspirion-3521
I3-3227 3rd, 4Gb Ram, 500Gb HDD, 15.6' LED Dos Rs63,800/=
Toshiba satellite-C850
I3 3rd, 2Gb Ram, 500Gb HDD, 15.6' LED Dos. Rs59,500/=
Special offer HP Laserjet 1102 Printer - Rs 12900/=
Authorised Business Partner
NALIN Information Technologies
195/4 Parameswara Junction, Palaly Road, Thirunelvely
Phone- 0212221121/1166 0777667975
NALIN City Showroom
116G KKS Road, Chunnakam
Phone- 0212242222 0777140431

லண்டன் செல்லும் பயணிகளுக்கு
யாழ் மக்களுக்காக 24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்
கொழும்பு - லண்டன் Colombo-London RTN 11050/=
HNB Special Offer for Credit Card holders
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
0214 920 920

வாகனம் வாடகைக்குண்டு
டாட்டா சுப்பர் ஏஸ் (A/C), Original அலுமினிய Body யுடன் வாடகைக்குண்டு
T.P:077 077 6725
(31394) (16,16)

வீடு வாடகைக்குண்டு
இல. 05, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் (வலம்புரி நிறுவனத்துக்கு அருகில்) சகல வசதியும் கொண்ட புதியவீடு வாடகைக் குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: ச.சிவசோதி - 077 379 6373

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.